மக்களாட்சி

இளைய பாரத நூலகம்

மக்களாட்சி

80 வினாக்களும் விடைகளும்

டேவிட் பீதம், கெவின் பாய்லே

முன்னுரை: நிகில் சக்கரவர்த்தி

கேலிச்சித்திரங்கள் : ஆர்.கே.லக்ஷ்மண்

தமிழாக்கம்: கண்ணையன் தட்சிணாமூர்த்தி

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
யுனெஸ்கோ பதிப்பகத்தின் கூட்டுமுயற்சியுடன்

இந்தப்புத்தகம் சுற்றுச் சூழல் தோழமை கொண்ட
மறுசுழற்சிக் காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது

யுனெஸ்கோவின் உரிமம் பெற்ற இந்திய மறுபதிப்பு

ISBN 81-237-2028-9


முதற்பதிப்பு 1997 (சக 1918)

Democracy, 80 Questions and Answers (*Tamil*)
ரூ 27.00
வெளியீடு : இயக்குநர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
ஏ-5, கிரீன் பார்க், புதுதில்லி-110016

மக்களாட்சியைப் பற்றியும் மனித உரிமைகளைப் பற்றியும் கல்வியறிவைப் பரப்பும் யுனெஸ்கோவின் திட்டத்தின் ஓர் அங்கமாக இந்நூல் எழுதுவிக்கப் பெற்றது. ஒரே சமயத்தில் பல மொழிகளில் இந்நூல் வெளியாகிறது.

இந்நூலில் கையாளப்பட்டுள்ள பதவிப் பெயர்களும் பிற தகவல்களும் எந்த ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் அல்லது அதிகார அமைப்புகளின் சட்டப்பூர்வமான அந்தஸ்தையோ, அவற்றின் எல்லை வரம்புகளையோ பற்றிய யுனெஸ்கோ செயலகத்தின் கருத்துக்களை எந்தவிதத்திலும் குறிப்பிடுவதாகாது.

இந்நூலில் சொல்லபபட்டுள்ள விவரங்களைத் தெரிவு செய்த முறைக்கும், அவறறை விளக்கியுள்ள விதத்திற்கும், கூறப்பட்டுள்ள கருத்துக்களுக்கும் நூலாசிரியர்களே பொறுப்பாவர் அவை யுனெஸ்கோவின் கருத்துக்களாகாது என்பதுடன், அவற்றுக்கு இவ்வமைப்பு பொறுப்பேதும் ஏற்காது.



மக்களாட்சியில், தனது தலைவன் யார் என்பதை, சிறிய மனிதன்
தானே தீர்மானிக்கிறான்

உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம்

பிரிவு 21

1. ஒவ்வொருவருக்கும் தன நாட்டின் அரசாங்கத்தில் நேரிடையாகவோ, தோந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் மூலமோ பங்கெடுத்துக் கொள்ள உரிமை உண்டு

2. ஒவ்வொருவருக்கும் தன் நாட்டில் பொதுப்பதவிகளை வகிப்பதற்குப் போட்டியிட சம உரிமை உண்டு

3. மககளின விருபபமே அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு அடிப்படையாக இருக்க வேண்டும். மக்களின் இநத விருப்பம், குறிப்பிடட கால இடை வெளிகளில் நடைபெறும் முறையான தேர்தல்கள மூலம் வெளிப்பட வேண்டும். அந்தத் தேர்தல்கள அனைவருக்கும் வாக்குரிமை அளிப்பதாக இருப்பதுடன், ரகசிய வாக்குப்பதிவு அல்லது அது போன்ற சுதந்திரமான வாக்களிக்கும் முறைகளில் நடத்தப்படவும் வேண்டும்.

உள்ளடக்கம்

முன்னுரை

குடிமைச் சமூகத்தை நிர்வகிக்கும் சீரிய முறையான மக்களாட்சி முறை, ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியை உடையது. இந்தியா வின் தொடக்க காலக் குடியரசுகளையும், ஐரோப்பிய நாடுகளின் மக்களாட்சி அமைப்புகளையும் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைப் பார்க்கும்போது, சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்தொட்டே, ஏதேனும் ஒரு வகையான மக்களாட்சி அமைப்புகள் செயல்பட்டதை அறிய முடிகிறது

மனித சமூகத்தின் செயல்பாடுகள் எல்லாத் திசைகளிலும் ஆழ்ந்து விரிந்து செயல்படத்தொடங்கியபோது, மனிதனின் பார்வையும் விரிந்ததுடன், குடிமைச் சமூகத்தைக் கட்டமைக்க வேண்டிய தூண்டுதலின் விளைவாக, மனிதன் மக்களாட்சி அமைப்பின்பால் தள்ளப்பட்டான். மக்களாட்சியானது, முடிவெடுத் தலில் சாதாரணக் குடிமகனுக்குப் பரவலான வாய்ப்பு அளிப்பதுடன், அம்முடிவு களுக்குச் செயல்வடிவம் கொடுப்பதிலும் அவனுக்குப் பெரும் பங்களிக்கிறது மக்களாட்சி முறையின் பல்வேறு வளர்ச்சி நிலைகளிலும், மாறுபட்ட சூழல களிலும் இந்த நோக்கம் வெவ்வேறு அளவுகளில் உறுதிப்பட்டு வந்துள்ளது.

நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் மக்களாட்சியானது மாபெரும் தூண்டு விசையாகவே இருந்தது. இந்திய விடுதலைப் போராட்டம் ஆயுதமேந்திய ஒரு சிறு பிரிவினரால் நடத்தப்பட்டதன்று; மாறாக, இந்திய நாட்டின் சாதாரண குடிமகன் ஒவ்வொருவனும் உத்வேகத்துடன் கலந்து கொண்ட ஒரு போராட்ட மாகவே அது இருந்தது. அன்னிய ஆட்சியில் இருந்து நம் நாட்டிற்கு விடுதலை பெற வேண்டி மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து போராடியதால்தான், விடுதலை பெற்ற பின்னர் மக்களாட்சிக் குடியரசை நம்மால் அமைக்க முடிந்தது. வயதுற்றோர் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் அரசாங்கம் நடத்தும் முறையை விடுதலை பெற்ற உடனேயே அறிமுகப்படுத்திவிட்டோம். முன்னேறிய நாடுகள் பலவற்றிலும் இத்தகைய மக்க ளாட்சி முறையைச் செயல்படுத்துவதற்குப் பல பதிற்றாண்டுகள், நூறாண்டுகள் ஆயின.

நமது மக்களாட்சி அனுபவம் நமக்குப் பல பாடங்களைத் தந்துள்ளது. எடுத்துக்காட்டுக்கு ஒன்றைச் சொல்வதானால், வாக்களிக்கும் உரிமையினால் மட்டும் மக்களாட்சியின் பெரும்பான்மை ஆட்சிக்கு உத்தரவாதம் கிடைக்குமா? நமது அரசியலமைப்பில் விதிக்கப்பட்டுள்ள தேர்தல் முறைப்படி, ஒரு தொகுதி யில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றவரே வெற்றி பெற்றவராகிறார். ஆனால், அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வென்றவர் வாக்களித்தவர் களில் பெரும்பான்மையினர் ஆதரவைப் பெற்றிருக்கிறார் என்று பொருளாகாது. அத்துடன் வாக்களித்தவர்கள் அனைவரும் ஒரு தொகுதியின் பெரும்பான்மை யினராக இருக்க வேண்டிய அவசியமில்லை.

நமது தேர்தல் முறையில் உள்ள இதுபோன்ற இன்னும் பல குறைபாடுகள் பற்றி நாடெங்கிலும் தொடர்ந்து விவாதிக்கப்பட்டு வருகிறது. நமது மக்களாட்சி அமைப்பின் நேரடி அனுபவத்தினால் தேர்தல் சீர்திருத்தங்களின் தேவையை அனைவரும் உணர்ந்துள்ளனர். இதேபோல, தேர்தல் முறையில் உள்ள, மக்களாட்சி நெறிக்குக் குந்தகம் விளைவிக்கும் தேர்தல் செலவுகளும் கவலைதரும் விஷயமாகவே இருக்கிறது. இவ்வாறாக, நமது மக்களாட்சி முறையைச் செயல் படுத்துகின்றவர்களாலேயே இம்முறை தொடர்ந்து கூராய்வு செய்யப்பட்டு வருகிறது. இவை தவிர, நமது மக்களாட்சி அமைப்பின் பிற அம்சங்கள் குறித்தும் காரசாரமான விவாதங்கள் நடைபெறுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளை மக்கள் திரும்ப அழைத்துக் கொள்வதும் அதில் ஒன்றாகும். நமது மக்களாட்சி அமைப்பின் காவல் நாயாக நீதித்துறை முக்கியப் பங்காற்றி வருகிறது.

பல பரிமாணங்களைக் கொண்ட குடிமைச் சமூகத்தின் செயல்பாடுகள் விரிவடைந்ததையடுத்து மக்களாட்சி நெறியை விரிவாக்க வேண்டியதன் தேவை உணரப்பட்டது. எனவே பஞ்சாயத்து ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆட்சியமைப்பின் அடித்தளத்தில் மக்களாட்சி முறையை உறுதிப்படுத்தும் பஞ்சாயத்து ஆட்சி முறை நமது மக்களாட்சி வரலாற்றில் ஒரு மைல்கல் எனலாம். இப்பரந்த நாட்டின் மக்களாட்சிக் குடிமைச் சமூகத்தைச் செயல்படுத்துவதில், மூலை முடுக்குகளில் உள்ள ஒவ்வொரு கிராமமும் பங்கெடுத்துக் கொள்ளும் பஞ்சாயத்து ஆட்சிமுறை, இந்தியாவின் மக்களாட்சி முறைக்கு வலுவான அடித் தளத்தை நல்கும்.

கடந்த ஐம்பதாண்டுகளாக மக்களாட்சி முறையில் நாம் பெற்ற பழுத்த அனுபவத்தின் வாயிலாகப் பல படிப்பினைகளை நாம் கற்க வேண்டியுள்ளது. மக்களாட்சி அமைப்பு ஒன்று செயல்படுவதாலேயே உண்மையான மக்களாட் சிக்கு உத்தரவாதமளிக்க முடியாது என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும். சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் எந்த ஒரு மக்களாட்சியையும் கேலிக் கூத்தாக்கிவிடும். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு சமூக-பொருளாதார சமத்துவம் இன்றேல், அங்கே உண்மையான மக்களாட்சி நிலவ முடியாது என்பதைப் பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகளின் அனுபவங்கள் நமக்குக் காட்டு கின்றன. அண்ணாந்து பார்க்கின்ற மாளிகையும் அதன் அருகினில் ஓலைக் குடிசையும் கொண்ட சூழலில் உண்மையான மக்களாட்சி முறையை நாம் செயல் படுத்த முடியாது. பெரும்பான்மையான மக்கள் ஏழ்மையிலும் பற்றாக் குறையிலும் வாழ்கின்ற இந்தியாவைப் போன்ற வளரும் நாடுகளில் இப்பிரச்சினை பெரிதும் கவலையளிப்பதாகவே இருக்கிறது.

அறிவியல், தொழில் நுட்ப முன்னேற்றங்களால் மனிதன் வேற்றுக் கிரகத் திற்குச் சென்று வருகின்ற இந்தக் காலகட்டத்தில் – மனிதனின் மரபுக் கூறு களையே மாற்றிவிடும் வல்லமை படைத்த இந்த அறிவியல் யுகத்தில், இப்புவியில் வாழ்கின்ற மக்களில் பெரும்பான்மையோர் வறுமையிலும் பற்றாக் குறையிலும் உழலுவது நிதர்சனமான முரண்பாடு. இந்த ஏற்றத்தாழ்வு நீங்கும் வரை எந்த ஒரு சமூகமும் தன்னை மக்களாட்சி நெறி சான்றது எனக் கூறிக் கொள்ள முடியாது. மக்களாட்சி நெறியை உறுதியாகப் பற்றிக் கொண்டுள்ள மனித சமூகம் எதிர் கொண்டுள்ள பெரும் சவால் இதுதான்.

மக்களாட்சி அமைப்பின் இன்றியமையாக்கூறுகளை மிக எளிய நடையில் விளக்குவதற்காக மேற்கொண்ட கடும் உழைப்பின் விளைவே இந்நூல். மக்களாட்சியைப் பற்றி அறிந்து கொள்ள முயலுவோர் எதிர்கொள்ளும் ஐயங்கள் அனைத்திற்கும் விடைகாண இந்நூல் உதவும். மக்களாட்சியைக் கட்டிக்காக்க உறுதிபூண்டுள்ள ஒவ்வொருவருக்கும் இச்சீரிய நூல் பெரிதும் பயனாகும் என்பது உறுதி.

நிகில் சக்ரவர்த்தி

நூலாசிரியர்கள் உரை

மக்களாடசியைப் பற்றி பலரும் அவ்வப்போது பேசினாலும், ஒவ்வொருவரும் அதற்கு வெவ்வேறு விதமாகப் பொருள் கொள்கின்றனர். உண்மையில், மக்களாட்சி என்றால் என்ன என்று பலருக்கும் குழப்பமாகவே இருக்கிறது மககளாட்சி என்றால் தனி நபர் சுதந்திரமா? பல கட்சிகள் இருக்கின்ற நிலையா? பெரும்பான்மை பலத்தால் ஆட்சி புரிவதா? சிறுபான்மையினர் உரிமைகளா? எதைக் குறிக்கிறது என்ற தெளிவு ஏதும் இல்லை. ஒரு நாடு மக்களாட்சி நாடுதானா என்பதைத் தீர்மானிக்கவோ மக்களாட்சி முறையில் அந்நாடு கண்டுள்ள முன்னேற்றத்தை அளவிடவோ அனைவரும் ஏற்றுக்கொண்ட அளவுகோல ஏதேனும் உள்ளதா? ஒரு நாட்டை மக்களாடசி நாடு என்று ஏற்றுக்கொள்வதற்கு என்று குறிப்பிட்ட அமைப்புகளோ, நடைமுறைகளோ உள்ளனவா? அல்லது மக்களாட்சி முறையைப் பல்வேறு வடிவங்களிலும் பல்வேறு வழிமுறைகளிலும் அடைய முடியுமா?

இம்மாதிரியான வினாக்களுக்கு இந்நூலில் விடைகாண முயன்றுள்ளோம். எமது விடைகளில் சில, மற்றவற்றைக காட்டிலும திட்டவட்டமானவை. பலா போட்டியிடும் தேர்தல் முறையோ, எல்லாருக்கும் வாக்குரிமையோ இல்லாத நாடும, மககளால் தேர்நதெடுக்கப்படட அரசியல்வாதிகளுககுத் தேர்நதெடுக்கப்படாத அரசாங்க அலுவலர்களின மீது கட்டுப்பாடுகள் இலலாத நாடும், சங்கம் அமைக்கும் உரிமைக்கோ கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கோ உத்தரவாதமளிக்காத நாடும் மக்களாட்சி நாடாகா என்பதைப புரிநது கொளள வேண்டும். இவற்றில் சில விஷயங்களைப பொறுத்தவரையில் அங்கீகரிக்கபபட்ட சர்வதேசத் தரஙகள் உள்ளன. எடுத்துககாட்டாக சிவில உரிமைகள், அரசியல் உரிமைகள் பாதுகாப்பு, கட்டுக்கோபபான தேர்தல் முறை போன்றவற்றைக் கூறலாம். சர்வதேச அமைபபுகளும், அரசுசாரா நிறுவனங்களும பல நாடுகளிலும் இவற்றைப் பல்லாண்டுகளாகக் கண்காணித்து இந்தத் தர மதிபபீடுகளை உருவாககியுள்ளன. மற்ற விஷயங்களில் தர மதிப்புக்கள் முழுமையாக உருவாக்கப்படாததுடன், பரவலாக அவை ஏற்றுக்கொளளப்படவும் இல்லை. சில நாடுகளில் பினபற்றப்படும் நடைமுறைகளில சிலவற்றை ஒன்று மற்றதைக் காட்டிலும் மிகவும் மக்களாட்சி நெறியுடையது என்றும நாம் கூறிவிட முடியாது. எடுத்துக்காட்டாக, தேர்தல முறைகள், நாட்டின தலைவர் (அதிபர் அல்லது பிரதமர்), நீதித்துறை அமைப்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே மக்களாட்சி என்பதைப் புரிந்துகொள்ள வேணடுமானால, மக்களாட்சி முறையின் பன்முக இயல்புகளையும், மக்களாட்சி முறைக்கு அத்தியாவசியமான கூறுகளையும் புரிந்துகொள்ள வேண்டும்.

வல்லரசுகளுககு இடையேயான கெடுபிடிப்போர் முடிவுக்கு வந்த பின்னர், மக்களாட்சி என்பது உலகளாவிய இலககாகி விட்டது. எலலா நாடுகளுமே

மக்களாட்சிமுறையைப்பின்பற்றவிழைகின்றன.எனவே,மக்களாட்சிஎன்றால் என்ன என்பதைவிளக்கும்ஒருநூல்இப்போதையதேவையாகிறது. புதிதாக மக்களாட்சிமுறையை ஏற்றுக்கொண்டுள்ள நாடுகளிலும், மக்களாட்சிமுறை மெல்லவளர்ந்துவருகின்றநாடுகளிலும்உள்ளகுடிமக்கள்,தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அரசாங்கஊழியர்கள் போன்றஎல்லாத்தரப்பினருக்கும், மக்க ளாட்சிநெறிமுறைகள்பற்றியகடினமானவினாக்களுக்குப்பட்டவர்த்தனமாக விடை பகரும் நூலாக இது ஆக்கப்பட்டுள்ளது. மேலும், தம்முடைய நாட்டின் மக்களாட்சிநடைமுறைபற்றித்தெளிவாகஅறிந்திராதமுன்னேறியமக்களாட்சி நாடுகளின்குடிமக்களுக்காகவும்இந்நூல்எழுதப்பட்டுள்ளது. மக்களாட்சிமுறை தொடர்ந்துபின்பற்றப்படுவதற்கும், ஆழவேரூன்றுவதற்கும், குடிமக்கள்விஷய மறிந்தவர்களாக இருக்க வேண்டும். அந்த விஷய ஞானத்தைப் பெறுவதற்கு இந்நூல்உதவும்என்று நம்புகிறோம்.

இன்றைய நிலையில் மக்களாட்சி முறை சிக்கலற்று உள்ளது என்று நாங்கள் கூற முனையவில்லை. இனப்பாகுபாடுகள், சமய வேற்றுமைகள், வேலை யில்லாத் திண்டாட்டம், பொருளாதாரச் சரிவுகள், சர்வதேச அமைப்புகளுக்குக் கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டிய நிலைமை, தம்முடைய வாழ்க்கையைத் திறம் பட அமைத்துக் கொள்ளும் அதிகாரம் தமக்கு இல்லையே என்று மக்கள் ஏங்கும நிலைமை போன்ற பல பிரச்சினைகளையும் மக்களாட்சி முறை எதிர்கொள்ள வேண்டியுள்ளது இந்தச் சிக்கல்களுக்கு நாங்கள் தீர்வு ஏதும் சொல்லா விட்டாலும், இக்கால கட்டத்தில் மக்களாட்சி நெறி நீடிப்பதற்கு, அப்பிரச்சினை களுக்குத் தீர்வு கண்டாக வேண்டும் என்ற முக்கியத்துவத்தை உணருகின்றோம

இந்த அளவுக்கு மக்களாட்சி முறைக்கு நாம் ஏன் தலையாய இடம் அளிக்க வேண்டும்? இதற்கான விடையை இனிவரும் பக்கங்களில் வாசகர்களாகிய நீங்களே கண்டு கொள்ளுங்கள். இந்நூல் பற்றிய உங்கள் விமர்சனங்களை வரவேற்கிறோம். இந்நூல் உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்றும் நம்புகிறோம்.

டேவிட்பீதம்
கெவின்பாய்லே

1

அடிப்படைக் கருத்துக்களும் கோட்பாடுகளும்

1. [1]மக்களாட்சி என்றால் என்ன?

வீட்டில் தொடங்கி, தெரு, மனமகிழ் மன்றம், தொழிற்சங்கம், நாடு என்று பல்வேறு நிலைகளிலும் நம் வாழ்க்கை முழுவதும் நாம் பலதரபபட்ட அமைப்பு களிலும் பிரிவுகளிலும் உறுப்பினராக இருந்து வருகிறோம். இத்தகைய அமைபபுகளில்–அவை சிறியதானாலும், பெரியதானாலும் - அவற்றின் இலக்குகள், பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள், உறுப்பினர்களிடையே பொறுபபுகளையும் பலன்களையும் பகிர்ந்தளிககும் முறை போன்ற பல விஷயங்கள் குறித்து அமைப்பு முழுவதுக்குமான முடிவுகளை எடுத்தாக வேண்டும் அத்தகைய முடிவுகளைக் கூட்டு முடிவுகள் எனலாம் மக்கள் தமக்குத் தாமே எடுக்கும் தனிநபர் முடிவுக்கு எதிரிடையானது இது இது மாதிரியான கூட்டு முடிவு எடுப்பதே மக்களாடசி முறை (ஜனநாயக முறை) ஆகும். ஓர் அமைப்பு முழுவதற்குமான முடிவுகள் அதன் உறுப்பினர்கள் அனைவராலும் எடுக்கப்பட வேண்டும என்பதையும், அத்தகைய முடிவுகளில் பங்கெடுப்பதற்கு அவர்களுக்குச் சம உரிமை உண்டு எனபதையும் உளளடக்கியதே மக்களாட்சித் தத்துவம். வேறு விதமாகச் சொல்வதென்றால், கூட்டு முடிவுகளில் பொதுமக்கள் தமது கட்டுப்பாட்டைச் செலுத்துவதும, அத்தகைய கட்டுப்பாடுகளைச் செலுத்து வதில் அனைவருக்கும் சமஉரிமையும் என்ற இரட்டைக் கோட்பாடுகளை உள்ளடக்கியதே மக்களாட்சியாகும். எந்த ஓர் அமைப்பானாலும், அதன் முடிவெடுத்தலில் இவ்விரு கோட்பாடுகளும் பின்பற்றப்படுகின்ற அளவைப் பொறுத்து, அந்த அமைப்பை மக்களாட்சி நெறியிலானது எனலாம்.

சமூகத்திலும் தேசத்திலும் மக்களாட்சி

மக்களாட்சி என்பதை இவ்வாறு வரையறுப்பதன் மூலம் இரண்டு விஷயங்கள்

---

1. Democracy என்ற ஆங்கிலச் சொல் மக்களாடசி என இந்நூலில மொழி பெயர்க்கப் பட்டுளளது நூல முழுவதும் இதே சொல்லைப் பயன்படுத்துவதே முறை என்ற போதிலும, சொல்லபபடும கருத்தின் அழுத்தம் கருதி, சிற்சில இடங்களில ஜனநாயகம் என்ற சொலலும் பயனபடுத்தபபட்டுளளது
(இந்நூலின் அடிககுறிப்புகள், இந்தியப் பதிபபுககாக நேஷனல புக் டிரஸடால் தரப்பட்டுள்ளன.)

—பதிப்பாசிரியர்

தெளிவாகின்றன. முதலாவதாக, நாம் பொதுவாக நம்பிக்கொண்டிருப்பதுபோல் மக்களாட்சி என்பது ஒரு தேசத்திற்கு மட்டும் உரியது அன்று; கூட்டாக முடிவெடுக்கின்ற எந்த ஓர் அமைப்பும், மக்களாட்சிக் கோட்பாட்டுடன் சம்பந்தப் பட்டதே. சொல்லப் போனால், தேசத்தின் மக்களாட்சிக்கும் சமூகத்தின் பிற அமைப்புகளின் மக்களாட்சிக்கும் முக்கியமானதோர் உறவு இருக்கிறது. எனினும், தேசம் என்பது, சமூகத்தின் சகலவிதமான விவகாரங்களையும் முறைப் படுத்துகின்ற உரிமை, கட்டாய வரி வசூலிக்கின்ற திறன், தனது உறுப்பினர் களின் வாழ்வையும் சாவையும் தீர்மானிக்கக் கூடிய அதிகாரம் போன்றவற்றை உள்ளடக்கிய விரிவானதோர் அமைப்பாகத் திகழ்வதால் தேச அளவில் மக்க ளாட்சி என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனவே, மக்களாட்சி அரசாங்கத்தைப் பற்றியே நாம் அக்கறை கொண்டுள்ளோம்.

சார்புடைய கருத்து

மக்களாட்சி குறித்த வரையறையில் இரண்டாவது கருத்து, அது எல்லாவற்றையும் உள்ளடக்கியதோ, எதுவுமே இல்லாததோ அன்று. அதாவது ஓர் அமைப்பு முற்றிலுமாக மக்களாட்சி நெறியிலானது; அல்லது மக்களாட்சி நெறியற்றது என்று நாம் கூறிவிட முடியாது. மக்களாட்சி என்பது பல்வேறு படிநிலைகளில காணப்படலாம். பொதுமக்களின் கட்டுப்பாடு செல்லுபடியாகும் அளவு, அரசியல் சமத்துவம் அடைந்துள்ள அளவு, கூட்டாக முடிவெடுக்கின்ற நிலையில் மக்களின் சம பங்கெடுப்பின் அளவு போன்றவற்றைப் பொறுத்து அந்தந்த அளவிற்கு மக்களாட்சி நெறி உள்ளது என்று கூறலாம். ஒரு நாட்டில் உள்ள வயதுற்றோர் அனைவருக்கும் வாக்களிப்பதற்கும் தேர்தலில் போட்டியிடுவதற்கும் சமஉரிமை அளிக்கப்பட்டு, மக்களுடைய சிவில் உரிமைகளும் அரசியல் உரிமைகளும சட்டப்பூர்வமாகப் பாதுகாக்கப்பட்டு, தேர்தலில் போட்டியிட்டு ஆட்சியில் அமர்வோர் மக்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்புடையவர்களாக இருந்தால் அந்த அரசை மக்களாட்சி அரசு என நாம் காலங்காலமாக அழைத்து வருகிறோம். ஆனால், அத்தகைய நாடு எதுவும் பொதுமக்கள் கட்டுப்பாடு மற்றும் அரசியல் சமத்துவம் என்ற இரட்டைக் கோட்பாடுகளை முழுமையாக நடை முறைப்படுத்துவதில்லை. அந்த அளவிற்கு, மக்களாட்சி மயமாக்கும பணி ஒரு போதும் முடிவடைவதில்லை. எனவே, உலகெங்கிலும் உள்ள எந்த ஓர் அரசியல் அமைப்பானாலும் அங்கே (ஜனநாயகவாதிகள்) மக்களாட்சிக் கோட்பாட்டின் மக்களாட்சி நெறியை ஒன்றிணைந்து விரிவாக்குவதற்குத் தொடர்ந்து போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

2. மக்களாட்சியை நாம் ஏன் போற்ற வேண்டும்?

மக்களாட்சி ஏன் போற்றப்பட வேண்டும் என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன.

சமத்துவக் குடியுரிமை

மக்கள் அனைவரையும் சமமாக நடத்துவதே மக்களாட்சியின் நோக்கமாகும். ஒரு சிலருடைய உயிர் மற்றவர்களுடையதைக் காட்டிலும் உள்ளார்ந்த ரீதியில் மிகவும் மதிப்புடையது என்று கூறிய மேட்டுக் குடியாட்சியினரின் கருத்தைத் தாக்கிப்

பேசிய ஆங்கிலேய சட்டவியல் நிபுணர் ஜெர்மி பெந்தம் (Jeremy Benthem) 'ஒவ்வொருவரும் ஒன்றெனவே கொள்ளப்படுவர்; எவருமே ஒன்றுக்கும் மேலாய் எண்ணப்படுவதில்லை' என்று கூறினார். சமத்துவக் கோட்பாடு எனில், மக்களின் நலன்களைச் சமத்துவக் கண்ணோட்டத்தில் அரசாங்கம் அணுக வேண்டும் என்பது மட்டுமன்று; அவர்களுடைய எண்ணங்களும் சமமாக மதித்துப் போற்றப்பட வேண்டும். யூரிபிடிஸ் நாடகம் ஒன்றில் வருகின்ற ஏதென்ஸ் குடிமகன் ஒருவன் 'செல்வத்திற்கு நாங்கள் விசேஷ அதிகாரம் ஏதும் அளிப்ப தில்லை' என்றும், 'ஏழையின் குரலுக்கும் சமமான அதிகாரம் உண்டு' என்றும் கூறுவான். மக்களாட்சி முறையை விமர்சிப்பவர்கள், பெரும்பான்மையான மக்கள் அறியாமையில் அமிழ்ந்து இருக்கிறார்கள் என்றும், அரசாங்கக் கொள்கைகள் பற்றித் தீர்மானிப்பதில் பங்கெடுக்கின்ற அளவிற்கு விவரம் தெரி யாதவர்களாகவும், கல்வியறிவற்றவர்களாகவும் இருக்கின்றனர் என்றும் கூறு கிறார்கள். இதனை மறுதலிக்கின்ற மக்களாட்சிக் கோட்பாட்டினர், மக்களுக்கு விவரங்கள் தேவை என்றும், அவ்விவரங்களைப் புரிந்து கொண்டு செயலாற்று வதற்குப் போதிய அவகாசம் வேண்டும் என்றும், முடிவுகள் மேற்கொள்ள வேண்டிய தருணத்தில் திட்டவட்டமாகச் செயல்படும் ஆற்றல் அவர்களுக்கு நிச்சயம் உண்டு என்றும் கூறுகின்றனர். தமது சொந்த வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக் கொள்ளும் பொறுப்பைப் போலவே, தாம் சார்ந்துள்ள சமுதா யத்தின் நலனைப் பேணும் முடிவுகளை மேற்கொள்வதிலும் அவர்கள் பங்கெடுக்கும் ஆற்றல் உடையவர்கள்

பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றுதல்

மற்ற எந்த அரசாங்கத்தைக் காட்டிலும் மக்களாட்சி அரசு நிச்சயமாக மக்களின் தேவைகளைப் பெருமளவுக்கு நிறைவேற்றிவிடும். அரசாங்கத்தின் கொள்கை களில் மக்களின் செல்வாக்கு எந்த அளவிற்கு மேலோங்கியுள்ளதோ, அந்த அளவிற்கு மக்களின் விருப்பங்களும் தேவைகளும் நிறைவு செய்யப்படும். 'செருப்புத்தைப்பவர் செருப்பைத் தயாரித்தாலும், அதை அணிபவனுக்குத்தான் அது எங்கே கடிக்கிறது என்று தெரியும்' என ஏதென்ஸ் பழமொழி ஒன்று கூறுகிறது. அரசாங்கக் கொள்கைகள் அமலபடுத்தப்படும்போது அவற்றின் விளைவுகளை நேரிடையாக அனுபவிக்கின்ற சாதாரணக் குடிமக்கள், கீழ் மட்டத்திலிருந்து அரசாங்கக் கொள்கைகளைத் தமது தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கும்படி வலியுறுத்தும் திறம் பெற்றிருக்கும் போதுதான் அவை மக்களின் விருப்பங்களை நிறைவு செய்கின்றன. ஆட்சியில் இருப்போர் நல்லவர் களாக இருந்தாலும் கூட, மக்களின் தேவைகளுக்குச் செவி சாய்க்காமல் போனால், அந்த ஆட்சியின் கொள்கை மக்களின் விருப்பங்களுக்குப் புறம் பானதாகப் போய்விடுவதுடன், ஆட்சியாளர்களின் சுய தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும், ஊழல் மலிந்ததாகவும் ஆகிவிடும்.

பன்மை இயல்பும் விட்டுக் கொடுத்தலும்

வெளிப்படையான விவாதம், இணக்குவித்தல், விட்டுக் கொடுத்தல் ஆகியவற்றைச் சார்ந்தே மக்களாட்சி முறை உள்ளது. மக்களாட்சி முறையில்,

கொள்கைகளைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும் என்பது மட்டுமின்றி, மாறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்தவும், கேட்கச் செய்யவும் உரிமை உள்ளது என்பதையும் விவாதங்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு, சமூக அமைப்பில் பன்முகத் தன்மையும் வேறுபாடுகளும் இருப்பதுடன், குடிமக்களிடையே சமத்துவமும் இருக்கும் என்பதையே மக்களாட்சி முறை உணர்த்துகிறது. மாறுபட்ட கருத்துக்கள் வெளிப்படுத்தப்படும்போது கலந்துரையாடல், இணங்கச் செய்தல், விட்டுக்கொடுத்தல் ஆகியவற்றின் மூலம் வேறுபாடுகளைக் களைவதுதான் மக்களாட்சி முறையே அன்றி, அதிகாரத்தைக் காட்டி வலுக் கட்டாயமாக முடிவுகளைத் திணிப்பது அன்று மக்களாட்சி அமைப்புகளை 'வம்பளக்கின்ற இடங்களாகவே' கேலிச் சித்திரங்களில் தீட்டிக் காட்டுவார்கள். ஆனால், பொதுவிவாதம் நடத்துகின்ற அவற்றின் திறமையை பலவீனமாகக் கொள்ளாமல் பலமாகவே கருத வேண்டும். ஏனெனில் விவாதத்தின் வாயிலாக ஒப்புதல் பெறுவதே சிறந்த வழியாகும்; திட்டவட்டமான செயல்பாட்டுக்கு அது முரணானது அன்று

அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம்

அடிப்படை உரிமைகளுக்கு மக்களாட்சி உத்தரவாதம் அளிக்கிறது சிவில் உரிமைகள், அரசியல் உரிமைகள் போன்ற சர்வதேச ஒப்பந்தங்களில் இடம் பெற்றுள்ள பேச்சுரிமை, கருத்து வெளிப்பாட்டு உரிமை, சங்கம் அமைக்கும் உரிமை, சுதந்திரமான இயக்கம், தனிமனித உயிருக்குப் பாதுகாப்பு போன்ற உரிமைகள் இல்லாமல், கருத்து வேறுபாடுகளுக்குத் தீர்வு காணும் வெளிப்படையான விவாதங்களை நடத்த முடியாது. எனவே மக்களாட்சி முறை நிலை பெற வேண்டுமானால் அங்கே இந்த உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். இந்த உரிமைகள் தனி நபர்களின் வளர்சசிக்கு உறுதுணையாவதுடன், பலதரப்பட்ட விவாதங்களுக்கு இடையே செயல்படுததக் கூடிய கூட்டு முடிவுகளை மேற்கொள்ளவும் துணையாகின்றன.

சமூக மறுமலர்ச்சி

மக்களாட்சி முறை சமூக மறுமலர்ச்சிக்கு வித்திடுகிறது. மக்களின் தேவைகளை நிறைவேற்றாத அல்லது மக்களுக்குப் பயனில்லாத கொள்கைகளையும் ஆட்சியாளர்களையும் அமைதியான முறையில் நீக்கிவிடுவதற்கு மக்களாட்சி வகை செய்கிறது மக்களாட்சி அல்லாத பிற ஆட்சியமைப்புகளில் உள்ளோரைப் பதவியிறக்கும் போது நேரிடும் பெருங்குழப்பமும் சீர்கேடும் இல்லாமல் சமூக மாற்றத்தையும் தலைமுறை மாற்றத்தையும் அமைதியான முறையில் உருவாக்க வல்லது மக்களாட்சி.

3. மக்களாட்சிக் கருத்து எங்கிருந்து தோன்றியது?

சாதாரண மக்களின் வாழ்க்கையை பாதிக்கக்கூடிய முடிவுகள் மேற்கொள்ளப் படும்போது அவர்களும் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு சமுதாய அமைப்புகளிலும் இருந்ததை வரலாறுகள் காட்டுகின்றன. கி.மு ஐந்தாம் நூற்றாண்டிலும், நான்காம் நூற்றாண்டிலும் ஏதென்ஸ் நகரில்

இக்கோரிக்கைக்கு அமைப்பு ரீதியான ஓர் உருவம் கிடைத்திருந்தது. அரசாங்கப் பதவிகளை வகிப்பதற்கு சொத்துடைமை என்னும் தகுதி நீக்கப்பட்ட பின்னர், ஏதென்ஸ் குடிமகன் ஒவ்வொருவனும், சமுதாயக் கொள்கைகள் பற்றியும் கூட்டங்கள் பற்றியும் பேரவைகளில் நடைபெற்ற விவாதங்களில் கலந்து கொண்டு வாக்குச் செலுத்துவதற்கான சம உரிமையைப் பெற்றிருந்தான். மேலும் சுழற்சி முறையில் குலுக்கல் மூலம் நியமனம் செய்யப்பட்ட நிர்வாக சபையிலும், நீதிப்பணியிலும் உறுப்பினராகி நிர்வாகத்திலும் பங்கெடுத்துக் கொண்டான். மக்களாட்சி அமைப்பின் செயல்பாடு பற்றிய இந்த முன்னுதாரணமே, மக்களாட்சிக் கோட்பாட்டினருக்குத் தூண்டுகோலாக அமைந்தது. பொருளாதாரத்திலும், கடலாதிக்கத்திலும் ஏதென்ஸ் கொடிகட்டிப் பறந்த காலத்தில், படைப்புக் கலைகளும் தத்துவ விசாரங்களும் மலிந்திருந்த சூழ்நிலையில் இவ்வாறு மக்களாட்சி நெறி பின்பற்றப்பட்டது. எனவே சாதாரண மக்களுக்கு அவர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் பங்கெடுக்க அனுமதித்தால் அசமந்தம் பிடித்த மந்தைச் சமூகமே தோன்றும், அல்லது பொறுப்பில்லாத அரசாங்கம் உருவாகும் என்று மக்களாட்சி முறையை எதிர்ப்பவர்கள் கூறிவந்ததற்கு நல்ல பதிலடியாக இச்சான்று விளங்குகிறது.

நேரடி மக்களாட்சி

முற்கால ஏதென்ஸ் நகரில் காணப்பட்ட மக்களாட்சி முறை இன்று நாமறிந்துள்ள மக்களாட்சி முறையைக் காட்டிலும் சீரியதாகவும் அதே நேரத்தில் குறைபாடுகள் கொண்டதாகவும் இருந்தது எனலாம். சீரிய மக்களாட்சியாக இருந்தது எப்படி எனில், அன்றிருந்த குடிமககள, சமூகத்தின் முககியமான முடிவுகளை மேற்கொள்வதில நேரிடையாகவே பங்கேற்றனர் (நேரடி மக்களாட்சி). ஆனால் இன்றைய பிரதிநிதித்துவ மக்களாட்சி முறைகள் மறைமுக மக்களாட்சியாகும் நாடாளுமன்றத்திலும், அரசாங்கத்திலும முடிவு எடுக்கின்ற சமயங்களில் குடிமக்கள் இன்று நேரிடையாகப் பங்கேற்க முடியாது. நேரடி மக்களாட்சி முறை சாத்தியமாக வேண்டுமானால் ஓரிடத்தில் எல்லாரும் கூடிப் பேசுகின்ற அளவிற்கு அமைப்பு சிறியதாகவும் அதன் உறுப்பினர் எண்ணிக்கை குறைவாகவும் இருக்க வேண்டும், மேலும் விவரமறிந்த பின்னணியில் முடிவெடுப்பதற்குத் தேவையான விவாதங்களையும் ஆதாரங்களையும் நேரிடையாகப் புரிந்து கொள்ளுவதற்கான அவகாசமும் வேண்டும். நேரடி மக்களாட்சி முறைக்குத் தேவையான இந்த இரண்டு அம்சங்களில் எதுவும் இன்றைய குடிமக்கள் அமைப்புகளில் இல்லை. எனினும் தேசிய அளவிலான தேர்தல்களிலும் கருத்துக் கணிப்புகளிலும் நேரிடையாகப் பங்கெடுத்து முடிவெடுக்கவும், உள்ளூர் அளவிலான அமைப்புகளில் நேரிடையாகத் தொடர்ந்து பங்கேற்று முடிவெடுக்கவும் வாய்ப்புகள் உள்ளன.

விலக்கப்பட்ட குடியுரிமை

ஏதென்ஸ் மக்களாட்சி முறை இன்றைய மக்களாட்சி முறைகளைக் காட்டிலும் குறைபாடுள்ளதாக இருந்தது. எவ்வாறெனின், அங்கே அடிமைகள் அல்லாத சுதந்திரமான ஆண்களுக்கு மட்டுமே குடியுரிமை வழங்கப்பட்டு இருந்தது.

பெண்கள், அடிமைகள், அன்னியர்கள் ஆகியோருக்குக் குடியுரிமை விலக்கப் பட்டது. ஆண் குடிமக்கள் அரசியல் பணிகளில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு வசதியாக, தேவையான அனைத்து வேலைகளையும் இவர்கள் செய்து வந்தனர். இவ்வாறாகக் குடியுரிமை ஒரு வரம்புக்கு உட்படுத்தப்பட்டதால் நேரிடையான மக்களாட்சி முறையில் குடிமக்கள் அனைவரும் தீவிரமாகப் பங்கேற்க முடிந்தது. அன்றைக்கு 'மக்கள்'தான் ஆட்சிபுரிந்தார்கள்; ஆனால் பிரத்யேகமான ஓர் அந்தஸ்தின் மூலமே அவர்களால் ஆட்சிபுரிய முடிந்தது.

இன்றைய நிலையில் குடியுரிமை விலக்கம்

பெரும்பாலான மேற்கத்திய நாடாளுமன்ற அமைப்புகளில், இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம் வரையிலும்கூட, இதுபோல் குடியுரிமைக்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பிரெஞ்சுப் புரட்சியின் மூலம் உருவான, 'எல்லாவிதமான அரசியல் அதிகாரங்களும் மக்களிடம் இருந்தே தோன்றுகின்றன' என்ற புகழ்பெற்ற கோட்பாடுகூட, எல்லா மக்களையும் உள்ளடக்கிய எண்ணத்தில தோன்றியதிலலை. பெரும்பாலான மேற்கத்திய நாடுகளில் இந்த நூற்றாண்டில்தான் பெண்களுக்கும் சொத்துடைமையில்லாத ஆண்களுக்கும் வாக்குரிமை அளிக்கப் பட்டுள்ளது. இருந்த போதிலும்கூட, ஒரு நாட்டில் வசிக்கும் (அன்னியர்) வயதுற்றோர் அனைவருக்கும்—அவர்கள் அந்நாட்டுப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வெகுவாகப் பங்களிப்புச் செய்திருந்தாலும் கூட—தேர்தலில் வாக்களிக்க உரிமையில்லை.

4. பிரதிநிதித்துவ முறை உண்மையிலேயே மக்களாட்சியாகுமா?

ஆகாது என்று சொல்கிறார் பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த அரசியல் அறிஞர் ரோசேயு. பிரதிநிதித்துவ முறையில் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் தேர்தல் சமயத்தில் மட்டுமே மக்கள் சுதந்திரமாகச் செயல்படுகின்றனர் என்று கூறும் அவர், தேர்தலுக்குப் பின்னர், ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்படிந்து போய்விடுகிறார்கள் என்றும், அது அடிமை நிலையைவிட மேம்பட்டது அன்று என்றும் அவர் வாதிடுகிறார். பிரதிநிதித்துவ முறைகள் முறையான மக்களாட்சி அமைப்புகள் ஆகாது என்ற இந்த வாதம் இடதுசாரித்தனமான கடுமையான விமர்சனமாகும். ஆனால் வலதுசாரியினரோ இம்முறை மக்களுக்குப் பெருமளவு சுதந்திரம் அளிக்கிறது என்று கூறுகின்றனர்.

தேர்தல் மூலம் கட்டுப்பாடு

குடிமக்கள் அமைப்பு, பல லட்சக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்டதாகப் பெருகி இருக்கின்ற நிலையிலும், அரசியல் விவகாரங்களில் நேரிடையாக அந்த அமைப்புகள் தொடர்ந்து பங்கெடுக்கப் போதிய கால அவகாசம் இல்லாத நிலையிலும் அரசாங்கத்தின் மீது மக்களின் கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்கு உகந்த சீரிய முறை—பிரதிநிதித்துவ முறைதான் என்று எல்லாரும் கூறுகின்றனர். அரசாங்கத்தின் தலைவரைத் (அதிபர் அல்லது பிரதமர்) தேர்ந்தெடுப்பதுடன் தம்

சார்பாக அரசாங்கத்தின் செயல்பாட்டைத் தொடர்ந்து கண்காணிக்கின்ற சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கின்றனர். அந்தப் பிரதிநிதிகள் விரிவிதிப்பையும் சட்டம் இயற்றுவதையும் மக்களின் சார்பாக அங்கீகரிக்கிறார்கள், அல்லது நிராகரிக்கிறார்கள்.[1] அரசாங்கத்தின் மீது மக்கள் செலுத்தும் இந்தக் கட்டுப்பாடு உண்மையிலேயே செயல்திறன் மிக்கதாக இருக்க வேண்டுமானால் தேர்தல்கள் 'சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெற வேண்டும்; மேலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் வெளிப்படையானதாக இருப்பதுடன், அந்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி ஆராய்வதற்கான போதிய அதிகாரமும் நாடாளுமன்றத்திற்கு இருக்க வேண்டும்.

பொதுக்கருத்து

பிரதிநிதித்துவ முறையில் அரசாங்கத்தின் கொள்கைகளைத் தீர்மானிப்பதில் பொதுமக்களுக்கு முக்கியப் பங்களிக்க தேர்தல்கள் பிரதான வழி என்றாலும் அது ஒன்று மட்டுமே வழியாகாது. சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்காக மக்கள் சங்கங்கள் அமைத்துப் போராடலாம்; அரசியல் கட்சிகளில் உறுப்பினராகலாம். தமது பிரதிநிதிகளை நேரிடையாக அணுகி தமது கோரிக்கைகளுக்கு ஆதரவு தேடலாம். அரசாங்கமும் தன்பங்கிற்கு. தனது கொள்கையினால் பாதிக்கப்பட்ட மக்களையோ, வாக்காளர்களில் ஒரு பிரிவினரையோ கலந்தாலோசிக்கலாம். ஆனால் நடைமுறையில் சில பிரதிநிதித்துவ அரசாங்கங்கள் கருத்து வாக்கெடுப்பு (Opinion polls) மூலமாகவும், பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் வாயிலாகவும், அவ்வப்போது வெளியிடப்படும் பொதுக் கருத்துக்களுக்குச் செவிசாய்ப்பதில்லை. எனினும், இம்மாதிரியான ஊடகங்களின் வாயிலாக பொதுக் கருத்தை வெளிப்படுத்துவதும் கூட தேர்தல் முறையின் தன்மையைப் பொறுத்தே அமைந்துள்ளது. பொதுமக்கள் கருத்துக்கு செவிசாய்க்காவிடில் ஆட்சியில் இருப்போர் பதவியிலிருந்து இறக்கப்படுவர் என்ற யதார்த்த நிலை இருந்தால்தான் மக்களின் கோரிக்கைகளை அரசாங்கங்கள் உன்னிப்பாகக் கவனித்து உரிய ஏற்பாடுகளைச் செய்யும்.

நேரடிக் கட்டுப்பாடும் மறைமுகக் கட்டுப்பாடும்

இவ்வாறாக, பிரதிநிதித்துவ முறையில், அரசாங்கத்தின் கொள்கைகளின் மீதும் ஆட்சியாளர்களின் மீதும் தேர்தலின் வாயிலாகவும், அரசாங்கத்தின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கு சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றம் வாயிலாகவும், அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்களைப் பல்வேறு வழிகளில் பொதுக்கருத்தாக வெளியிடுவதன் வாயிலாகவும் பொதுமக்களின் செல்வாக்கு செயற்படுத்தப்படுகிறது.

---

1 நம் நாட்டில், நாடாளுமன்றம் அல்லது சட்டமன்ற உறுப்பினர்களை மட்டுமே தமது பிரதிநிதிகளாக மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். நாட்டின் தலைவராகிய குடியரசுத் தலைவர் மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

அரசியல் சமத்துவம்

மக்களாட்சியின் இரண்டாவது கோட்பாடான (முதலாவது வினாவைக்காண்க) அரசியல் சமத்துவம் எப்படி இருக்கிறது? இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் பிரதிநிதித்துவ முறை சமத்துவமற்றதாகவே இருக்கிறது. ஏனெனில் ஒரு சிலருக்கு மட்டுமே மற்றவர்களின் சார்பாக அரசியல் முடிவுகளை மேற் கொள்ளும் உரிமையைப் பிரதிநிதித்துவ முறை அளித்துள்ளது. எனினும் இந்த வரம்புக்கு உட்பட்டு, ஆட்சிப் பொறுப்பை ஏற்கப் போட்டியிடவும், பொது நலன் சம்பந்தப்பட்ட விவரங்களுக்காகப் போராடவும் நிர்வாகம் சீர்கெட்டால் பரிகாரம் காணவும் ஒவ்வொருவரின் வாக்குக்கும் சம மதிப்பு எனத் தேர்தல் முறையை அமைத்து, குடிமக்கள் அனைவருக்கும் சம உரிமை அளிப்பதன் மூலம் அரசியல் சமத்துவத்தை எட்ட முடியும். ஆனால் நடைமுறையில் பார்த்தால், பெரும் பான்மையான பிரதிநிதித்துவ மக்களாட்சி அமைப்புகளில் இந்தக் காரணிகள் முழுமையாக நிறைவு செய்யப்படுவதில்லை. செல்வம், காலம், அணுக்கம் போன்ற பல வளங்களின் அடிப்படையில், அவற்றைத் தம வசம் கொண்டுள்ள மக்கள் பிரிவினரிடையே பாரபட்சமான நிலையிலேயே அரசியல் சமத்துவம் காணப்படுகிறது. எனவே பிரதிநிதித்துவ அமைப்பில் உள்ள மக்களாட்சிக் கோட்பாட்டின் இந்த வேறுபாடுகளினால் எழும் அரசியல் தாக்குறைவைக் குறைக் கவும், அரசாங்கத்தின் மீதான மக்களின் கட்டுப்பாட்டை மேலும் திறம்படச் செயல்படுத்துவதற்கும் வழிவகைகளைக் கண்டறிய வேண்டும்.

5. மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு என்ன?

அளவில் பெரியதான சமூகங்களில் தனிமனிதனாக இருந்து மககள் எவ் விதமான மாற்றத்தையும் கொண்டுவர முடியாது. மாறாக, மற்றவர்களுடன் இணைந்து ஓர் அமைப்பாகச் செயல்பட்டால அது சாத்தியமாகும். ஆட்சியைப் பிடிக்க வேண்டும் எனவும் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்றும் விரும்புகின்ற ஒத்த கருத்துடைய மக்கள் அனைவரையும் அரசியல் கட்சிகள் ஒன்றிணைக்கின்றன. அரசியல் கட்சிகள் தமது கொள்கைகளையும் திட்டங் களையும் வெளிப்படுத்துவதன் மூலம் வாக்காளர்களுக்கு, அவர்களுக்குப் பிடித்த மானவற்றைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புகளை அளிக்கின்றன ஓர் அரசியல கட்சியைச் சேர்ந்தவர்கள தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்களுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, அவர்களுடைய ஆதரவுடன் நிலையான அரசாங்கத்தை அமைக்க முடியும். மேலும், தீவிரமான அரசியல் எண்ணங் கொண்டவர்களுக்கு பொது விவகாரங்களில் பங்கெடுக்க வாய்ப்பளித்து, அரசியல் அறிவை வளர்க்கவும் அரசாங்கக் கொள்கைகளை வரையறுப்பதில் தாக்குறவை ஏற்படுத்தவும் அரசியல் கட்சிகள் வாய்ப்பளிக்கின்றன

நேர்மையான போட்டி

சுதந்திரமான, நேர்மையான தேர்தல் முறையில் வாக்காளர்களின் ஆதரவைப் பொறுத்தே அரசியல் கட்சிகளின் வெற்றி - தோல்விகள் நிர்ணயிக்கப் படுகின்றன. அதாவது, அரசியல் கட்சிகள் தமது திட்டங்களை வகுக்கும்போதும், தேர்தலில் போட்டியிடும் தமது வேட்பாளர்களைத் தெரிவு செய்யும போதும்

பொதுமக்களின் எண்ணங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யவில்லை என்றால், மற்ற கட்சிகள் வெற்றி பெற்றுவிடும். அல்லது இடை வெளியை நிரப்புவதற்காகப் புதிய கட்சிகள் தோன்றும் இவ்வாறாக பொது மக்களின் எண்ண ஓட்டத்தை அரசாங்க அமைப்பில் பிரதிபலிப்பதற்கு அரசியல் கட்சிகள் மைய விசையாகத் திகழ்கின்றன. ஆனால், அரசியல் கட்சி களுக்கு இடையேயான போட்டி 'சமதளத்தில்' நடந்தால்தான் அவை தம்முடைய பணியை ஒழுங்காகச் செய்யும். அரசாங்க வளங்களைப் பயன்படுத்தும் வாய்ப்பும், வாக்காளர்களுக்குத் தமது திட்டங்களை எடுத்துரைப்பதற்கான தொடர்பு சாதன வாய்ப்புகளும் சில கட்சிகளுக்கு மறுக்கப்பட்டால், நேர்மையான போட்டி இல்லாமல் போய்விடும். இதற்குக் குறிப்பாக என்ன செய்ய வேண்டும் என்றால், ஆட்சிக்கட்டிலில் உள்ள கட்சிகள் தம்முடைய பணிகளை அரசாங்கப் பணி என்றும், கட்சிப் பணி என்றும் தனித்தனியாகப் பாகுபடுத்திச் செயல்பட வேண்டும்.

சமூக பாகுபாடு

வாக்காளர்களின் நன்மதிப்பைப் பெற அரசியல் கட்சிகள் போட்டியிடுவது, பிரதிநிதித்துவ மக்களாட்சி அமைப்புகளின் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாக இருக்கின்ற அதே வேளையில் அந்தப் போட்டியே அரசியல் கட்சிகளின் பலவீனமாகவும் இருக்கின்றது. ஆட்சிப்பதவிகளுக்கான பகிரங்கப் போட்டி சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பெரும் பகுப்பினை உண்டாக்கக் கூடியது. எனவே மக்களாட்சி முறை தழைத்தோங்க வேண்டுமானால், போட்டியில் தோற்றுப் போகும் கட்சியையும் அதன் ஆதரவாளர்களையும் ஆட்சியமைப்பில் இருந்து ஒரேயடியாக விலக்கி வைத்து விடுவது என்பது ஏற்கக் கூடியதன்று. அவர்கள் தோற்றுப் போனாலும்கூட, அடுத்துவரும் தேர்தலில் வெற்றிகரமாகப் போட்டியிடுவார்கள் என்ற நம்பிக்கை உடையவர்களாக இருப்பதுடன், அக்கட்சியினர் அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமையை முடக்காமல் தொடர்ந்து நீட்டிக்க வேண்டும்.

6. மக்களாட்சியில் மக்கள் தொடர்பு சாதனங்கள் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றன?

எந்த ஓர் அரசியல் முறையானாலும், எல்லா அரசாங்கங்களும் தனது கொள்கை களுக்கு மக்களின் ஆதரவையும் இணக்கத்தையும் பெறவே முனைகின்றன. மக்கள் தொடர்பு சாதனங்களான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றின் மூலமே பெரும் எண்ணிக்கையிலான மக்களைச் சென்றடைய முடியும் என்பதால் தற்கால சமூக அமைப்பிலும் அரசியல் முறையிலும் இந்தச் சாதனங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனினும், மக்களாட்சி அமைப்பில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரச்சாரத்தை மேற்கொள்வதுடன், மக்கள் தொடர்பு சாதனங்களுக்கு வேறு முக்கியமான பணிகளும் உண்டு. அரசாங் கத்தின் செயல்பாட்டை ஆராய்வது, மக்களுக்கு அதைப் பற்றித் தகவல் தருவது, அரசியல் விவாதங்களுக்குக் களனாக அமைவது, பொதுமக்களின் எண்ணங் களை வெளிப்படுத்தும் வாயிலாக இருப்பது, அரசாங்கத்தின் மீதான மக்களின் கருத்துக்களை எடுத்துரைப்பது போன்றவையே அவை.



அரசின் ரகசிய முயற்சிகளை முறியடிக்க, பத்திரிகை முதலான தகவல் தொடர்பாளர்களின் துப்பறியும் நடவடிக்கைகள் அவசியம்

'காவல் நாயாக' பத்திரிகையாளன்

தனது செயல்பாடுகள் ரகசியமாக இருக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் விருப்பத்தைத் தகர்க்கவும், அதனுடைய பிரச்சார இயந்திரத்தின் மிகைக் கூற்றுக் களைத் தணிப்பதற்கும் மக்கள் தொடர்பு சாதனங்கள் புலனாய்வுப் பணியையும் தகவல் அறிவுறுத்தும் பணியையும் செய்ய வேண்டியது அவசியமானதாகும். ஓர் அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது என்று மக்களுக்குத் தெரிந்திருப்ப துடன், தனது கொள்கைகளின் அமலாக்கம் பற்றி அரசாங்கம் கூறுவதைச் சரிபார்த்துக் கொள்ள சுயேட்சையான ஓர் அமைப்பும் இருந்தால்தான் அந்த அரசாங்கத்தை மக்களுக்குப் பதில் அளிக்கும் பொறுப்புடையதாக ஆக்க முடியும். அரசாங்கத்தின் ரகசிய எல்லைக்குள் மக்கள் தொடர்பு சாதனங்கள் பெரு மளவுக்குப் பிரவேசித்து விடாமல், மக்கள் நலனைப் பாதிக்கின்ற விஷயங்கள குறித்துத தகவல் தருவது மக்கள் தொடர்பு சாதனங்களின் முக்கியமான பணி யாகும்; அந்தத் தகவல்களைப் பெறுவது மக்களின் உரிமையாகும். அவ்வாறு இல்லை என்றால், 'பொதுமக்களின் காவல் நாயாக' இருக்கும் முக்கியமான பணியை மக்கள் தொடர்பு சாதனங்கள் செய்ய இயலாமல் போய் விடுகிறது.

பொது விவாதம்

சுயேட்சையான விவரங்களைத் தருவதுடன், இந்தச் சாதனங்கள் பொது விவாதங்களுக்கான களமாகவும் திகழ்கின்றன. இங்கே அமைச்சர்களையும், ஏனைய பெருந்தலைவர்களையும் சாதாரணக் குடிமகன் உள்ளிட்ட பொதுமக்கள் அனைவரும் கேள்விகளால் துளைதது எடுத்துவிடலாம். அவ்வாறு செயல்படும் போது பொதுமக்கள் கருத்து அரசாங்கத்தைச சென்றடைய வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த வகையில் பார்க்கும் போது, நாடாளுமன்றத்தில் நடப்பது போல் மககள் அனைவரையும் ஒன்று சேர்த்து அரசாங்க நடவடிக்கைகளை ஆராயும் பணிக்கு மக்கள் தொடர்பு சாதனங்கள் உதவிபுரிகின்றன எனலாம்

மக்கள் தொடர்பு சாதனங்களின் சுதந்திரம்

ஆனால், அரசாங்கத்தின் அல்லது ஆற்றல் மிக்க தனியாரின் மேலாதிக்கம் இல்லாமல் சுதந்திரமாகச் செயல்படும்போதுதான் மக்கள் தொடர்பு சாதனங்கள் இந்த ஜனநாயகக் கடமையைச் சரி வரச் செய்ய முடியும். அரசாங்க நிதியுதவி யுடன் செயல்பட்டு வரும் தொடர்பு சாதனங்களை, சுயேட்சையான ஒரு குழு அல்லது குடிமக்கள் பிரதிநிதிகளின் அமைப்புக்குப் பதிலளிக்கும் பொறுப் புடையதாக ஆக்குவதுடன், தனியார் தொடர்பு சாதனங்களையும செயல்பட அனுமதிப்பதன் மூலம் அரசின் மேலாதிக்கத்தைக் குறைக்க முடியும். தொடர்பு சாதனங்களின் உரிமை ஒரு சிலரிடம் மட்டும் இருப்பதைக் குறைப்பதன் மூலமும், பிற கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மூலமும் தனியாரின் மேலாதிக்கத்தைக் குறைக் கலாம். இருந்த போதிலும், இந்த நடவடிக்கைகளின் காரணமாக மக்கள் தொடர்பு சாதனங்கள் தமது ஜனநாயகக் கடமைகளைச் சரிவரச் செய்யும் என்று நாம் உத்தரவாதம் அளிக்க முடியாது. தொடர்பு சாதனங்களின் செய்தியாளர்கள், பத்திரிகையாசிரியர்கள், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் போன்றோரின் சுதந்திர மான செயல்பாடு மற்றும் மக்களாட்சி முறைக்கு இந்தச் சாதனங்கள் ஆற்றக்

கூடிய பணிகளுக்குப் பொதுமக்களிடம் இருந்து கிடைக்கும் அங்கீகாரம் ஆகியவற்றைப் பொறுத்தே மக்கள் தொடர்பு சாதனங்களின் பாரபட்சமற்ற செயல்பாடுகள் அமையும்.

7. பிரதிநிதித்துவ மக்களாட்சிகளை, சுதந்திர மக்களாட்சி என ஏன் அழைக்கிறோம்?

முதலாவதாக, இதற்கு வரலாற்று ரீதியான காரணம் உண்டு. பெரும்பான்மையான மேற்கத்திய நாடுகள் மக்களாட்சிக்கு மாறு முன்னர் சுதந்திர நாடுகளாயின. அதாவது, அந்நாடுகளில் அனைவருக்கும் வாக்குரிமை அளிப்பதற்கு முன்னர், அல்லது முறையான அரசியல் கட்சிகள் உருவாவதற்கு முன்னர் அங்கே சுதந்திரமான அரசியலமைப்பு முறை உருவானது. அந்த அமைப்பின் முக்கியமான அம்சங்களாவன: தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம் அங்கீகரித்த சட்டங்களுக்கு அரசாங்கம் அல்லது நிர்வாகம் கீழ்ப்படிந்து செயலபடுவது (சட்டத்தின் ஆட்சி). தனிமனிதர்களுக்கான பேச்சுரிமை, சங்கம் அமைக்கும் உரிமை, சுதந்திரமான இயக்க உரிமை, முறையான சட்ட வழியைப் பின்பற்றும் உரிமை போன்றவற்றுக்கு உத்தரவாதம் அளித்தல்; சட்டத்தின் பாதுகாவலனாகவும் தனிமனிதர்களின் உரிமைப்பாதுகாவலனாகவும் செயல்படுவதற்காக நாடாளுமன்றத்தையும், நிர்வாகத்தையும் சார்ந்திராத சுயேச்சையான நீதித்துறை ஆகியவையாகும். இத்தகைய சுதந்திரமான அரசியலமைப்புக் கூறுகள் இல்லாமல், அனைவருக்கும் வாக்குரிமை அளித்து, அரசியல் கட்சிகள் உருவாக வழி செய்த மக்களாட்சிகள் ஆட்டங்கண்டு விட்டதை வரலாறுகள் காட்டுகின்றன

சட்டத்தின் ஆட்சி

சுதந்திரமான அரசியலமைப்பும், மக்களாட்சியும ஏன் சேர்ந்தே இருக்கின்றன என்பதற்கு, சட்டததின் ஆட்சி இன்னொரு நண்டமுறைக் காரணத்தை நமக்குக் காட்டுகிறது இன்றைய நிலையில் ஓர் அரசாங்கத்திற்கு அபரிமிதமான அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு தனிமனிதனையும் போல அரசாங்கம் சட்டத்திற்குக் கட்டுப்படாவிட்டால், அரசாங்கம் தான் இயற்றும் சட்டங்களுக்கு முறைப்படி நாடாளுமன்றத்தின் அங்கீகாரததைப் பெறாவிட்டால், குடிமக்களின் சுதந்திரத்தை மதிக்காவிட்டால், மக்கள் விரும்பாத நடவடிக்கைகளை மேற்கொண்டால், அரசாங்கத்தின் மீது மக்கள் செலுத்தும் கட்டுப்பாடு விரைவாகக் குறைந்துவிடும். மக்களாட்சி என்பது, மக்கள் விரும்புகின்ற அனைத்தையும் ஒரே நேரத்தில் அலலது மிகக் குறுகிய காலத்திற்குள் நிறைவேற்றக் கூடியது அன்று; மாறாக, காலப் போக்கில்தான் மக்கள் தமது செல்வாக்கை நிலை நாட்டுவதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு அரசாங்கத்தின் மீது தமது கட்டுப்பாட்டைச் செலுத்த முடியும். எனவே, ஏற்கெனவே குறிப்பிட்டது போல சட்டத்தின் ஆட்சி, சட்டமியற்றும் அவை, நீதித்துறை, நிர்வாகத் துறை ஆகியவற்றுக்கு இடையேயான அதிகாரப் பகிர்வு, தனிமனித உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் பாதுகாப்பு ஆகியவை மக்களாட்சிக்கு அடிப்படையான அம்சங்கள் ஆகும்.

அரசியலமைப்பு முறையும் மக்களாட்சியும்

இந்த அம்சங்களுடன் மக்களாட்சியின் பிற கூறுகளும் எழுதப்பட்ட அரசிய லமைப்பும் சிறப்பாகப் பேணிக்காக்கப்படும் என்பதையே அரசியலமைப்புக் கோட்பாடு என்ற சொல் குறிப்பிடுகிறது. இதில் குடிமக்களின் மற்றும் நாட்டின் பல்வேறு அங்கங்களின் உரிமைகளும் கடமைகளும் திட்டவட்டமாக வரை யறுக்கப்பட்டு வெளிப்படையாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. ஆட்சிப் பொறுப்பை ஏற்பவர்கள் கட்சி வேறுபாடுகள், மற்றும் குறுகிய நலன்களுக்கு அப்பாற்பட்டு அரசியலமைப்புக்கு விசுவாசமாக இருப்பதாகப் பதவிப் பிரமாணம் ஏற்றுக் கொள்வதும், அரசியலமைப்பைத் திருத்த வேண்டுமானால் அறுதிப் பெரும்பான்மை அல்லது கருத்துக் கணிப்பு போன்றவை அவசியமாகும் என விசேஷ நடைமுறைகள் வகுத்திருப்பதும், அரசியலமைபபின் உயர் நிலையைப் புலப்படுத்தும் எனினும், அரசியலமைப்பின் ஷரத்துக்களை அமல் படுத்துவதற்கான அதிகாரமும் திடச்சித்தமும் கொண்ட சுயேட்சையான நீதித்துறையும், அரசியலமைப்பைப் பேணிக்காப்பதற்கு விழிப்புணர்வுடைய பொதுமக்களும் இருக்கும் போதுதான், எழுதப்பட்ட அரசியலமைப்பும் பாதுகாப பானதாக இருக்கும்.

8. சுதந்திரமான மக்களாட்சி ஒன்று மட்டுமே நடைமுறைச் சாத்தியமான மக்களாட்சியா?

சுதந்திரமான பாரம்பரியம் இல்லாத சூழ்நிலையில், அதிலும் குறிப்பாக ஒற்றைக் கட்சி முறையில், தேசிய அளவில் மக்களாட்சியை உருவாக்கப் பல முயற்சிகள் இருபதாம் நூற்றாண்டில மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் பரவலாகக் காணப்படுவது பொதுவுடைமை முறையாகும். அங்கே, புரட்சியால் மக்கள் பெற்ற பயன்கள் அழிந்துவிடாமல் காக்கவும், அரசியல் நடைமுறையில் தனிச் சொத்தையும் சில பிரிவினரின் தன்னலப் போக்கையும் நீக்கி விடவுமே ஒற்றைக் கட்சி முறையைப் பின்பறறுவதாகக் கூறுகின்றனர். கீழ்நிலையில் இருநது மக்களின் எண்ண ஓட்டங்களைப் பெறுவதற்கான வழியாகவும், அரசாங்கக் கொள்கைக்கு ஆதரவாக மேல் நிலையில் இருந்து மக்களைத் திரட்டும் வழி யாகவும் அங்கே ஆளுங்கட்சி அமைந்துள்ளது

பதிலளிக்கும் பொறுப்பு இன்மை

இவை எல்லாவற்றுக்கும் பின்னணியில் நிச்சயமாக ஏதேனும் மக்களாட்சி நெறியின் தூண்டுவிசை இருந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு சொல்லிக் கொள்ள இப்போது யாரும் விரும்புவதில்லை. எனினும் பேச்சுரிமையும், சங்கம் அமைக்கும் உரிமையும் இல்லை என்றால், கட்சி மேலிடம் அங்கீகரிக்கின்ற கருத்துக்களை மட்டுமே வெளியிடவேண்டும் என்றும், அது சொல்கின்ற அமைப் புகளை மட்டுமே உருவாக்கலாம் என்றும்தான் அர்த்தமாகிறது. எனவே அரசாங்கக் கொள்கைகளிலும் ஆட்சியிலிருப்போரின் பதிலளிக்கும் பொறுப்பு களிலும் மக்களுக்கு உள்ள செல்வாக்கு மிகச் சொற்பமானதாகவே இருக்கும். பொதுவுடைமை ஆட்சி முறைகளில் பொருளாதாரச் சாதனைகள் கணிசமான அளவில் நிகழ்த்தப்பட்ட போதிலும் அவை, எதேச்சாதிகார ஆட்சியாகவும்,

அடக்குமுறை ஆட்சியாகவும், சட்ட விரோத ஆட்சியாகவுமே இருக்கின்றன; மேலும், 'காவல் அரசு' என்ற நிலையிலேயே அவை தொடர்ந்து நீடிக்கின்றன.

ஒற்றைக் கட்சி ஆட்சி

பொதுவுடைமை அல்லாத முறையில் ஒற்றைக் கட்சி மக்களாட்சி முறைகளை ஏற்படுத்த முயன்ற ஆப்பிரிக்க நாடுகளின முயற்சிகளும் இவ்வாறே தோற்றுப் போயின. இருந்தாலும் அந்த முயற்சிகள் பாராட்டுக்குரியவையே. பல கட்சிகளின் போட்டியினால் ஏற்படும் பிரிவினைகளை ஒற்றைக் கட்சி முறை தடுக்கும் என்று அதனை ஆதரித்தவர்கள் கூறினர். அதிலும் குறிப்பாக, இனவழிப் பிரிவினைகள் மிகுந்திருந்த சமூக அமைப்புகளில், 'விசுவாசமான எதிர்ப்பு' என்பது அன்னியமான நிலையில் மரபு வழியான கருத்தொருமிப்பினை எட்ட ஒற்றைக் கட்சி முறையே உகந்தது என்றனர். அந்த ஒற்றைக் கட்சியையும் அதனுடைய அங்கீகரிக்கப்பட்ட செயல்திட்டத்தையும் தாண்டி போட்டிகள் ஏதும் இல்லை என்றாலும், தேர்தல் சமயத்தில் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கவும், மக்கள் ஒப்புக் கொள்ளாத அமைச்சர்களைப் பதவியிலிருந்து நீக்கவும் மக்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும். ஆனால் ஆளுங்கட்சிக்கு எதிராக மக்கள் திரண்டு ஓர் அமைப்பை உருவாக்கி, தேர்தலில் அதனை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு வாய்ப்பு இல்லாததால் அரசாங்கமும் எதேச்சாதிகாரமாகிவிடுவதுடன் அரசியல் தலைவர்களும் மக்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்பற்றவர்களாகி விடுவர். மேலும், திட்ட வட்டமான அதிகாரப் பிரிவினை ஏதும் இல்லாததால், சட்டத்தின் ஆட்சி, சிவில் உரிமைகள் பாதுகாப்பு, நாடாளுமன்றத்தின் வாயிலாக அரசாங்கம் மக்களுக்கு பதிலளிக்கும் பொறுப்பு போன்ற எவற்றுக்குமே அங்கே உத்தரவாதம் கிடையாது.

சுதந்திரச் சூழலும் மக்களாட்சியும்

இந்த வரலாறுகளைப் பார்க்கும்போது, சுதந்திரச் சூழல் இல்லாமல் மக்களாட்சியை உருவாக்கும் முயற்சிகள் யாவும் நிச்சயமாகத் தோற்றுப்போகும் என்ற ஒரே முடிவுக்கு நாம் வரவேண்டியுள்ளது சுதந்திரமாகச் சங்கம் அமைக்கும் உரிமையிலும், பகிரங்கமான தேர்தல் போட்டிகளிலும் எந்தவிதமான பிரதிகூலங்கள் இருந்தாலும், அரசாங்கத்தின் மீது மக்கள் செல்வாக்கின் கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்கு அவை அத்தியாவசியமானவை என்பதை நிரூபித்துள்ளன. அதே போல், சட்டத்தின் ஆட்சியும், அதிகாரப் பிரிவினையும் அந்தக் கட்டுப்பாட்டைப் பயனுள்ளதாக்குவதற்குத் தேவையான வழி முறையாக அமைந்துள்ளன. சுதந்திரமான மக்களாட்சி அமைப்பிற்குள் மேலும் பல முயற்சிகளை மேற்கொள்ள வாய்ப்புகள் இருப்பதுடன், அவற்றை உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்றவாறு பயன்படுத்தவும் வாய்ப்புகள் உள்ளன. ஆனால் சிறிய அளவில் வெற்றிகரமாகச் செயல்படும் மக்களாட்சி முறையை பிரச்சினை ஏதுமின்றி தேசிய அளவில் அப்படியே பின்பற்றிவிடலாம் என்று எண்ணுவது தவறாகும். ஏனெனில் இக்கால தேசிய அரசு அபரிமிதமான அதிகாரங்களைக் கொண்டுள்ளது. நவீன காலத்தின் தொடக்கத்தில், வரம்பில்லா அதிகாரம் பெற்றிருந்த அரசாங்கத்தைப் பொது மக்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவும்,

பொதுமக்களுக்கு பதிலளிக்கும் பொறுப்புடையதாக்கவும் மேற்கத்திய உரிமைவாதிகள் போராடிய வரலாறுகள் இன்றைய மக்களாட்சிக கோட்பாட்டாளர்களுக்கு முக்கியப் பாடமாக அமைந்துள்ளன.

9. மக்களாட்சிக்குச் சுதந்திரமான சந்தைப் பொருளாதாரம் அவசியமா?

குழப்பமான இந்த வினாவுக்குத் தெளிவான விடை ஏதுமில்லை. ஒரு புறத்தில் பார்த்தால், சுதந்திரமான பரிமாற்றத்தின் அடிப்படையிலான உற்பத்தியும விநியோகமும் மக்களாட்சிக்கு உகந்ததாகத் தெரிகிறது. மக்களாட்சியைப் போலவே சந்தைப் பொருளாதாரமும், தனிமனிதர்களே அவர்களுடைய நலனைத் தீர்மானிக்க வேண்டும் என்றும், விருப்பு வெறுப்புகளைச செயல் படுத்துவதில் அவர்களே முழுப் பொறுப்பாளிகள் ஆவர் என்றும் நமபுகிறது. மக்களாட்சியில் எவ்வாறு வாக்காளர்கள் இறையாண்மை உடையவாகளாகத் திகழ்கிறார்களோ, அவ்வாறே சந்தைப் பொருளாதாரத்தில் நுகர்வோரே இறையாண்மை உடையவர், வாக்காளர்களின் ஆதரவைப் பொறுத்தே அரசியல் கட்சிகளின் வெற்றி அமைவது போல, நுகர்வோரின் ஆதரவைப் பொறுத்தே உறபத்தி நிறுவனங்களின் வெற்றி அமைகிறது மேலும் பொருளாதார முடிவுகளைப் பரவலாக்குவதன் மூலமும், வாய்ப்புகள், வளங்கள், தகவலகள் ஆகியவற்றை மக்களுக்குள்ளேயே பரவலாகத் தருவதன் மூலமும், சந்தைப் பொருளாதாரம் அரசாங்கத்தின் அதிகாரத்தை ஒரு வரம்புக்கு உட்படுத்துகிறது. அரசாங்கத்தின் பொருளாதார இலக்குகளை அடையவோ, பிற அரசியல் அல்லது பண்பாட்டுப் பணிகளுக்கு நிதியளிப்பதற்காகவோ மக்களை அரசாங்கம் தன் வயப்படுத்திக் கொள்வதை, சந்தைப் பொருளாதாரம் தடை செய்கிறது இந்த வகையில் பார்க்கும்போது, சந்தைப் பொருளாதாரம் மக்களாட்சிக்கு ஆதரவானதாகத தோன்றுகிறது

சந்தைப் பொருளாதாரத்தின் பிரதிகூலங்கள்

ஆனால் இன்னொரு புறத்தில் பார்த்தால், சந்தைப் பொருளாதாரம் தன்னிச்சையாகச் செயல்படுவதால் சில சமயங்களில் உற்பத்திப் பெருக்கமும், சில வேளைகளில் உற்பத்தி மந்தமும் ஏற்பட்டு பெருமளவுக்கு நெருக்கடிகளும் சிக்கல்களும் உருவாகின்றன. சர்வதேச வாணிகத்தில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளுக்கு ஏற்ப பொருளாதாரக் கொள்கையை அரசாங்கம் தீர்மானிக்க முடியாததால் சந்தைப் பொருளாதாரத்தைப் பின்பற்றும் நாடு வெகுவாகப் பாதிப்புக்குள்ளாகிறது. மேலும் உள்நாட்டில், பல்வேறு பொருளாதாரக் காரணிகளினால் உருவாகும் செல்வத்திறன், வளம் ஆகியவற்றில் உண்டாகும் வேறுபாடுகளை சந்தைப் பொருளாதாரம் தீவிரமாக்குவதால், மக்களாட்சி முறை வலியுறுத்துகின்ற அரசியல் சமத்துவம் பலிகடாவாக்கப்படுகிறது. தொழிலாளர்களின் உழைப்பை தேவை - அளிப்பு விதிகளுக்கு உட்பட்ட ஒரு பொருளாகவே சந்தைப் பொருளாதாரம் கருதுகிறது. மக்களாட்சிமுறை குடியுரிமைக்கு வழங்கிய சமத்துவத்திற்கு இது முரணானது. எனவே, மேற்கு ஐரோப்பிய நாடுகள் தொழில் மயமான காலத்தில் அங்கே, மக்களாட்சி வாக்குரிமைக்குச் சுதந்திரமான சந்தைப்


ஓட்டளிப்பீர்
ஓட்டு
வாக்களியுங்கள்
வாக்களிப்பீர்
உங்கள் ஓட்டு
ஓட்டு
ஓட்டு
வாக்களிப்பீர் !
வாக்களிப்பீர்
வாக்களிப்பீர்
ஓட்டளிப்பீர் !
ஓட்டு
ஓட்டளிப்பீர் !
ஓட்டு
ஓட்டளிப்பீர்
வாக்களியுங்கள்
உங்கள் ஓட்டு
உங்கள் ஓட்டு
ஓட்டு
ஓட்டளிப்பீர்
ஓட்டளிப்பீர் !
ஓட்டளிப்பீர்

பலகட்சி ஆட்சிமுறை

பொருளாதாரம் ஒத்துவராது என்று, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரையிலும் அதனை எதிர்த்ததில் வியப்பேதும் இல்லை. அதே போல அடுத்தடுத்துப் பல தடையில்லா வாணிபப் பொருளாதார முறைகளைச் செயல்படுத்தும் போது தோன்றிய மக்களின் எதிர்ப்பை ஒடுக்கும் வகையில் எதேச்சாதிகார அரசாங்கங்கள் தேவையாய் இருந்ததிலும் ஆச்சர்யம் ஏதும் இல்லை. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், பொருளாதார மறுபகிர்வின் மூலமாகவும், சந்தையின் ஏற்றத் தாழ்வுகளினால் பாதிக்கப்படும் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான வழிகளைச் செய்தும், தேவையான சமயங்களில் அரசாங்கமே தலையிட்டு நெறிப்படுத்தியும், மக்களாட்சியையும் சந்தைப் பொருளாதாரத்தையும் இணைப்பதற்கு மேற்கத்திய அரசுகள் முயன்று வருகின்றன.

தெளிவில்லாத தொடர்பு

தடையில்லா வாணிப முறையின் எளிமையினால் ஈர்க்கப்படுபவர்கள், மக்களாட்சிக்கும், சந்தைப் பொருளாதாரத்திற்கும் இடையேயான குழப்பமான தொடர்பினையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நாடு முழுமைக்கும் ஓரிடத்தில் திட்டமிடுகின்ற சோஷலிஸப் பொருளாதாரத்தில், அவற்றை நிர்வகிப்பதற்குக் கட்டுப்பாடுகளற்ற அதிகார அமைப்பு தேவையாய் இருக்கிறது. சமூகத்தின் ஆற்றலையும் ஊக்கத்தையும் அரசாங்கம் உறிஞ்சிக்கொள்ள அனுமதிக்கும் சோஷலிஸப் பொருளாதாரம், பெருத்த அரசியல் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்குகின்றது. இவற்றில் எவையுமே மக்களாட்சிக்கு இணக்கமானவை அல்ல. சந்தைப் பொருளாதாரத்திற்குள்ளே சமூகத்திற்குச் சொந்தமான உற்பத்தி நிறுவனங்கள் இருந்தால், அந்த முறை, பொருளாதார ரீதியாகச் செயல்படக் கூடியதாகவோ, பலகட்சி மக்களாட்சி அமைப்புக்கு இணக்கமானதாகவோ இருக்குமா என்பது இன்னும் தீர்க்கப்படாத வினாவாகவே உள்ளது. இதுவரை செயல்பட்டவற்றில் நடைமுறைக்கு உகந்தான ஒரே ஜனநாயக சோஷலிஸம், 1945 ஆம் ஆண்டில் இருந்து மேற்கு மற்றும் வடக்கு ஐரோப்பிய நாடுகளில் செயல்பட்டு வருவதாகும். அது கூட, முதலாளித்துவத்தை முற்றிலுமாக ஒழித்ததாக இல்லாமல், முதலாளித்துவத்தை ஓரளவுக்கு மாற்றியமைத்ததாகவே விளங்குகிறது.

10. பெரும்பான்மை ஆதரவுடன் மேற்கொள்ளும் முடிவு எப்போதுமே மக்களாட்சி நெறியிலானதா?

மக்களாட்சியையும் பெரும்பான்மை ஆதரவுடனான ஆட்சியையும் ஒன்று எனக் கொள்வது எல்லாருமே செய்கின்ற தவறாகும். மக்களாட்சி என்பதற்கு நேரிடையாகப் பொருள் கொண்டால் மக்கள் எல்லோருமே ஆட்சி புரிவதாகும்; ஒரு பிரிவினர் மட்டும் மற்றவர்களை ஆளுவது மக்களாட்சியாகாது. வேறு விதமாகச் சொல்வதென்றால் மக்களாட்சியின் முக்கியமான அம்சம் என்னவெனில், முடிவெடுக்கும் உரிமையில் எல்லாருக்கும் சம பங்கு இருக்க வேண்டும் என்பதே. அவ்வாறு முடிவெடுக்கும்போது வேறுபாடுகளைக் களைய விவாதங்கள், திருத்தங்கள், விட்டுக்கொடுத்தல் போன்ற வழிகளால் பயன் விளையாதபோது பெரும்பான்மையினர் கருத்துப்படி முடிவு எடுப்பது என்பது நடைமுறையாகும். சிறுபான்மையினரை முடிவெடுக்க அனுமதிப்பது அல்லது

பெரும்பான்மையினரின் எண்ணத்தைத் தடுக்க அவர்களை அனுமதிப்பதைவிட பெரும்பான்மையினர் முடிவெடுப்பது மக்களாட்சி நெறி மிகுந்ததாகவே இருக்கும். ஆனால் அவ்வாறு முடிவெடுப்பது, சிறுபான்மையினரை செயலற்றவர்களாக்குவதாலும், அம்முடிவில் அவர்களது செல்வாக்கு ஏதும் இல்லாததாலும், அதனை மக்களாட்சி முறையின் முழு நிறைவான வெளிப்பாடாக அல்லாமல் கரடுமுரடானதொரு கருவியாகவே கருத வேண்டும்.

பரஸ்பரக் கோட்பாடு

ஒரு சமயத்தில் சிறுபான்மையினராக இருப்பவர்கள், இன்னொரு சமயத்தில் பெரும்பான்மையினராகிவிடுவர் என்றும், ஒரு முடிவில் அவர்களுடைய செல்வாக்கு இல்லை என்றாலும், இன்னொன்றில் அவர்கள் வெற்றி பெறுவதன் மூலம் அது ஈடுகட்டப்பட்டுவிடும் என்றும், பெரும்பான்மை விதியை ஆதரிப்பவர்கள் கூறுகிறார்கள். வேறுவிதமாகச் சொல்வதென்றால், பெரும்பான்மையினர் கருத்துக்குச் சிறுபான்மையினர் ஆதரவளிப்பதென்பது பரஸ்பரக் கோட்பாட்டின் அடிப்படையிலானது. அதாவது, அவர்கள் பெரும்பான்மையினராகக் கூடிய சந்தர்ப்பம் வரும்போது, அவர்களுடைய முடிவுகளை மற்றவர்கள் மதித்து ஏற்க வேண்டும். ஆனால் சிறுபான்மையினர் பின்னொரு சமயத்தில் தமது கருத்துக்களுக்கு ஆதரவு தேட முற்படுவதைப் பெரும்பான்மையினரின் முடிவு தடுத்தாலும், சிறுபான்மையினர் 'நிரந்தரமாகவே' சிறுபான்மையினராக இருக்க நேர்ந்தாலும், பெரும்பான்மை ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் முடிவு பின்னொரு சமயத்தில் சிறுபான்மையினர் வேறு விஷயங்களில் வெற்றி கண்டு ஈடுகட்ட முடியாத அளவுக்கு மிக முக்கியமான விஷயமாக இருக்கும் பட்சத்திலும், பரஸ்பரக் கோட்பாடு அர்த்தமற்றதாகிவிடுகிறது. இவை ஒவ்வொன்றையும் விரிவாக, தனித்தனியாக ஆராய வேண்டும்.

பெரும்பான்மையும் தனிமனித உரிமைகளும்

பெரும்பான்மையினரின் முடிவு (அல்லது பெரும்பான்மை ஆதரவுடன் செயல்படும் அரசாங்கத்தின் முடிவு) தனிமனிதன் அல்லது ஒரு பிரிவினரின் அடிப்படையான ஜனநாயக உரிமைகளை மீறுவதாக இருந்தால் அது மக்களாட்சிக்கு விரோதமானது. அந்த அடிப்படை உரிமைகள் என்பன - பேச்சுரிமை, சுதந்திரமான இயக்க உரிமை, சங்கம் அமைக்கும் உரிமை, வாக்களிக்கும் உரிமை, அரசாங்கப் பதவிகளுக்காகப் போட்டியிடும் உரிமை போன்ற - மக்களின் அரசியல் வாழ்வுக்கு அத்தியாவசியமான உரிமைகளாகும். இந்த அடிப்படை உரிமைகள் அனைத்தும் குடிமக்கள் அனைவருக்கும் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள நிலையே மக்களாட்சியின் அஸ்திவாரமாகும். இன்னும் சொல்லப் போனால், இந்த உரிமைகளைப் பெரும்பான்மையினர் மீறிச் செயல்படாவண்ணம் அரசியலமைப்பிலோ, உரிமைகள் மசோதாவிலோ இவற்றுக்கு விசேஷப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். இந்த அடிப்படை உரிமைகளை எந்தச் சூழ்நிலையில் நியாயமான முறையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் அல்லது இவ்வுரிமைகளை எல்லாருக்கும் அளிப்பதற்குத் தகுதிகளை நிர்ணயிக்கலாம் என்ற சிரமமான வினாவிற்குப் பின்னர் விடை காணலாம் (வினாக்கள் 59-61 ஐக் காண்க).

நிரந்தரமான சிறுபான்மை

இரண்டாவதாக, இனவழி, சமயம், மொழி, வம்சாவழி அல்லது வேறு நிரந்தரப் பண்புகளால் சிறுபான்மையானது 'நிரந்தரமான' ஒன்றாக இருந்தால், பரஸ்பரக் கோட்பாடு அர்த்தமற்றதாகி விடுகிறது. இந்தப் பிரிவுகளைப் பிளவுபடுத்தாமல அவற்றுக்கு இணக்கமாகக் கட்சிப் போட்டிகள் அமையுமானால், அத்தகைய சிறுபான்மையை ஆட்சியமைப்பினில் இருந்தும், பிற அரசியல் தாக்குறவுகளில் இருந்தும் நிரந்தரமாக நீக்கி விடலாம். இத்தகைய சிறுபான்மையினர் நிரந்தரமாகவே கீழ்ப்படிந்துள்ள நிலையில் இருப்பதைத் தடுப்பதற்குப் பலவேறான அரசியலமைப்பு உத்திகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக, அதிகாரப் பங்கீடு. அதாவது, சிறு பான்மையினரின் எண்ணிக்கைக்கு ஏற்ற விகிதத்தில் அரசாங்கத்திலும் மற்ற அரசுப் பதவிகளிலும் அவர்களுக்கு இடமளிப்பது, அவர்களுடைய அதிமுக்கியத்துவமான நலன்களுக்கு அச்சுறுத்தலை உண்டாக்குகின்ற சட்டங்களை ரத்து செய்யும் அதிகாரத்தை அவர்களுக்கு அளிப்பது, அவர்கள் சம்பந்தப் பட்ட விஷயங்களை நிர்வகிக்கப் போதிய அளவு சுயாதிகாரம் அளித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுள் எந்த உத்தி உகந்தது என்பதை அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்பவே தீர்மானிக்க முடியும். சிறுபான்மையினர் நலனைப் பாதுகாப்பதற்கு எந்த உத்தியைப் பயன்படுத்தினாலும், மக்கள் தமது பண்பாட்டைப் பின்பற்றும் உரிமை அடிப்படையான மனித உரிமையாகத் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளதால், அதற்கு அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்பு அளித்தாக வேண்டும் (வினா 63 ஐக் காண்க).

உணர்ச்சிப்பூர்வ சிறுபான்மை

இறுதியாக, 'உணர்ச்சிப் பூர்வமான' சிறுபான்மையும் உண்டு. ஒரு சமயத்தில் பெரும்பான்மை முடிவு எடுக்கப்படும்போது பாதிக்கப்படுகின்ற சிறுபான்மையினர், அம்முடிவு இன்னொரு சமயத்திலோ, பிற விஷயங்களிலோ தாம் பெரும்பான்மையாக இருந்து வெற்றி கண்டாலும் ஈடு செய்ய முடியாத அளவுக்கு மிக முக்கியமானது என்று எண்ணலாம். அத்தகைய பெரும்பான்மை முடிவுகளைச் செயல்படுத்தாமல் இருப்பதே உசிதமானதாகும். ஆனால் பரந்த எண்ணம் கொண்ட பெரும்பான்மையாக இருந்தால், அந்தச் சூழ்நிலையில் சிறுபான்மையினரின் எண்ண ஓட்டத்தை மீறிச் செயல்படுவதை விடுத்து, தனது பெரும்பான்மை பலத்தைக் கொண்டு சிறுபான்மை நலனுக்கு ஏதேனும் செய்ய முடியுமா என்று ஆராயும். அத்தகைய நிலை உருவாக வேண்டுமானால் பெரும்பான்மையினரும், அவர்களின் சார்பான அரசாங்கமும் தம்முடைய எண்ணங்களைச் செயல்படுத்தவோ, தமக்காகவே எல்லாவற்றையும் செய்து கொள்ளவோ பெரும்பான்மை விதியைப் பயன்படுத்தாமல் சுய கட்டுப்பாட்டுடன் செயல்பட வேண்டும்.

11. மக்களாட்சியில் தனிமனிதன் சட்டமறுப்பில் ஈடுபடலாமா?

சில முக்கியமான கோரிக்கைகளுக்காகவும், பொது நலன்களுக்காகவும் சட்ட மறுப்பில் ஈடுபடுவதும், அஹிம்சை வழியில சட்டத்தை மீறுவதும் மக்களாட்சி வரலாற்றில் கௌரவமான இடத்தைப் பெற்றுள்ளன. குற்ற எண்ணத்துடன்

சட்டத்தை மீறுவதற்கும் இதற்கும் வேறுபாடு உண்டு. அஹிம்சை சட்ட மீறல் வெளிப்படையானது; அத்தகைய சட்ட மீறலில் ஈடுபடுவோர் தமமீது வழக்குத் தொடரப்படுவதற்கு அஞ்சுவதுமில்லை, தண்டனைகளைக் கண்டு ஓடி ஒளிவதுமில்லை அரசாங்கத்தால் அல்லது அதிகாரம்மிக்க தனியாரால் பொதுமக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும், தொடரும் கொடுமைகளையும் பற்றிச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக மேற்கொண்ட பிற முயற்சிகள் யாவும் பலன் தராமல் போன நிலையில பின்பற்றப்படுவதுதான் அஹிம்சை வழிச் சட்டமறுப்பு. மக்களைத் திரட்டி எதிர்ப்பதன் மூலம் பொல்லாங்குக் கொள்கைகள் செயல்படாமல் நிறுத்தி வைப்பதுதான் சட்ட மறுப்பு எனினும் மக்களாட்சி முறையில் ஒப்புதல் பெற்றுள்ள சட்டத்தை இவ்வாறு மீறுவது பரஸ்பரக் கோட்பாட்டைத் தகர்த்து விடுமாதலால், வேறு வழியே இல்லாத சூழ்நிலைகளில் கடைசி அஸ்திரமாகத்தான சட்ட மறுப்பைப் பின்பற்ற வேண்டும்

சட்டத்தின் கட்டுக்கோப்பான தன்மை

சட்ட மறுப்பை எதிர்ப்பவர்கள், சட்ட மீறல் ஒருபோதும் நியாயமாகாது என்கின்றனர் நாகரிக சமுதாயத்தின் அடித்தளமாக விளங்கும் சட்டத்தைத் தனிமனிதனோ ஒரு பிரிவினரோ மதியாமல நடப்பது, மற்றவர்களும் அதனை மதியாமல் இருக்கத் தூண்டும். ஒவ்வொருவரும் இந்த இந்தச் சட்டங்களுக்கு மட்டுமே கீழ்ப்படிந்து நடப்பது என்று தெரிவு செய்ய ஆரம்பித்தால், நாம் சார்ந்திருக்கின்ற சட்டக் கட்டமைப்பு விரைவிலேயே சீர் குலைந்துவிடும் மக்களாட்சி அமைப்பில் சட்டங்களை மாற்றியமைக்க அரசியலமைப்பு ரீதியான வழிமுறைகள் உள்ளன. தேர்தலில் வாக்களிப்பது, மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசி ஆதரவு தேடுவது, பொல்லாங்கான சட்டத்தை அல்லது கொள்கையை மாற்ற வேண்டிய தேவை குறித்து குடிமக்களையும் அரசாங்கத்தையும் இணங்கச் செய்வது போன்ற பல வழிகளைப் பின்பற்றலாம் தேர்தலில் பங்கெடுக்கும் போதே, வெற்றி பெறுகின்ற கட்சியின் கொள்கைகளை ஏற்று நடப்போம் என்று ஒப்புக் கொண்டதாகிவிடுகிறது எனவே சட்ட மறுப்பு என்பது மக்களாட்சிக்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் முரணானது.

சட்டமும் நீதியும்

தேர்தல் முடிவுகளுக்கு உடன்பட்டுச் செயல்படுவோம் என்றால், அநியாயமான ஒவ்வொரு சட்டத்திற்கும் கீழ்ப்படிவோம் என்றோ, அரசாங்கத்தின் அநியாயமான கொள்கைகளுக்கு ஒத்துழைப்புத் தருவோம் என்றோ ஏற்றுக் கொண்டதாகாது என சட்டமறுப்பை ஆதரிப்பவர்கள் கூறுகிறார்கள். சில சமயங்களில் அரசியலமைப்புக்கு உட்பட்ட எதிர்ப்புகளும் பரிகாரங்களும் வெற்றி பெற நீண்டகாலமாகலாம்; ஆனால் பொல்லாங்குச் சட்டத்தின் உடனடியான பாதிப்பை ஈடுசெய்ய முடியாததாக இருக்கலாம். மேலும், நடைமுறையில் பார்த்தோமானால், அரசாங்கம் மற்றும் பலம்வாய்ந்த சுயநலச் சக்திகளின் பிரச்சாரப் பெருமழையில் சாதாரணக் குடிமகனின் கூக்குரல் அடிபட்டுப் போய்விடுகிறது. இந்த வகையில் பார்த்தோமானால், மக்களின் எதிர்ப்புகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு சமூகச் சட்டமறுப்பு மக்களாட்சிக்குத்

துணையாக இருக்கிறதே ஒழிய எதிர்ப்பானதாக இல்லை. எனினும் ஒரு சட்டம் சரியா தவறா என்பதைத் தனிமனித மனச்சாட்சியே தீர்மானிக்க வேண்டும்; அடக்குமுறைச் சட்டங்களைத் தொடர்ந்து நீடிக்கவிட்டு எதையுமே செய்யாமல் இருப்பதன் மூலம் எவரும் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது. அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிராக சட்ட மறுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதைக் காட்டிலும் எதிர்ப்புக் காட்டாமல் அவற்றுக்கு அடிபணிந்து போனதால்தான் பெருத்த நாசம் ஏற்பட்டுள்ளதை வரலாறுகள் நமக்குக் காட்டுகின்றன.

தனிமனிதனின் மனச்சாட்சி

பொதுவான விஷயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கூறி, இந்தக் கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க முடியாது. ஒவ்வொன்றின் சூழ்நிலையைப் பொறுத்தும், முரண்பாடான கோட்பாடுகள் மற்றும் அவற்றின் விளைவுகள் பற்றிய மதிப்பீடுகள் ஆகியவற்றுக்கு இடையிலான சம நிலையைப் பொறுத்துமே நாம் தீர்மானிக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் இறுதியில், ஒவ்வொரு தனி மனிதனும் தன்னுடைய மனச்சாட்சியின்படியேதான் தீர்மானிக்க வேண்டி யிருக்கும். இராணுவத்தில் கட்டாய சேவை புரிய வேண்டும் என நிர்ப்பந்திக்கும் போது ஒருவரின் மனச்சாட்சி எதிர்த்தால், அதற்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்று தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே பல நாடுகளில் வேறு வகையான சேவைகளுக்கு வழிசெய்து, மனச்சாட்சியின் எதிர்ப்புக்கு மதிப்புக் கொடுக்கின்றனர்.

12. தேசியத்திற்கும் மக்களாட்சிக்கும் ஏதேனும் தொடர்பு இருக்கிறதா?

இக்காலகட்டத்தில் தேசியமும் மக்களாட்சியும் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்கின்ற கருத்துக்களாகும் என்று பலரும் கூறுகின்றனர். அரசியல் அதிகாரம் அனைத்தும் மக்களிடமிருந்தே தோன்றுகின்றன என்ற பிரெஞ்சுப் புரட்சியின் கோட்பாட்டில் இருந்துதான் இவ்விரண்டும் உருவாயின என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர். மக்கள் தம்முடைய தேசத்திற்குள் சுயநிர்ணயத் திறம் பெற்ற வர்கள் என்ற தேசியவாதக் கருத்தும், மக்கள் தம்முடைய விவகாரங்களைத் தாமே தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்ற மக்களாட்சிக் கோட்பாடும் கிட்டத்தட்ட ஒரே அர்த்தமுடையவை. மக்கள்தான் ஆட்சி செய்ய வேண்டும் என்றால், மக்கள் என்பவர் யாவர் என்ற அரசியல் வினா தோன்றுகிறது.

தேசியமும் விலக்கும்

ஆனால் அத்தோடு முடிந்து விடுவதில்லை. மக்களாட்சி என்பது, மக்களுக் கிடையே பல்வேறு வேறுபாடுகள் இருந்த போதிலும் எல்லாரும் பங்கெடுத்துக் கொள்கின்ற சுய நிர்ணயத்திறனை வலியுறுத்துகின்ற, அகில உலகுக்கும் பொதுவான ஒரு கோட்பாடாகும். ஆனால் தேசியம் என்பது, மக்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை வலியுறுத்தி, குறிப்பிட்ட தேசத்தின் சிறப்பியல்பான பண்பாடு, பாரம்பரியம், வாழ்க்கை முறை போன்றவற்றைப் போற்றுகின்ற தனித்துவக் கோட்பாடாகும். மக்களாட்சி எல்லாரையும் உள்ளடக்கியதாக

இருக்கையில், தேசியம் மக்களைத் தனித்தனியே பிரிப்பதாக உள்ளது. இவ்வாறு பிரிக்கின்றபோது எண்ணிக்கை அளவில் பெரும்பான்மையினரான ஒரு தேசிய குழுவின் மொழியையோ, சமயத்தையோ, இனவழித் தோற்றத்தையோ பின்பற்றாத மற்றொரு நிலப்பகுதியில் வாழும் நிரந்தரக் குடிகளுக்கு குடியுரிமையை மறுப்பது மக்களாட்சி முறைக்கு விரோதமானதாகும். ஒரு பிரதேசத்தில் உள்ள மக்கள் அனைவரும் ஒத்த தன்மையுடையவர்களாக இருந்தால் பிரச்சினை ஏதுமில்லை. ஆனால் நடைமுறையில் பார்த்தால், பல நூற்றாண்டுகளாக நடைபெற்ற குடியேற்றங்கள், படையெடுப்புகள் காரணமாக உலக மக்கள் அனைவரும் பலவாறாகக் கலந்து பற்பலப் பிரதேசங்களிலும் வசிக்கின்றனர்; எனவே ஒரு தேசிய வழியினருக்கு என்றோ, ஓர் இனவழியைச் சேர்ந்தவருக்கு என்றோ எங்கேயும் தனிநாடு உருவாக வழியில்லை.

தேசியமும் மக்களாட்சி உரிமைகளும்

தேசியக் கோரிக்கையான சுயநிர்ணயம் மக்களாட்சிக் கோட்பாட்டுடன் ஒத்திசைவது என்றாலும்கூட, ஒரே பிரதேசத்திற்குள் குடியேறிவிட்ட மக்களுக்கு சமத்துவமான அரசியல் உரிமைகளை மறுப்பதும், சிறுபான்மையினருக்கு சுயாட்சி உரிமை அளிக்க மறுப்பதும் மக்களாட்சி நெறிமுறைகளாகா. அவ்வாறு உரிமைகள் மறுக்கப்படுவதால் நாட்டிற்குள்ளேயும், நாடுகளுககு இடையேயும் அமைதிக்குக் குந்தகம் நேரும் வாய்ப்புகள் பெருமளவிற்கு இருப்பதால் அவ்விஷயம், சம்பந்தப்பட்ட நாட்டிற்குள் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டிய உள்நாட்டு விவகாரம் என்று கூறிவிட முடியாது. மனித உரிமைகளின் ஓர் அங்கமாகக் கருதப்படும் அடிப்படையான மக்களாட்சி உரிமைகள் எல்லாருக்கும் பொதுவானவை; மனித குலம் அனைத்தும் அடைய விரும்புபவை. அந்த உரிமைகள் மறுக்கப்பட்டால் அனைவருக்கும் அதில் அக்கறை உண்டு. சாவதேச சமுதாயம் அவ்வுரிமைகளை மறுக்கும் நாட்டின் மீது தடைவிதிக்க அதுவே முகாந்திரமாகும். வேறுவிதமாகச் சொல்வதென்றால், தேசியவாதம் மற்றும் இனவாதம் என்ற தனித்துவக் கோட்பாடுகளை, பொதுவான மானுட சமூகத்தைக் குறித்த அங்கீகாரத்தின் அடிப்படையிலேயே வலியுறுத்த முடியுமே தவிர, அதைக் காணிக்கையாக்கி அல்ல

13. எந்த நாடாக இருந்தாலும் மக்களாட்சி அரசை உருவாக்க முடியுமா?

மக்களாட்சி அரசு உருவாக, மேம்பட்ட நாகரிக நிலை வேண்டும் என்கிறார் 19ஆம் நூற்றாண்டின் தத்துவ அறிஞர் ஜே.எஸ்.மில். மேலைநாடுகள் அல்லாதவை அனைத்தும் தம்மைத்தாமே ஆளும் ஆற்றல் அற்றவை என்றும், மேலைநாடுகளால் நிர்வகிக்கப்படும் கருணையுள்ள சர்வாதிகார அமைப்பின் மூலமே அவற்றை ஆட்சி புரியமுடியும் என்றும் அவர் நம்பினார். இந்த இனவெறிக் கருத்தையே அந்தக் காலத்தில் இருந்த மிகவும் விவரம் அறிந்த சிந்தனையாளர்களும் கொண்டிருந்தனர். மக்கள் கல்வியறிவு பெற்றவர்களாய் இருப்பது மக்களாட்சிக்கு அனுகூலமானதுதான்; ஏனெனில், கல்வி அறிவினால் ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையேயான இடைவெளி குறைந்துவிடும். ஆனால், முறையான கல்வி அறிவு இல்லாததால் மக்கள் தம்மைப் பற்றிய பிரச்சினை

களைப் புரிந்து கொண்டு விவாதிக்கும் திறன் அற்றவர்களாக இருப்பதற்கோ, தாம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் பொறுப்பேற்றுக் கொள்ளும் திறமை இல்லாதவர்களாக இருப்பதற்கோ எந்த ஆதாரமும் கிடையாது. அதே போல், வெளியில் இருந்து வந்த பேரரசின் ஆட்சியாக இருந்தாலும் சரி, உள் நாட்டிலேயே தோன்றியதாக இருந்தாலும்சரி, சர்வாதிகார ஆட்சி கருணையுள்ள ஆட்சியாக இருந்ததற்கு ஆதாரமே கிடையாது.

மக்கள் போராட்டம்

மக்கள் ஒன்றுபட்டுப் போராடாமல் ஜனநாயகம் மலர்ந்ததென்பது வரலாற்றில் மிக அரிதே. சில சமயங்களில் இந்தப் போராட்டங்கள் வெகுகாலம் நடைபெற்றிருக்கின்றன. பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இப்போராட்டங்களில் உயிரையும் உடைமையையும் இழந்திருக்கிறார்கள். தம்முடைய அடிப்படையான விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு மக்களாட்சி அரசு தேவை என்பதை மக்கள் உணர்ந்து, பின்னர் ஒன்று திரண்டு அக்கோரிக்கைக்காகப் போராட வேண்டும். அதாவது மக்களாட்சி என்பது அப்படியே மேலிருந்து குதித்து வந்து விடாது. பரம்பரை பரம்பரையாக ஆட்சி புரிந்தவர்கள், இராணுவ சர்வாதிகாரிகள், கம்யூனிஸ அப்பராட்சிக்குகள் (apparatchiks). ஆயுள் கால அதிபாகள், அன்னிய ஆட்சியாளர்கள் என்று எவருமே தாமே முன்வந்து பதவி விலகியதில்லை. அவர்களுடைய ஆட்சியில் மக்கள் அதிருப்தி அடைந்து திரண்டு எழுந்தபோது, தாம தொடர்ந்து ஆட்சியில் நீடித்தால் ஒழுங்கு சீர்கெட்டு ஆட்சியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்று உணர்ந்த பின்னரே அவர்கள் அதிகாரத்தைக் கைவிட முன் வந்திருக்கின்றனர்.

சர்வதேச ஆதரவு

ஒரு நாட்டில் மக்களாட்சி சக்திகள் வெற்றி பெற்று, மக்களாட்சி அரசியலமைப்பு உருவாவதற்கு வெளிநாட்டு மக்களாட்சிகளின் அதரவு நிச்சயம் உதவிகரமாக இருக்கும். ஆனால் பனிப் போர் (Cold War) நடைபெற்ற சமயத்தில் மேற்கத்திய மக்களாட்சிகள், பொதுவுடைமை அரசுகள் மற்ற நாடுகளில் பரவுவதைத் தடுப்பதிலேயே அதிக அக்கறை கொண்டிருந்ததால், மக்களாட்சி விரோத அரசுகள் சிலவற்றை அதிகாரத்தில் தொடர்ந்து நீடிக்க அவை உதவி செய்தன. பனிப் போர் முடிவுக்கு வந்த பின்னர் தற்போது மக்களாட்சி இயக்கங்களையும் மக்களாட்சி அரசுகளையும் நோக்கி சர்வதேச ஆதரவு திரும்பியிருக்கிறது. இத்தகைய ஆதரவு முக்கியமானதுதான் என்றாலும், எதேச்சாதிகார அரசை எதிர்த்து மக்கள் தாமே போராடுவதற்கு அது ஈடாகாது. ஒரு நாட்டின் மீது அதற்கான சுய-அரசை வெளியில் இருந்து திணிப்பது அகமுரணானதே, எப்படியிருந்தாலும் அத்தகைய அரசு வெகு காலம் நீடிக்காது.

14. மக்களாட்சியை அடைந்த பின்னர் எவ்வாறு தொடர்ந்து பேணுவது?

இதற்கு எளிய உபாயம் ஏதுமில்லை. மேற்கத்திய மக்களாட்சிகள் அவ்வப்போது மேல்தட்டு ஆட்சியாளர்களாலும், இராணுவ சர்வாதிகாரிகளாலும், பாஸிசவாதி

களாலும் பல முறை அலைக்கழிக்கப்பட்டு வெகு காலத்திற்குப் பின்னரே நிலை பேற்றை எட்டியுள்ளன. அண்மையில் உருவான சில மக்களாட்சிகள் தொடர்ந்து நீடிப்பதற்கான சூழ்நிலை மிகவும் அனுகூலமில்லாததாக இருக்கலாம். அங்கே சமூகப் பிரிவினைகள் ஆழ வேரூன்றி, சுதந்திர அரசியல் அமைப்பில் இடம் பெற்றுவிடலாம்; அல்லது மக்களின் நியாயமான அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியாத அளவிற்கு பொருளாதாரம் மிகவும் நலிந்து போய் இருக்கலாம்; அல்லது இராணுவ அதிகாரம் ஓங்கி, அது அரசியல் நடத்த எண்ணம் கொண்டிருக்கலாம்.

மக்களாட்சி ஒருங்கிணைப்பு

பிரதிகூலமான சூழ்நிலைகளில் மக்கள் அதிகாரம் அற்றவர்கள் என எண்ணுவது தவறாகும். தவிர்க்க முடியாமல் வரும் நெருக்கடிகளை எதிர்த்துச் சமாளிக்கும் வகையில் மக்களாட்சி அமைப்புகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளை அச்சமயங்களில் மேற்கொள்ள வேண்டும். பல விஷயங்களைப் பொறுத்தே இந்த ஒருங்கிணைப்பு உள்ளது. எடுத்துக்காட்டாக, நீதித்துறை, அரசியலமைப்பு வழக்குரைஞர்கள், நாடாளுமன்ற எழுத்தர்கள், தேர்தல் அதிகாரிகள், சிவில்பணி அலுவலர்கள் போன்று அரசாங்கத்தில் முக்கியப் பதவிகளை வகிப்பவர்களின் தகுதியையும், அவர்கள் பெற்றுள்ள பயிற்சியையும் சொல்லலாம். அரசியல் கட்சிகளும் முறையாக உருப்பெற்று தம்முடைய தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்கும் வாய்ப்புகள் பெற்றிருக்க வேண்டும். சிவில் சமுதாயத்தின் முகமையான அமைப்புகளான தகவல் தொடர்பு சாதனங்கள், தொழில்துறை, தொழிற்சங்கங்கள், அரசு சாராத அமைப்புகள் போன்றவை அரசாங்கத்தின் சார்பு எதுவும் இன்றி சுயேட்சையாகச் செயல்படும் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். மக்களாட்சி மற்றும் அரசியலமைப்பு நெறிகளில் ஈடுபாடு கொண்டவர்களாக மூத்த அரசியல் தலைவர்கள் இருப்பதுடன், உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் திறன் பெற்றவர்களாகவும் அவர்கள் இருப்பதைப் பொறுத்தும் மக்களாட்சி ஒருங்கிணைப்பு உருவாகும்.


இருமுனைப் போராட்டம்

மக்களாட்சி நெறி தொடர்ந்து நீடிக்க வேண்டுமானால் ஒரே சமயத்தில் இரு முனைப் போராட்டம் நடக்க வேண்டும். ஒரு புறத்தில் சுதந்திர ஸ்தாபனங்களை ஏற்றுக் கொள்ளாமலும், அரசியல் நடவடிக்கைகளில் பொதுமக்களின செல்வாக்கை ஒப்புக் கொள்ளாமலும் இருக்கும் மக்களாட்சி விரோத சக்திகளை எதிர்த்துப் போராட வேண்டும். இன்னொரு புறத்தில், வெற்றி பெறுபவர்களே எல்லாப் பரிசுகளையும் பெறுகின்ற விளையாட்டுப் போட்டியாக அரசியலை நினைத்துக் கொண்டு, ஆட்சியைப் பிடிக்கப் போட்டியிடும் பிரிவினைச் சக்திகளைக் கட்டுப்படுத்தப் போராட வேண்டும். முதலாவது போராட்டம், மக்களாட்சி நீடித்திருக்க வேண்டும், அதற்கு அபாயம் நேரும்போது எதிர்த்துத் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்ற அக்கறை கொண்டுள்ள சமுதாய அமைப்புகளின் அளவைப் பொறுத்திருக்கிறது. இரண்டாவது போராட்டம், அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் கட்டுப்பாடும், அரசியல் எதிராளிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த விருப்பமும், மற்றவர்களின் அரசியல் உரிமைகளைப்

பொதுமக்கள் அனைவரும் மதித்து நடக்க வேண்டும் என்ற எண்ணமும் கொண்டிருப்பதைப் பொறுத்திருக்கிறது.

15. செயல்படும் மக்களாட்சியின் முக்கியக் கூறுகள் யாவை?

ஒரு மக்களாட்சி முறை செயல்படுவதற்கு நான்கு முக்கியமான கூறுகள் அவசியமாகும். அவையாவன: (1) சுதந்திரமான, நேர்மையான தேர்தல்கள் (2) வெளிப்படையான பதிலளிக்கும் பொறுப்புள்ள அரசாங்கம் (3) சமூக மற்றும் அரசியல் உரிமைகள், (4) மக்களாட்சி நெறியுடைய சமுதாயம். இந்தக் கூறுகள் முந்தைய கேள்விகளில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. எனினும் இனி வரும் வினாத் தொகுதிகளுக்கான அடிப்படைக் கட்டமைப்பாக விளங்குவதால் இக்கூறுகள் இன்னும் முறையாக விவரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கூறும் ஒட்டுமொத்தமான அமைப்புக்கு அத்தியாவசியமான வகையில் ஒரு 'மக்களாட்சி பிரமிடு' ஆக இந்தக் கட்டமைப்பை வரைந்து காட்டலாம் (படம் 1).



படம் 1 மக்களாட்சி பிரமிடு

சுதந்திரமான நேர்மையான தேர்தல்கள்

ஆட்சியாளர்களை மக்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்புள்ளவர்களாக்குவதுடன் மக்களின் கட்டுப்பாட்டுக்குரியவர்களாகவும் ஆக்க, போட்டித் தேர்தல்கள்

பிரதான காரணியாக உள்ளன. பதவிக்குப் போட்டியிடுவதிலும், வாக்குகளின் மதிப்பிலும், குடிமக்களிடையே அரசியல் சமத்துவம் நிலவுவதற்கும் தேர்தல்கள் முக்கியக் காரணியாக உள்ளன. 'சுதந்திரமான, நேர்மையான தேர்தல்' என்பது, முதலாவதாக, தேர்தல் முறையைக் குறிப்பிடுகிறது. அதாவது எந்தெந்தப் பதவி களுக்குத் தேர்தல் நடத்தப்படவேண்டும், யார் யாரெல்லாம் அவற்றுக்குப் போட்டியிடலாம், எந்தச் சமயத்தில் தேர்தல் நடத்தப்படவேண்டும், வெற்றி பெறுபவர்களைத் தீர்மானிக்க வாக்குகளை எவ்வாறு தொகுக்க வேண்டும் என்பன போன்றவையே தேர்தல் முறையாகும். இரண்டாவதாக வருவது. தேர்தல் செயல் முறை, அதாவது, வாக்காளர்களைப் பதிவு செய்வது முதற்கொண்டு, தேர்தல் பிரச்சாரம், வாக்குகளை எண்ணுவது வரை எவ்விதப் பாரபட்சமும் இன்றி சட்டத்தைக் கடுமையாக அமல்படுத்தி, தேர்தல் முடிவுகளைக் கேள்விக் குரியவையாக்குகின்ற வகையில் முறைகேடுகள் ஏதும் நிகழாமல் தேர்தல்களை நடத்துவதே செயல் முறை.

வெளிப்படையான, பதிலளிக்கும் பொறுப்புள்ள அரசாங்கம்

மக்களாட்சியில் பொதுமக்களுக்கு அரசாங்கம் பதிலளிக்கும் பொறுப்பு ஒரு புறம் பார்த்தால் சட்ட ரீதியான பொறுப்பாகும், அதாவது, ஆட்சியில் உள்ளோர் அனைவரும் சட்டத்தை மதித்து நடப்பதாக, நீதிமன்றங்களுக்குப் பொறுப்புடை யவர்களாக இருப்பது (சட்டத்தின் ஆட்சி). இன்னொரு புறத்தில் அரசியல் பொறுப்புடைமை. அதாவது, அரசாங்கத்தின் கொள்கைகள், செயல்பாடுகள் குறித்து நாடாளுமன்றத்திற்கும் மக்களுக்கும் பதிலளிக்கும் பொறுப்பு அரசிய லமைப்பைப் பேணிக்காக்கும் அதிகாரமும், குற்றவாளி இன்னாரென்று தீர் மானித்து குற்றங்களுக்குத் தண்டனை அளிக்கும் அதிகாரமும் பெற்றவையாய், அரசாங்கத்தின் கட்டுப்பாடு இல்லாமல் சுயேட்சையாய் நீதிமன்றங்கள் செயல் படுவதைப் பொறுத்தும், சட்டம் இயற்றுதல், வரி விதித்தல், அரசாங்கச் செயல்பாடுகளை ஆராய்தல் போன்றவற்றில சுதந்திரமாக நாடாளுமன்றங்கள் செயல்படுவதைப் பொறுத்தும் தான் இந்தப் பொறுப்புடைமை உள்ளது மக்க ளாட்சி அரசாங்கம் மக்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்புடையதாய் இருப்ப துடன், பல்வேறு வடிவங்களில் வெளிப்படும் பொதுமக்கள் கருத்துக்களுக்கும், முறைப்படியான விவாதங்களில் எழும் கருத்துக்களுக்கும் செவி சாய்ப்பதாகவும் இருக்க வேண்டும்.

சமூக மற்றும் அரசியல் உரிமைகள்

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், சங்கம் அமைக்கும் சுதந்திரம், சுதந்திரமான இயக்கம் போன்றவற்றை உள்ளடக்கியதுதான் சமூக மற்றும் அரசியல் உரிமை கள். சமுதாயத்தில் தம்மைத் தாமே ஓர் அமைப்பாக உருவாக்கிக் கொள்ளவோ, அரசாங்கத்தின் மீது தமது தாக்குறவை ஏற்படுத்தவோ மக்கள் அரசியல் ரீதியாகச் செயல்படுவதற்கு இந்த உரிமைகள் அவசியத் தேவைகளாகும். மனித உரிமை களின் அங்கமாக, தனி மனிதர்களுக்கு இந்த உரிமைகள் உத்தரவாதமளிக்கப்பட் டிருந்தாலும், கூட்டாகச் செயல்படுவதில் தான் இவற்றின் மதிப்பு அடங்கியுள்ளது. அதாவது, பொது நோக்கங்களுக்காக மற்றவர்களுடன் இணைந்து கொள்வது

ஆதரவு திரட்டுவது, மக்களின் எண்ண ஓட்டத்தில் தாக்குறவை ஏற்படுத்துவது போன்றவற்றில்தான இவற்றின் மதிப்பு அடங்கியுள்ளது. எனவே தனிமனித உரிமைகளைப் பொது நோக்கங்களுக்கும், கூட்டாக முடிவெடுத்தலுக்கும், மக்களின் கட்டுப்பாட்டைச் செயல்படுத்துவதற்கும் எதிரிடையாக எண்ணுவது தவறானதாகும். ஏனென்றால், தனிமனித உரிமைகளே எல்லாவற்றுக்கும் அவசியமான அடிப்படையாகும்.

மக்களாட்சி நெறியுள்ள சிவில் சமூகம்

சிவில் சமூகம் என்பது, அரசுத் தலையீடு அற்ற பல்வேறு சமூக அமைப்புகளைக் கொண்டதாக மக்களாட்சி திகழ வேண்டும் என்பதையே குறிப்பிடுகிறது. இந்த வழியில்தான் அரசாங்கத்தின் அதிகாரத்தை வரம்புக்கு உட்படுத்த முடியும். பொது மக்களின் கருத்துக்களைக் கீழ்நிலையிலிருந்து உரத்து உச்சரிக்க முடியும். எதேச்சாதிகாரமான ஆட்சியை எதிர்த்துப் போராடுவதற்கான தன்னம்பிக்கையைச் சமுதாயம் பெற முடியும். அந்த அமைப்புகள் சுதந்திரமானவையாக இருப்பதுடன், அவற்றின் செயல்பாடும் மக்களாட்சி ரீதியாக அமைய வேண்டும். ஏனெனில் சமூகத்தின் பிற அமைப்புகள் எதேச்சாதிகாரப் போக்கில் செயல் பட்டால் தேசிய அளவில் மக்களாட்சி மிக நலிந்த நிலையிலேயே செயல்படும். மக்கள், வீட்டிலும், பள்ளியிலும், கோயிலிலும் எதேச்சாதிகார அமைப்பிலேயே வாழ்ந்து, சுயமான அமைப்புப் பற்றிய அனுபவமோ, பணியிடத்திலும், அண்டை அயலாரிடத்தும், தன்னார்வக் குழுக்களிலும் பங்கெடுத்து இணைந்து முடிவெடுக்கும் அனுபவமோ இல்லாமல் இருந்தார்கள் என்றால், அவர்கள் சமுதாயத்தில் அவல நிலைக்குப் பொறுப்பேற்றுச் செயல்படும் துடிப்புமிக்க குடிமக்களாக இருக்க முடியாது

2

சுதந்திரமான, நேர்மையான தேர்தல்கள்

16. தேர்தல்கள் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தவை?

தேசிய அளவில் இரண்டு காரணங்களுக்காகத் தேர்தல்கள் நடைபெறுகின்றன. முதலாவதாக, அரசாங்கத்தின் தலைவர் அல்லது முதன்மை நிர்வாகியையும், அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கின்ற கொள்கையையும் தெரிவு செய்வது. இரண்டாவதாக, மக்களின் சார்பாக அரசாங்கத்தின் பணிகளை ஆராய்ந்து சட்டம் இயற்றுதல் வரிவிதித்தல் போன்ற விஷயங்களைக் கவனிக்கும் பிரதிநிதித்துவப் பேரவையான நாடாளுமன்றத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது. அதிபர் ஆட்சி முறையில், இந்த இரண்டு நோக்கங்களும் தனித்தனியாக்கப்பட்டு அதிபரைத் தேர்ந்தெடுக்கவும், நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவும் என இரண்டு தேர்தல்கள் நடைபெறும்; இரண்டு தேர்தல்களும் ஒரே நேரத்தில் நடக்கலாம்; அல்லது வெவ்வேறு சமயத்திலும் நடக்கலாம். பிரதமர் ஆட்சி முறை அல்லது நாடாளுமன்ற ஆட்சிமுறையில் இரண்டு நோக்கங்களையும் ஒரே தேர்தலின் மூலம் நிறைவு செய்துவிடலாம். ஏனெனில், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவைப் பெறுகின்ற கட்சியின் தலைவரையே அரசாங்கத்தின் தலைவராக நாடாளுமன்றத்தின் மற்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்து விடுவார்கள்.[1]

தேர்தல்களும் மக்களின் கட்டுப்பாடும்

வெளிப்படையான போட்டியாக, குறிப்பிட்ட கால இடைவெளியில் இந்தப் பதவிகளுக்கு நடைபெறும் தேர்தல்களே, பிரதிநிதித்துவ மக்களாட்சியில் மக்கள் தமது கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்குப் பிரதான காரணியாக அமைந்துள்ளன. மக்களிடம் இருந்து அரசியல் அதிகாரம் பெறப்பட்டு, அவர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப அது செயல்படுத்தப்படுவதையே தேர்தல்கள் காட்டுகின்றன. எனவே அந்த மக்களுக்குத்தான் அரசியல்வாதிகள் தமது செயல்கள் குறித்துப் பதில் அளிக்க வேண்டும். கடைசி அஸ்திரமாக, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் பதவியில் இருந்து இறக்கி விடமுடியும் என்ற நிலை உள்ளதால்தான், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றனர்; பதவிகளுக்கு உரிய கண்ணியத்தைப் போற்றி நடக்கின்றனர்; மாறுகின்ற சூழ்நிலைக்கு ஏற்ப

---

1. இந்தியாவில் நாடாளுமன்ற ஆட்சிமுறை உள்ளது; நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொதுத் தேர்தலில மட்டும் மக்கள் நேரிடையாக வாக்களிக்கிறார்கள்.

அரசாங்கத்தின் கொள்கைகளிலும் அலுவலர்களிலும் மாற்றங்களைக் கொண்டு வருகின்றனர்.

17. நாட்டின் தலைவரை மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமா?

நாட்டின் தலைவர்பதவி மிகவும் சம்பிரதாயமானது. கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு நாட்டின் ஒற்றுமை விளங்குகிறது என்பதையும், ஆட்சிகள் மாறினாலும் நாடு தொடர்ந்து நீடிக்கும் என்பதையும், குறிப்பிட்ட சில சட்டங்கள் தற்காலிகமானவையாக இருந்தாலும் அரசியலமைப்பு நிரந்தரமானது என்பதையும் நாட்டின் தலைவர் பதவி குறிப்பீடாக வெளிப்படுத்துகிறது. எனினும் தேசிய நெருக்கடிகள் ஏற்படும்போதும், அரசியலமைப்புச் சிக்கல்கள் தோன்றும் போதும் நாட்டின் தலைவர் தனது தன் விருப்புரிமை அதிகாரத்தைப் (discretion-ary power) பயன்படுத்த வேண்டியிருப்பதால அப்பதவி முக்கியத்துவம் பெற்று விடுகிறது.

பல்வேறு முறைகள்

அதிபர் ஆட்சிமுறையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அதிபர், நாட்டின் தலைவர் என்ற சமபிரதாயப பணியையும், அரசாங்கத்தின தலைவர் என்ற நிர்வாகப பணியையும் ஒரு சேரச் செய்கிறார் (ரஷ்யா, அமெரிக்கா, பெரும்பாலான லத்தீன் அமெரிக்க நாடுகள் போன்றவற்றில் உளளதுபோல்) நாடாளுமன்றக் குடியரசில் நாட்டின் தலைவர் நிர்வாகப் பணியைச் செய்யாத அதிபராக இருப்பார். அவரை மககளே நேரிடையாகவோ, நாடாளுமன்றத்தின் மூலமாகவோ தேர்ந்தெடுப்பர் (ஜெர்மனி, அயர்லாந்து, இந்தியா போன்ற நாடுகளில் உள்ளது போல்)[1] முடியாட்சி அரசியலமைப்புகளில் நாட்டின் தலைவர் ஒரு பரம்பரையில் இருந்து தெரிவு செய்யப்படுவார்; அவர் தன் வாழ்நாள் முழுவதும் அதிபராக இருப்பார் (பெல்ஜியம், ஸ்பெயின், இங்கிலாந்து, ஆகிய நாடுகளில் உள்ளது போல்).

எதுவுமே சிறந்தது இல்லை

இவற்றுள் மிகச்சிறந்தது எது? ஒவ்வொன்றையும் அதனதன் அரசியலமைப்பு முறையின் பின்னணியில மதிப்பிட வேண்டுமாதலால் இதற்கு நேரிடையாக விடையளிக்க முடியாது. அன்றாட அரசியல் பிரச்சினைகளால் உருவாகும் அவப்பெயர், மக்கள் விரோத கொள்கைகளால் உண்டாகும் பழி போன்றவற்றில் இருந்து நாட்டின் தலைவர் விலகி இருக்க முடியாதபடிக்கு நிர்வாக அதிபர் முறை குறையுடையது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படாமல் பரம்பரையாக வரும் முடியாட்சி அதிபரோ, மக்களாட்சி முறைக்கு எதிரானவர், அதிலும் குறிப்பாக மேல்தட்டு நிலவுடைமை வர்க்கத்தவராக அந்த அதிபர் இருக்கும்போது அவரை மக்களாட்சியர் என்று ஏற்கவே முடியாது. வேண்டுமானால் ஒன்று செய்யலாம். அதாவது, பரம்பரையாக வரும் முடியாட்சி அதிபரை மக்கள் அனைவரும்

---

1. இந்தியாவில நாட்டின் தலைவராகிய குடியரசுத் தலைவரை நாடாளுமன்றம், மாநில சட்டமன்றம் மற்றும் யூனியன் பிரதேச சட்டமன்றங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மறைமுக வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கிறார்கள்.

பங்கெடுக்கின்ற கருத்துக் கணிப்பின் மூலம் அங்கீகரிக்க வேண்டும் என்று விதிப்பதுடன், அவருடைய சிறப்புரிமைகளை எழுதப்பட்ட அரசியலமைப்பின் மூலம் ஒரு வரம்புக்கு உட்படுத்தலாம்.

18. வேறு எந்தெந்தப் பதவிகளை மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்?

தேசிய அரசாங்கத்தின் பணியில் உள்ள எல்லா சிவில் பணியாளர்களின் நடத்தைக்கும் திறமைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை நிர்வாகியே பொறுப் பேற்று, மக்களுக்கும், நாடாளுமன்றத்திற்கும் பதிலளிக்கும் பொறுப்புடையவர் ஆதலால், அத்தகைய பதவிகளுக்குக் கீழ்நிலையில் இருந்து தேர்தல் நடத்துவதைக் காட்டிலும் மேலேயிலிருந்து நியமிக்கலாம் என்று பெரும்பாலோர் கூறுகின்றனர். மேலும், அவ்வாறு முதன்முறையாக நியமனம் செய்யும் போது தகுதியுள்ள அனைவரும் அதற்குப் போட்டியிட அனுமதிக்க வேண்டும். மக்களாட்சியில் பொது மக்களுக்கான சேவைகள், மாறுபடும் உள்ளூர் சூழலுக்கு ஏற்ப, உள்ளூர்த் தேவைகளை நிறைவு செய்வதாகவும் இருக்க வேண்டும். எனவே, சுகாதாரம், கல்வி, காவல் போன்ற உள்ளூர்ச் சேவைகளைக் கண்காணித்து நிர்வகிக்கவும், உள்ளாட்சி அரசாங்கத்தின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவும் தேர்ந்தெடுக கப்பட்ட அமைப்புகள் தேவை என்பது புலனாகும்.

தேர்தல்களும் நீதித்துறையும்

நீதித்துறையும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமா? மேலோட்டமாகப் பார்த்தால், சட்டமியற்றும் நாடாளுமன்றமும, தலைமை நிர்வாகியும் தேர்ந்தெடுக்கப்படும் போது, நீதித்துறையும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று தோன்றும். ஆனால் நீதித்துறையானது அரசியல் பணியைச் செய்யாமல் சட்டப்பணியைச் செய்வ தால், அது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதைக் காட்டிலும் பாரபட்சமற்று, முறை பிறழாமல் செயல்படுவதே முக்கியமானதாகும். நீதித்துறைப் பதவிகளின் பணிக் காலம் பொதுமக்களின் ஆதரவைப் பொறுத்து நிர்ணயிக்கப்படாததாகவும், நீதித் துறை பதவியை வகிப்பவர்கள் இந்த ஒரு குறிப்பிட்ட பிரிவினரைச் சேர்ந்த வர்கள் என்று இனம் கண்டு கொள்ளாதபடியாகவும் இருக்க வேண்டும். சட்டம் இயற்றுதலும், தண்டனை அளவுகளும் மக்களின் கருத்துக்களுக்கு ஏற்ப இருப் பதை நாடாளுமன்றம் உறுதி செய்ய வேண்டுமே ஒழிய நீதித்துறையே தீர் மானிக்கும்படி விட்டுவிடக் கூடாது. நீதித்துறைப் பதவிகளுக்கு நியமனம் செய்யும்போது மகளிர், சிறுபான்மையினர் போன்றோருக்கு அனுகூலம் இல்லாத நிலை இருப்பதால், அந்நியமனம் குறித்து மக்களாட்சி சிந்தனையுள்ள அனை வரும் அக்கறை கொண்டுள்ளனர். (நீதித்துறை நியமனங்கள் குறித்து 40ஆம் வினாவில் விவாதிக்கப்பட்டுள்ளது).

19. நாடாளுமன்றத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட அவைகள் தேவையா?

ஒரு சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர் அதனை முழுமையாகப் பரிசீலனை செய்து அதற்குப் பரவலான ஆதரவைப் பெற வேண்டும். இதற்கு நாடாளு

மன்றத்தின் இரண்டாவது அவை அவசியம் என்ற விவாதம் முன்வைக்கப் படுகிறது. இந்த இரண்டாவது அவைக்கான உறுப்பினர்கள் முதலாவது அவைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையிலிருந்து மாறுபட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எங்கு கூட்டாட்சி முறை (Federal System) நிலவுகிறதோ அங்கு இதன் தேவை மிக முக்கியமானதாகும். காரணம் அதன் உறுப்புகளாகிய மாநிலங்களின் நலனைப் பிரதிபலிப்பதாக இது அமைகிறது. தனிமனித உரிமைகளுக்கு அரசியலமைப்பு ரீதியான உத்தரவாதம் இல்லாமல் சட்டங்களை இயற்றுவதைத் தடுக்கும் வழியாகவும் அது அமையும்.

வேறுபட்ட தேர்தல் முறை

பொதுவாக இரண்டு அவைகளுக்குமான தேர்தல் முறைகளும் வெவ்வேறாகவே இருக்கும். மேலவைக்கான தேர்தல் மறைமுகத் தேர்தலாக இருக்கும்; அல்லது வெவ்வேறான தொகுதிகளின் அடிப்படையில் இருக்கும்; அல்லது வெவ்வேறு காலகட்டத்தில் தேர்தல் நடைபெறலாம். அதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட சமயத்தில் ஒரு சில உறுப்பினர்களுக்கு மட்டுமே தேர்தல் நடைபெறும்.[1] நாடாளு மன்ற அமைப்பில், நாடாளுமன்றத்தின் கீழவைக்கு ஒரே சமயத்தில் நாடு தழுவிய தேர்தல் நடைபெறுவதால் அதுவே மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் பிரதான அமைப்பாக இருக்கிறது; எனவே சட்டமியற்றுவதில் அதுவே முதலிடம் பெறுகிறது. மேலவைக்கு, ஓரளவுக்குக் காலம் தாழ்த்தும் உரிமை அல்லது ரத்து அதிகாரம் மட்டும்தான் இருக்கும்.

20. எந்தக் கால இடைவெளியில் தேர்தல்கள் நடைபெற வேண்டும்?

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தீவிர மக்களாட்சிப் பற்றாளர்கள், ஆண்டுக்கொரு முறை நாடாளுமன்றத்திற்குத் தேர்தல் நடைபெற வேண்டும் என்றும், அப்போதுதான் மக்கள் தங்கள் பிரதிநிதிகள் மீது முறையான கட்டுப் பாட்டைச் செலுத்த முடியும் என்றும் கூறிவந்தனர். ஆனால் இக்காலத்தில் பொருளாதாரத்தைத் திறம்பட நிர்வகிக்கவும், கொள்கைகளை முறைப்படி அமலாக்கவும் நாடாளுமன்றத்திற்கு ஓராண்டுக்கும் மேலான கால அவகாசம் தேவைப்படுகிறது. எனவே தொடர்ந்து நீண்டகாலம் பதவியில் இருக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் கோரிக்கைக்கும், தேர்ந்தெடுக்கப்படுபவர் பொறுப்புடையவர்களாக இருப்பதற்குக் குறுகிய காலமே போதும் என்ற மக்களின் கோரிக்கைக்கும் சமரசமாக நான்காண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல்கள் நடைபெறலாம் என்று பரவலாக அனைவரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.[2]

---

1. இந்தியாவில் நாடாளுமன்றம் மக்களவை என்ற கீழவையும், மாநிலங்களவை என்ற மேலவையும் கொண்ட ஈரடுக்கு அமைப்பிலானது. மாநிலச் சட்டமன்ற உறுப் பினர்களால் மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாநிலங் களவை உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கு இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெறுகிறது.
2. இந்திய அரசிலமைப்பின்படி, நாடாளுமன்றத்திற்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பொதுத் தேர்தல் நடைபெறுகிறது.

தேர்தல்கள் நடைபெறும் நேரம்

தேர்ந்தெடுக்கப்படும் பதவிகளின் பதவிக்காலம் எத்தனை ஆண்டுகளாக இருந்தாலும், தேர்தல்களை எந்தச் சமயத்தில் நடத்த வேண்டும் என்பதை அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கம் தீர்மானிக்கும்படி விட்டுவிடக் கூடாது என்பது மிகவும் முக்கியமானதாகும். பின்னால் விவாதிக்கப்பட இருப்பதுபோல் (வினா 31ஐக் காண்க) 'சுதந்திரமான, நேர்மையான' தேர்தலுக்கு இதுவே அடிப்படையானதால், ஆட்சியில் உள்ள கட்சிக்கு நியாயமற்ற அனுகூலத்தைத் தருகின்ற வகையில் தேர்தல் நடைமுறைகள் கட்டுப்படுத்தப்படலாகாது. எனவே தேர்தல்களை எந்தச் சமயத்தில் நடத்த வேண்டும் என்று தீர்மானிப்பதிலும் இதை உறுதி செய்ய வேண்டும்.

21. வாக்களிக்கும் உரிமையை எவருக்கேனும் மறுக்கலாமா?

பெரும்பாலான மக்களாட்சிகளில் பொதுவாக, சிறுவர்கள், குற்றவாளிகள், அன்னியர்கள் ஆகியோர் வாக்களிக்கும் உரிமையில் இருந்து விலக்கி வைக்கப்படுகின்றனர். இவ்வாறு விலக்கி வைப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. உளவியல் வளர்ச்சி, பொது அறிவு ஆகியவற்றின் அடிப்படையில் பார்த்தால் ஒரு குறிப்பிட்ட வயதுக்குக் குறைந்த சிறுவர்களை வாக்களிக்கும் உரிமையில் இருந்து விலக்கி வைப்பது முறையானதே. குறிப்பிட்ட வயதுக்குக் கீழ் உள்ள சிறார்களுக்குத் தம்மை யாரும் வழிநடத்த வேண்டாத அளவிற்குத் தாமே முடிவெடுக்கப் போதிய அனுபவமோ அறிவோ இருப்பதில்லை. பெரும்பாலான சமூகங்களில், சிறார் தமது உரிமைகள் பலவற்றை ஒரு குறிப்பிட்ட வயதுக்குப் பின்னரே அடையலாம் என வகுத்திருக்கின்றனர். மணம் செய்யும் உரிமை, சொத்துக்களைப் பெறும் உரிமை, தானே சுயமாக, சட்டப் பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமை, தேர்தலில் வாக்களிக்கும் உரிமை போன்ற இந்த உரிமைகளைப் பெறும் நிலையை 'வயதுற்ற நிலை' எனக் கூறுகின்றனர். பொதுவாக உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்கின்ற அதிகபட்ச வயது மற்றும் கட்டாய இராணுவப் பணியாற்ற வேண்டிய வயது ஆகியவற்றை ஒத்ததாக வயதுற்ற நிலை என்பதை பதினெட்டு வயது என பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.[1]

திட்டவட்டமான வயது வரம்பு

வயது வரம்பை எப்படி நிர்ணயித்தாலும் ஒரு வகையில் அது தன்னிச்சையானதாகவே இருக்கும். இக்காலச் சிறுவர்கள் முந்தைய தலைமுறையைக் காட்டிலும் விரைவாகவே முதிர்ச்சி அடைந்து விடுகின்றனர். முழுநேர வேலைவாய்ப்புகளைப் பெறும் உரிமை போன்ற சில உரிமைகளைப் பதினெட்டு வயதுக்கு முன்னரே பெற்று விடுகின்றனர். மேலும் சிறுவர்கள் சிலரை அவர்களுக்குப் பொறுப்பான பெரியவர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டியுள்ளது என்றும், சிறார் தமது வாழ்வைத் தீர்மானித்துக் கொள்வதற்கு மிக முன்னதாகவே அவர்களுக்கு உரிமை அளித்திட வேண்டும் என்றும் கூறப்படுவதில் உண்மை

1. இந்தியாவில் 18 வயது பூர்த்தியான அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை உண்டு.

யுள்ளதையும் வருத்தத்துடன் ஒப்புக்கொண்டாக வேண்டும். எவ்வாறாயினும் முதிர்ச்சி அடைவது என்பது ஒரு தொடர் நிகழ்வாகும். எனவே, மக்களாட்சிக் குடிமகனாக உருப்பெறுவதற்கு வீட்டிலும், பள்ளியிலும் சில கூட்டு முடிவுகளை எடுப்பதில் இளமைப்பருவத்தில் இருந்தே ஈடுபட்டிருப்பதும் தேவையானதாகும். ஆனால் இந்தக் காரணங்களுக்காகப் பொதுத்தேர்தல்களில் வாக்களிக்கும் வயதைப் பதினெட்டுக்கும் கீழ் குறைப்பதற்குப் போதிய முகாந்திரம் இல்லை. மேலும், சமூகத்தில் ஓர் அந்தஸ்தும், வயதுற்றோருக்கான உரிமைகளையும் ஒரு சேரப் பெறுகின்றதாக எல்லாரும் ஏற்றுக்கொண்டுள்ள வயது வரம்புக்கு மதிப்பளிக்காமல் இருப்பதும் முறையானதாக இராது.

குற்றவாளிகளும் வாக்குரிமையும்

சட்டத்திற்கு எதிராகக் கடுமையான குற்றமிழைத்தவர்களுக்கு சட்டத்தை உருவாக்குவதில் எவ்விதப் பங்கும் இருக்கக் கூடாது என்ற வகையிலேதான் சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவிக்கும் குற்றவாளிகளுக்கு வாக்குரிமை மறுக்கப்படுவதாகக் கூறுகின்றனர். இதற்கு எதிராக, சுதந்திரம் பறிபோனதால், குடிமகனுக்கு உரிய பிற உரிமைகளை இழக்க வேண்டுமென்பதில்லையே என்றும், சிறைவாசிகள் தாம் மனிதாபிமானமற்ற வகையில் சட்ட விரோதமாக மோசமான நிலைகளில் நடத்தப்படுவதில் இருந்து பாதுகாப்புப் பெற மக்கள் பிரதிநிதிகளிடம் நெருங்கிய தொடர்பு வேண்டும் என்றும், எனவே அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வேண்டும் என்றும் எதிர்வாதம் செய்யலாம்.

குடியிருக்கும் அன்னியர்கள்

கடைசியாக, நாட்டில் குடியிருக்கும் அன்னியர்களுக்கும் வாக்குரிமை விலக்கப்படுகிறது. இங்கே வாக்குரிமையைப் பெறுவதற்குக் குடியுரிமையைப் பெறும் தகுதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கு பிறப்பு, வாரிசுரிமை போன்றவையே அடிப்படையாக இருந்த 19ஆம் நூற்றாண்டின் பரம்பரை ஆட்சி முறையை எதிர்த்துத் தோன்றியதுதான் மக்களாட்சி என்பதை நாம் ஏற்றுக் கொள்வோமானால், சட்ட பூர்வமாக ஒரு நாட்டில் குடியேறிய ஒருவருக்கு குடியுரிமை அளிக்காமல் வாக்குரிமை அளிக்கப்படலாகாது என்று கூறுவது முரணானதாகத் தோன்றும். குடியேறியவர் என்ற நிலை மாற எத்தனை ஆண்டுகள் ஆக வேண்டும் என்ற விஷயத்தில் கருத்து வேறுபாடு தோன்றலாம், ஆனால் ஐந்தாண்டுகள் என்பது முறையானதாக இருக்கும்

22. வாக்காளர்களைப் பதிவு செய்ய பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் யாவை?

வாக்காளர் பதிவு என்பது நுட்பமான விஷயம்போல் தோன்றினாலும், அதற்குப் பின்பற்றப்படும் வழிமுறைகள் வாக்குரிமையைச் செலுத்துவதில் குறிப்பிடத்தக்க அளவு முக்கியத்துவம் வாய்ந்தவை. தேர்தல் நடைபெறுவதற்கு முன்னால் வாக்காளர் பதிவேடு ஒன்று அவசியமானது. ஏனென்றால், வாக்காளர்களைத் தனித்தனியாக இனங்கண்டு, ஒருவர் ஒரு தடவைக்கு மேல் வாக்களிக்காமல்

இருப்பதையும், ஆள்மாறாட்டம் செய்யாமல் இருப்பதையும், வாக்களிக்கும் உரிமையில்லாதவர் வாக்களிப்பதைத் தடுப்பதையும உறுதிசெய்ய வாக்காளர் பதிவேடு தேவை. எனினும், குடிமக்கள் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்யவும், வாக்குரிமையைப் பயன்படுத்தவும் விரும்புவதைத் தடுக்கின்ற வகையில் பதிவுமுறைகள் அமையலாம். வாக்காளர் பதிவு தாமே முன்வந்து மேற்கொள்வதாக இருப்பதுடன், கட்சித் தொண்டர்களின் செலவில்லாத முயற்சியைப் பொறுத்து அமையலாம். தேர்தல் எப்போது நடைபெறும் என்று திட்டவட்டமாகத் தெரிவதற்கு வெகுகாலம் முன்பே இப்பணி தொடங்கலாம். அல்லது விரிவதிப்பு, திருமணமான நிலை, செய்யும் தொழில் போன்ற குடிமக்கள் பற்றிய பிற விவரங்களுக்காகவும் அந்தப் பதிவேடுகளைப் பயன்படுத்தலாம். ஆனால் சீரிய மக்களாட்சி நடைமுறையில், வாக்காளர் பதிவு கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டும். பதிவு செய்வதற்கென பயிற்சி பெற்ற அலுவலர்கள் மூலமாக, தேர்தல் நடைபெறும் சமயத்திற்கு மிகச் சமீபமாக வாக்காளர் பதிவு நடைபெற வேண்டும். அத்துடன், அரசாங்கத்தின் பிற ஆவணங்களில் இருந்து வாக்காளர் பதிவேடு தனித்த ஒன்றாகவும் இருக்க வேண்டும்.

23. வாக்களிப்பது கட்டாயமாக்கப்பட வேண்டுமா?

ஓர் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்க உதவுவதும், தமது பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுப்பதும் குடிமைக் கடமையும் உரிமையும் ஆகும் என்றும், நமது முந்தைய தலைமுறையினர் இதற்காகவே போராடினர் என்றும் கூறி, வாக்களிப்பது கட்டாயமாக்கப்படவேண்டும் என (ஆஸ்திரேலியாவில் உள்ளது போல்) வாதி டலாம். வாக்களிப்பதில் அக்கறை அற்றவர்கள், வாக்களிக்க வராதவர்கள், இறந்து போனவர்கள் ஆகியவர்களுடன் வாக்களிப்பில் பங்குகொள்ளாதவர் களையும் வாக்குச் சீட்டிலேயே பதிவு செய்ய வேண்டும் என்றும் கூறலாம். ஆனால் 'சுதந்திரமான தேர்தலில்' வாக்காளர் தமது 'உரிமைகளை'ச் செயல் படுத்துமாறு நிர்ப்பந்திப்பது முரண்பாடானது என்றும் கூறலாம். தேர்தலில் பங்கு கொள்ளாதவர்களின் எண்ணிக்கையும் பல்வேறு பிரிவு மக்களிடையே தேர்தல் புறக்கணிப்பு அதிகரித்து வருவதும், மக்களாட்சி முறையில் உள்ள குறைபாடு களைச் சுட்டிக் காட்டும் எச்சரிக்கை ஒலியாகும்.

கட்டாய வாக்காளர் பதிவு

பெரும்பாலான மக்களாட்சிகள் இரண்டாவது வாதத்தையே ஏற்றுக் கொண்டு வாக்களிப்பதை மக்களின் விருப்பத்திற்கே விட்டுவிட்டன. ஆனால், வாக்காளர் களைக் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும் என்பதற்கு இது முரணானதா? முரண்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. ஒருவர் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தப் போகிறாரா இல்லையா என்பதைத் தீர்மானிக்க, வாக்காளர் பதிவேட்டில் அவர் பெயர் இடம்பெற்றிருப்பது முன் நிபந்தனையாகும். மேலும் தொகுதிகளுக்கு இடையே வாக்காளர்களின் எண்ணிக்கையைச் சமமாகப் பிரிப்பது போன்ற தேர்தல் காரணங்களுக்காகவும் வாக்காளர் பட்டியல் பயன் படுத்தப்படலாம். எனவே வாக்காளர் பதிவு கட்டாயமானதாக இருக்க வேண்டும்.

24. வாக்களிப்பது ஏன் ரகசியமாக இருக்க வேண்டும்?

வாக்காளர்கள் அனைவரும் தமது வாக்கை எல்லாருக்கும் முன்னிலையில் செலுத்த வேண்டும்; அப்போதுதான் அவர்கள் வாக்களித்த முறையைப் பற்றி சக குடிமக்கள் வினா எழுப்பினால் விடையளிக்க முடியும்; அத்தகைய முறையினால் வாக்காளர்கள் தமது குறுகிய தன்னல நோக்கங்களை விடுத்து பொது நலனைக் கருத்தில் கொண்டு வாக்குரிமையைச் செலுத்துவர் என்று ஆங்கிலேய தத்துவ அறிஞர் ஜே.எஸ்.மில் கூறினார். பிற்காலச் சிந்தனையாளர்கள் சிலரும் இக்கருத்தையே வலியுறுத்தினர். ஆனால் நடைமுறையில் பார்த்தால், பகிரங்கமாக வாக்களிப்பதனால் அதிகாரம் மிக்க எஜமானர்கள், நிலச்சுவான்தார்கள், மத குருமார்கள் போன்ற பலராலும் வாக்காளர்களுக்கு முறையற்ற நெருக்கடிகளும் அச்சுறுத்தல்களும் நேரிடுகின்றன. மேலும் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களும் லஞ்சம் கொடுத்து ஆதரவு தேட முற்படுவர். எனவே மக்களாட்சி முறைகள் அனைத்திலும் ரகசியவாக்கு முறை என்பது தற்போது அனைவரும் ஏற்றுக் கொண்ட ஓர் அம்சமாகி விட்டது.

25. யாரெல்லாம் தேர்தலில் போட்டியிடலாம்?

வாக்களிக்க உரிமையுள்ள எவர் வேண்டுமானாலும் தேர்தலில் போட்டியிடலாம். சில நாடுகளில் வாக்காளர்களைக் காட்டிலும் வேட்பாளர்களுக்குச் சற்று அதிகப்படியான வயதை நிர்ணயித்திருப்பது[1] தேவையில்லாததாகத் தோன்றுகிறது. ஏனெனில் பொது விவகாரங்களில் முன் அனுபவம் ஏதும் இல்லாத வேட்பாளர் எவருமே பொதுப் பதவிகளுக்கு நம்பகமானவர்களாக இருக்க முடியாது.

முன்மொழிவுக்கான நிபந்தனைகள்

வேட்பாளர் ஒருவரைப் பதிவு செய்வது அல்லது முன் மொழிவதற்கான நடைமுறைகள் பற்றியது இது. தீவிரமான எண்ணம் இன்றி விளையாட்டுத்தனமாகப் போட்டியிடுபவர்களைக் கருத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட தொகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் ஆதரவுக் கையொப்பம் இட வேண்டும்.[2] அல்லது ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்டுத் தொகையாகச் செலுத்த வேண்டும் என்றும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் வாக்குகளைப் பெறாவிட்டால் கட்டுத் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது என்றும் பெரும்பாலான தேர்தல் முறைகளில் நிபந்தனையாக விதிக்கப்படுகிறது. இத்தகைய நடைமுறை காரணமாக, புதிய கட்சிகள் அல்லது புதிய இயக்கங்களைச் சேர்ந்த தீவிரமான போட்டி எண்ணம் கொண்ட வேட்பாளர்களுக்குக்கூட தேர்தலில் போட்டியிடத் தயக்கம் ஏற்படலாம். சில நாடுகளில்,

---

1. இந்தியக் குடிமகனுக்கு வாக்குரிமை வயது 18, ஆனால் 25 வயதாகும் வரை இவர்கள் சட்டசபை, மக்களவைத் தேர்தல்களில் போட்டியிட முடியாது. குடியரசுத் தலைவர், துணை குடியரசுத் தலைவர், மாநிலங்களவை உறுப்பினர், சட்ட மேலவை உறுப்பினர் ஆகிய பதவிகளுக்குப் போட்டியிடவும், மாநில ஆளுநராக நியமிக்கப்படவும் வகையறுக்கப்பட்ட குறைந்த பட்ச வயது வரம்பு 35.
2. இந்தியாவில் இது தேவையில்லை; பதிவான வாக்குகளில் 10 சதத்தை வேட்பாளர் பெறத் தவறினால் டெபாசிட் இழக்க நேரிடும்.

ஏற்கெனவே பதிவு செய்த கட்சிகளின் வேட்பாளர்கள் மட்டுமே போட்டியிடலாம்என்றிருக்கிறது. இந்தக் கட்டுப்பாடுகூட விளையாட்டாகப் போட்டியிடுபவர்களைக் குறைப்பதற்காக உள்ளது என்றாலும், கட்சிகள் மீதும் வேட்பாளர்கள் மீதும் அரசியல் ரீதியான கட்டுப்பாட்டைச் செயலுறுத்துகிறது. எனவே வாக்காளர் களின் உண்மையான கருத்தை வெளிப்படுத்தத் தடையாகி விடுகிறது.

முதற்கட்டத் தேர்தல்கள்

அமெரிக்காவில், ஒவ்வொரு கட்சியின் பதிவு பெற்ற வாக்காளர்கள் அனைவரும் முதற்கட்டத் தேர்தல் ஒன்றில் வாக்களித்து, தம் கட்சியின் சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களை முதலில் தெரிவு செய்கிறார்கள். இந்த நடைமுறையின் காரணமாக, யார் போட்டியிடுகிறார்கள் என்றும், யாரைத் தேர்ந்தெடுக்கப் போகிறோம் என்றும் வாக்காளர்களே தீர்மானிக்கிறார்கள். ஆனால் இதனால் பெரும்செலவு ஏற்படுவதுடன், தனிப்பட்ட முறையில் பெரும் பணக்காரர்களாக இருப்பவர்களுக்கும், செல்வந்தர்களின் ஆதரவு உள்ளவர்களுக்கும் சாதகமான சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. இந்தக் குறைபாடு காரணமாக, ஒரு தொகுதியில் உள்ள எல்லா கட்சி உறுப்பினர்களும் வாக்களிப்பதன் மூலம் வேட்பாளர்களைத் தெரிவுசெய்வது வழக்கமாக உள்ளது. வேட்பாளரைத் தெரிவு செய்வதில் இந்த அளவிலான மக்களாட்சி நெறி கூட எல்லா நாடுகளிலும் காணப்படுவதில்லை.

26. ஏன் குறைந்த எண்ணிக்கையிலேயே பெண்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?

மேற்கத்திய மக்களாட்சிகளில் பெண் வாக்காளர்களின் விகிதத்தைப் பார்க்கும் போது, தேர்ந்தெடுக்கப்படும் பெண் பிரதிநிதிகளின் விகிதம் மிகக் குறைவாகவே இருக்கிறது.[1] நீண்டகாலமாகச் செயல்பட்டு வரும் மக்களாட்சிகளில் சராசரியாக 15விழுக்காட்டிற்குக் குறைவாகவும், ஸ்காண்டிநேவிய நாடுகளில் சுமார் 35விழுக்காடும், ஏனைய நாடுகளில் சுமார் பத்து விழுக்காடும் பெண் பிரதிநிதிகள் இருக்கின்றனர். பிரான்சில்தான் மிகவும் குறைவாக ஆறு விழுக்காடு மட்டுமே பெண் பிரதிநிதிகள் உள்ளனர். இந்நிலைக்கான காரணங்கள் ஓரளவு வரலாற்று ரீதியானவை; ஓரளவு உள்நாட்டு நிலையைச் சேர்ந்தவை; ஓரளவு அரசியல் சார்ந்தவை. மனிதகுல வரலாற்றைப் பார்க்கும் போது அரசியல் பணிகளுக்குப் பெண்கள் உகந்தவர்களல்லர் என்றே கருதப் பட்டு, முறையாகவும், முறையற்றும் அவர்களை விலக்கி வந்துள்ளனர். கடந்தகால நம்பிக்கைகளின் எச்சங்களுடன், இக்காலத்தில் குடும்பத்தில் குழந்தைகளைப் பராமரிப்பது, வீட்டை நிர்வகிப்பது போன்ற பெரும் பொறுப்புகளைச் சுமத்தியதால் சமத்துவமற்ற வேலைப்பளுவின் காரணமாக பெண்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபட முடிவதில்லை. மேலும், அரசியல் பெருமளவுக்கு

---

1 ஒவ்வொரு பஞ்சாயத்து மற்றும் நகராட்சிக்கான நேரடி தேர்தல்களில் மூன்றில் ஒன்றுக்குக் குறையாத இடங்கள் பெண்களுக்காக ஒதுக்கப்படவேண்டுமென்று இந்திய அரசமைப்பு கூறுகிறது. இத்தகைய ஒதுக்கீடு, சட்டமன்றம், நாடாளுமன்றங்களிலும் அளிக்க ஆலோசனை நடைபெற்று வருகிறது

நேரத்தைச் சாப்பிட்டுவிடும் ஒரு பணியாகும்; அரசாங்கம் மற்றும் நாடாளு மன்றத்தின் பணி நேரங்கள் பெண்களுக்கு ஒத்துவராதவை; மேலும் அரசியலில் நிலவும் போட்டிகள், கட்சிப் பூசல்கள், செல்வாக்கைப் பெருக்குதல் போன்றவை பெண்களுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதில்லை.

ஏன் சமத்துவம் வேண்டும்

இந்தச் சமத்துவம் அவசியமா? தேர்ந்தெடுக்கப்படும் பதவிகளானாலும், தேர்ந் தெடுக்கப்படாத பதவிகளானாலும் சமூகத்தின் ஒரு பிரிவினர் மட்டுமே அதில் பெருமளவுக்கு இடம் பெறுகிறார்கள் என்றால், அரசியல் சமத்துவம் என்ற கண்ணோட்டத்தில் இந்தச் சமத்துவம் அவசியம்தான். பெண்கள் சமத்துவமாய் இடம் பெறவில்லை என்றால், பெண்களைப் பாதிக்கின்ற பிரச்சினைகளுக்கு ஆண்கள் போதிய முக்கியத்துவம் அளிக்காமல் போகலாம்; அல்லது அவர் களுடைய நலத்திட்டங்களுக்கு அரசாங்க நிதி உதவி பெறுவதில் போதிய முன்னுரிமை தராமல் போகலாம். பெண்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான கண்ணோட்டமும், அக்கறையும் இருக்காது என்றாலும் கூட, கருத்தடை, கருச் சிதைவு, கற்பழிப்பு போன்ற பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு ஆண்கள் பெரும்பான்மையாக உள்ள நாடாளுமன்றங்கள் சட்டம் இயற்றுவதைப் பெண்களில் பெரும்பாலோர் விரும்புவதில்லை. எவ்வாறாயினும், பெண் களுக்கே உரிய தனிப்பண்புகளுக்கும் மாண்புகளுக்கும் பொதுவாழ்வில் போதிய பங்கு அளிக்காவிட்டால் சமுதாயம்தான் இழப்புக்கு ஆளாகும்.

நிலைமையை மாற்ற

என்ன செய்ய வேண்டும்? வரலாற்று எச்சமாகிய அரசியல் சமத்துவமின்மையை வெற்றி கொள்ள வேண்டுமானால் பல்வேறு நிலைகளிலும் உரிய நடவடிக்கை களை எடுத்தாக வேண்டும். பள்ளிகளிலும் பிற கல்வி நிறுவனங்களிலும் உரிய போதனைகளைச் செய்ய வேண்டும்; குழந்தை நல வசதிகளை மேம்படுத்த வேண்டும்; நாடாளுமன்றத்திற்கான அட்டவணைகளையும் வசதிகளையும் மறு பரிசீலனை செய்ய வேண்டும்; இது போல் இன்னும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பெண் உறுப்பினர்களை ஊக்குவிப்பது, பெண்களை வேட்பாளர்களாக முன்னிறுத்துவது போன்ற முக்கியப் பொறுப்புக்களை அரசியல் கட்சிகள் மேற்கொள்ள வேண்டும். ஸ்காண்டிநேவிய நாடுகளில் வெற்றி கரமாக நடத்தியது போல் பெண்களுக்காக இட ஒதுக்கீடு போன்ற முறைகளையும் பின்பற்றலாம்.

27. நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்காளர்களின் பிரதிநிதிகளாக எங்ஙனம் திகழ்கிறார்கள்?

அரசியல் பிரதிநிதித்துவம் என்பதில் அடிப்படையான இரண்டு அம்சங்கள் உள்ளன. முதலாவது 'முகவர்' என்ற கருத்து; அதாவது, தன்னுடைய தொகுதி மக்களால் 'அங்கீகரிக்கப்பட்டவராகவும்' அவர்களின் 'சார்பாகச் செயல்படுபவ ராகவும்' நாடாளுமன்ற உறுப்பினர் திகழ்கிறார். சில விஷயங்களில் தன் தொகுதி மக்கள் அனைவரின் சார்பாகவும் அந்த உறுப்பினர் செயல்படலாம்.

எடுத்துக்காட்டாக, உள்ளூர்த் தேவைகளை நிறைவு செய்யவும், உள்ளூர் மக்களின் கருத்துக்களை அவையில் எடுத்து வைக்கவும், வாக்காளர்களின் குறைகளை நிவர்த்திக்கவும் அவர் செயல்படலாம். வேறு விஷயங்களில் தனக்கு வாக்களித்தவர்களின் பிரதிநிதியாக மட்டுமே அவர் செயல்படலாம். தனனுடைய தேர்தல் வாக்குறுதிகளை ஒருசில வாக்காளர்கள் ஏற்றுக் கொண்டு வாக்களித்தவையும், மற்றவர்கள் நிராகரித்தவையுமான வாக்குறுதிகளைச் செயல்படுத்துவதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். எனவே நாடாளுமன்றப் பிரதிநிதிகள் எல்லா விஷயங்களிலும் தமது தொகுதி மக்கள் அனைவருடைய பிரதிநிதிகளாகவும் செயலபடுகின்றனர் என்பது உண்மையாகாது. ஏனெனில், எந்த வாக்குறுதிகள் அலலது திட்டங்களின் அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அவற்றைச் செயலபடுத்தும்போது அனைவருடைய பிரதிநிதிகளாகவும் இருப்பது நிச்சயம் சாத்தியமில்லை

பெருந்தொகுதியின் ஓரங்கமாகிய பிரதிநிதித்துவம்

இரண்டாவதான பிரதிநிதித்துவம், பெருந்தொகுதியின் ஓர் அங்கமாகிய பிரதிநிதித்துவமாகும். பிரதிநிதித்துவ சபையான நாடாளுமன்றம் முழுமைக்குமானது இது. வாக்காளர்கள் அனைவரையும்-அவர்களுடைய சமூக அமைப்பு, புவியியல் அமைப்பு, பல்வேறு கட்சிகளுக்கு வாக்களிக்கும் முறை போன்ற பல்வேறு அம்சங்களையும் பிரதிபலிப்பதாக நாடாளுமன்றம் அமையும்போதுதான் அது மக்கள் பிரதிநிதித்துவ அமைப்பாக உள்ளது எனலாம். இந்த அம்சங்களில் முக்கியமானது எது? எல்லாமேதான்; ஆனால் தேசியக் கட்சிகள் ஒன்றுக்கொன்று போட்டியாக அறிவிக்கின்ற திட்டங்களை தேர்ந்தெடுக்க வேண்டிய சூழலில் அக்கட்சிகளுக்கு நாடு முழுவதும் கிடைக்கக் கூடிய வாக்குகளின் அடிப்படையிலேயே நாடாளுமன்றத்திலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை இருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமானதாகும். விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையில்தான் இது முழுமையாகச் சாத்தியமாகும் (வினா 28ஐக் காண்க).

மக்களாட்சியின் இரட்டைக் கோட்பாடுகள்

பிரதிநிதித்துவ முறையில இரண்டு அம்சங்களான 'முகவர்' மற்றும் 'பெருந்தொகுதியின் ஓர் அங்கம்' ஆகியவை, முதலாவது வினாவில் விளக்கப்பட்ட மக்களாட்சியின் இரண்டு அடிப்படைக் கோட்பாடுகளுக்கு உருக்கொடுப்பதைக் காணலாம். அரசியல அதிகாரங்கள் அனைத்தும் மக்களிடமிருந்தே தோனறுகின்றன என்றும், எனவே நாடாளுமன்றமும் அரசாங்கமும் மக்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட வேண்டும் என்றும் கூறுகின்ற மக்களின் இறையாண்மை என்ற கோட்பாடு 'முகவர்' என்ற கருத்தில் உள்ளடங்கியுள்ளது. வாக்காளரின் முகவராக, அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவராக, அவர்களின் சார்பாகச் செயல்படும் மக்கள் பிரதிநிதி மக்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்புடையவர், மக்கள் நினைத்தால் தமது பிரதிநிதியை நீக்கிவிடலாம். இரண்டாவதான 'பெருந்தொகுதியின் ஓர் அங்கம்' என்ற அம்சம், மக்கள் எந்த இடத்தில் வசித்தாலும், எந்தக் கட்சிக்கு வாக்களித்தாலும், ஒவ்வொரு வாக்குக்கும் ஒரே மாதிரியான மதிப்புதான் இருக்க வேண்டும் என்கின்ற அரசியல் சமத்துவக்

கோட்பாட்டை உள்ளடக்கியது. இக்கோட்பாட்டை நிறைவு செய்யும் வகையில், வாக்காளர்களின் புவியமைப்பு ரீதியான பரவலையும், பல்வேறு ஆட்சிகளுக்கு அவர்கள் வாக்களிக்கின்ற முறையையும் குறிப்பதாக இருந்தால், நாடாளுமன்றம் பெருந்தொகுதியின் ஓரங்கமாகத் திகழ்கிறது எனலாம்.

28. பலவகையான தேர்தல் முறைகளுக்குள்ள வேறுபாடுகள் யாவை?

உலகம் முழுவதும் பலவகையான தேர்தல் முறைகள் வழக்கத்தில் இருந்த போதிலும், முக்கியமான ஐந்து முறைகள் பற்றி மட்டுமே இங்கு விளக்கப்படுகிறது. இம்முறைகளில் உள்ள சாதக பாதகங்கள் அடுத்த வினாவில் விவாதிக்கப்படும்.

பன்மை முறை

அமெரிக்கா, பெரும்பாலான லத்தீன் அமெரிக்க நாடுகள், இங்கிலாந்து, இங்கிலாந்தின் முன்னாள் காலனிகள் போன்றவற்றில் பன்மைத் தேர்தல் முறை அமலில் உள்ளது. இந்த முறையில் நாடு முழுவதையும் கிட்டத்தட்ட சம அளவிலான ஒற்றை உறுப்பினர் தொகுதிகளாகப் பிரித்துக் கொள்வர். வாக்குச் சீட்டில் வாக் காளர்கள் ஒரே ஒரு வேட்பாளருக்கு மட்டுமே வாக்களிப்பர். பதிவான வாக்குகளில அதிகப்படியான வாக்குகளைப் பெற்றவர்– அவர் பெரும் பான்மையான வாக்குகளைப் பெறாவிட்டாலும்— வெற்றி பெறுவார்.[1]


மாற்று வாக்கு முறை

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் கீழவைக்கு மாற்றுவாக்கு மூலம் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இம்முறையில் தொகுதிப் பிரிவு மேலே குறிப்பிட்டது போல் இருந்தாலும், வாக்காளர் தமது வாக்குச்சீட்டில் போட்டியிடும் வேட்பாளர்களை தமது முன்னுரிமைப்படி ஒன்று, இரண்டு, மூன்று என வரிசைப்படுத்த வேண்டும். வாக்குகளில் எந்த வேட்பாளருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்றால், வரிசையில் மிகக்குறைவான வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் நீக்கப்பட்டு, அவரது சீட்டில் உள்ள இரண்டாவது முன்னுரிமைப்படி மற்றவர்களுக்கு வாக்குகள் பகிர்ந்தளிக்கப்படும். ஒரு வேட்பாளர் பெரும்பான்மை வாக்குகளைப் பெறும் வரை இந்த நடைமுறை தொடரும். இல்லை என்றால், அதிக எண்ணிக்கையில் முதலாவது முன்னுரிமை வாக்குகளைப் பெற்று, முதல் இரண்டு இடங்களில் இருக்கும் வேட்பாளர்களின் இரண்டாவது முன்னுரிமை வாக்குகளைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவரைத் தீர்மானிக்கலாம் (இந்த நடைமுறை பிரான்சில் உள்ளது).

ஒற்றை மாற்று வாக்கு

அயர்லாந்து, மால்டா, ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் மேலவை ஆகியவற்றில் ஒற்றை மாற்று வாக்கு முறை பின்பற்றப் படுகிறது. இந்த முறைப்படி, ஒவ்வொரு

1 இந்தத்தேர்தல் முறையே இந்தியாவில் பின்பற்றபபடுகிறது.



நீதியைத் தாண்டிச் செல்லும் முயற்சிகள் ஜனநாயக நெறிகளுக்குப் புறம்பாகக் கருதப்பட வேண்டும்.

தொகுதியில் இருந்தும் அதன் மக்கள் தொகைக்கு ஏற்ப மூன்று முதல் ஏழு வேட்பாளர்கள் வரை தேர்ந்தெடுக்கப்படுவர். ஒரு தொகுதியில் இருந்து எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமோ அத்தனை வாக்குகளை ஒவ்வொரு வாக்காளரும் தமது முன்னுரிமைப்படி செலுத்த வேண்டும். வேட்பாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமானால், பதிவான வாக்குகளில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தை அவர் பெற்றாக வேண்டும். முதலாவது முன்னுரிமையில் குறிப்பிட்ட விகிதத்தை அவர்கள் பெறாவிட்டால், இரண்டாவது, மூன்றாவது என அடுத் தடுத்து உள்ள முன்னுரிமை வாக்குகளை உரிய முறைப்படி மறு பகிர்வு செய்வதன் மூலம் அவர்கள் பெறலாம்.

கட்சிப்பட்டியல்

பெரும்பாலான மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் இஸ்ரேலிலும் கட்சிப்பட்டியல் முறை பின்பற்றப்படுகிறது. இம்முறையில், கட்சிகள் அனைத்தும் தேசிய அளவில் அல்லது பிராந்திய அளவில் தமது வேட்பாளர்களை வரிசையாகப் பட்டியலிடு கின்றன. வாக்காளர் இந்தப் பட்டியலில் தாம் விரும்பும் கட்சிக்கு நேராக ஒரு வாக்கை மட்டும் செலுத்துவார். பதிவான வாக்குகளில் ஒவ்வொரு கட்சிக்கும் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ற விகிதத்தில் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். எந்த ஒரு கட்சிக்கும் இவ்வாறு பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டுமென்றால், குறைந்த பட்சம் இவ்வளவு சதவீதம் வாக்குகளைப் பெற வேண்டும் என்ற நிர்ணயமும் இருக்கும்.

கலப்பு உறுப்பினர் முறை

கலப்பு உறுப்பினர் முறை அல்லது கூடுதல் உறுப்பினர் முறை ஜெர்மனியிலும் ஹங்கேரியிலும் நடைமுறையில் உள்ளது; விரைவில் நியூஸிலாந்திலும் அறிமுகப்படுத்தப்படவிருக்கிறது. இந்த முறையில், பிரதிநிதிகளில் குறிப்பிட்ட விகிதத்தினர் (குறைந்த பட்சம் 50 சதவீதம் பேர்) மேலே முதல் இரண்டு முறைகளில் குறிப் பிட்டது போன்ற ஒற்றை உறுப்பினர் தொகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுவர். எஞ்சிய பிரதிநிதிகள், தேசிய அல்லது பிராந்திய அளவிலான கட்சிப்பட்டியல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். இந்தக் கலப்பு முறையின் காரணமாக, மொத்தத்தில் முடிவைப் பார்க்கும்போது கிட்டத்தட்ட கட்சிகளின் வாக்குக்கு ஏற்ற விகிதத்தில் பிரதிநிதித்துவம் கிடைக்கும். வேட்பாளர்களுக்கு ஒரு வாக்கும் கட்சிக்கு ஒரு வாக்கும் என இரண்டு வாக்குகளை வாக்காளர்கள செலுத்த வேண்டும். இங்கேயும் பிரதிநிதித்துவம் பெறுவதற்குக் கட்சிகள் குறைந்தபட்சம் ஒரு குறிப்பிட்ட சதவீதம் வாக்குகளைப் பெற வேண்டுமென்ற நிபந்தனையும் இருக்கும்.

29. இந்தத் தேர்தல் முறைகளின் சாதக பாதகங்கள் யாவை?

ஒரு நாட்டின் மக்கள் தொகைப் பரவல் மற்றும் பல்வேறு கட்சிகளுக்கான வாக்காளர்களின் ஆதரவு ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாமல், மேலே சொன்ன பலவகையான தேர்தல் முறைகளின் சாதகங்களைத் திட்டவட்டமாக மதிப்பிடடுக் கூறமுடியாது. எடுத்துக்காட்டாக, ஒரு நாட்டில் முறைப்படியான அரசியல் கட்சிகளே இல்லை என்றால், அங்கே விகிதாச்சார பிரதிநிதித்துவ

முறையைப் பின்பற்றுவதில் அர்த்தமேயில்லை. எனவே, பின்வரும் மதிப்பீடுகளின் மூலம் பல்வேறு தேர்தல் முறைகளின் தவிர்க்கவியலாத விளைவுகளைப் புரிந்து கொள்வதுடன் அவற்றின் பொதுவான இயல்புகளையும் பிரதானமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

எளிமை

பன்மை முறையில் எளிமை என்ற அனுகூலம் உள்ளது. மற்ற முறைகளைக் காட்டிலும் நாடாளுமன்றத்தில் ஒரு கட்சிப் பெரும்பான்மையையும், அதன் வழி ஒரு கட்சி ஆட்சியையும் உருவாக்க வல்லது இது. ஏனெனில், இம்முறை பெரிய கட்சிகளுக்கான வாக்காளரின் ஆதரவையே மிகைப்படுத்துகிறது. வாக்காளர் எண்ண ஓட்டத்தில் சிறிய மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் அரசாங்கத்தில் மாற்றத்தைக் கொண்டுவர வல்லது இம்முறை. அந்த மாற்றம் கூட, குறைந்த வாக்கு எண்ணிக்கை வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தொகுதிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது. இந்த முறையில் உள்ள பாதகமான அம்சம் என்ன வென்றால், கட்சிகளுக்கு இடையேயும், தொகுதிகளுக்கு இடையேயும் வாக்குகள் சிதறிப்போய் இருப்பதைப் பொறுத்து அளவொவ்வாத முடிவுகளை இது உண்டாக்கிவிடும். எடுத்துக்காட்டாக, நாட்டில் உள்ள எல்லாத் தொகுதிகளிலும் அங்குள்ள நான்கு கட்சிகள் முறையே 40,30,20,10 என்ற விகிதாச்சார அளவில் வாக்குகளைப் பெற்றால், ஒரு கட்சி மட்டுமே நாடாளுமன்றத்தின் எல்லாத தொகுதிகளிலும் வெற்றி பெறுவதுடன், 60 சதவீத வாக்காளர்களுக்கு எவ்வித மான பிரதிநிதித்துவமும் இல்லாமல் போய்விடும். ஆனால் இது மாதிரி ஒரு போதும் நடப்பதில்லை. ஒரு சில பகுதிகளில் ஆதரவான வாக்காளர்கள் நிறைந்துள்ள கட்சிக்கு இந்த முறை அனுகூலமாக இருக்கிறது. வாக்குகள் சிதறியுள்ள கட்சிக்கு இதனால் அனுகூலம் இல்லை. மேலும், தொகுதி எல்லைகள் எவ்வாறு வரையறை செய்யப்படுகின்றன என்பதையும் இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த முறையில் வாக்காளர்கள் சாமர்த்தியமாக வாக்களிக்க வாய்ப்பிருக்கிறது. ஆனால் மற்ற வாக்காளர்கள் எவ்வாறு வாக்களிக்கிறார்கள் என்று தெரியாமல் போவதால் தாறுமாறான முடிவுகள் உருவாகின்றன.

பெரும்பான்மை ஆதரவு

மாற்று வாக்கு முறையில் ஒரு வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமானால் பெரும்பான்மை வாக்குகளைப் பெற வேண்டும் என்று உள்ளதால், பன்மை முறையைக் காட்டிலும் இது மேம்பட்டது எனலாம். பன்மை முறையில், மற்றவர்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் வாக்குகளைப் பெற்றவரே அவர் பெரும்பான்மை வாக்குகளைப் பெறாத போதிலும்-வெற்றி பெற்றவராகிறார். இம்முறையில் ஒரு தொகுதியின் பிரதிநிதியாக இருக்க வேண்டுமானால், பெரும்பான்மை வாக்குகளுடன் வெற்றி பெற்றாக வேண்டும் என்பது குறைந்த பட்சத் தகுதியாகும் எனக் கொள்ளலாம். மேலும் இம்முறை பன்மை முறையைக் காட்டிலும் பெருமளவுக்கு விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் அளிப்பதாகவும் இருக்கும். ஆனாலும் கணிசமான அளவுக்குப் பரவலாக மக்களின் ஆதரவைப் பெற்ற மூன்றாவது, நான்காவது கட்சிகளுக்கு நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் கிடைக்க இம்முறை தடையாய் இருக்கிறது.

வாக்காளர் விருப்பம்

ஒற்றை மாற்று வாக்கு முறையினால் சிறிய கட்சிகளுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்க வழியுள்ளது. எந்த விகிதாச்சாரப்படி பிரதிநிதித்துவம் என்பது தொகுதிகளின் அளவைப் பொறுத்தது. தொகுதிகள் பெரும் அளவினதாய் இருந்தால் பிரதிநிதித்துவமும் அதிக விகிதத்தில் அமையும். ஒரே கட்சியின் ஆதரவாளர்கள்கூட தமது கட்சியின் பல வேட்பாளர்களில் இருந்து தாம் விரும்பும் வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க இம்முறையில் வாய்ப்பு உள்ளது. ஆனால் தொகுதிகள் அளவில் பெரியதாவதால், பிரதிநிதிகளுக்கும் வாக்காளர்களுக்கும் இடையேயான பிணைப்பு அறுந்து போய்விடும் வாய்ப்பும் உள்ளது; ஒற்றை உறுப்பினர் தொகுதிகளில் இது இயல்புதான். மேலும் கடைசிநிலை முன்னுரிமை வாக்குகளை மற்ற வேட்பாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் முறை பெரிதும் சிக்கல் நிறைந்தது.

விகிதாச்சாரம்

கட்சிப் பட்டியல் முறை, ஒவ்வொரு வாக்குக்கும் கிட்டத்தட்ட சமமான முக்கியத்துவத்தை அளிக்கிறது எனலாம். எனவே ஒவ்வொரு கட்சிக்கும் கிடைத்த வாக்குகளின விகிதாச்சாரபபடி அவற்றுக்கு நாடாளுமன்றத்தில இடம் கிடைக்கும் ஆனால் இதில் உள்ள பாதகம் என்னவென்றால் ஒரு குறிப்பிட்ட தொகுதியில் உள்ள வாக்காளர்களுக்கு எந்த ஒரு பிரதிநிதியும் நேரிடையாகப பதிலளிக்கும் பொறுப்புக் கிடையாது. வாக்காளர்களுக்கும், கட்சி உறுப்பினர்களுக்கும்கூட, பட்டியலில் உள்ள கட்சியின் வேட்பாளர்களை தம் விருப்பப்படி வரிசைப்படுத்தும் வாய்பபுக் கிடையாது. எனவே பிரதிநிதிகளும் வாக்காளர்களைக் காட்டிலும் கட்சியின் மத்திய அமைப்புக்கே விசுவாசமாக இருப்பார்கள். எனினும், பல்வேறு கட்சி மனப்போக்குகள் மற்றும் பல்வேறு சமூகப் பிரிவுகள் ஆகியவற்றுக்கு ஏற்றவாறு ஒரு சமநிலையை உருவாக்குவதற்குக் கட்சிப் பட்டியல முறை வாய்ப்பளிக்கிறது.

வேறுபாடுடைய பிரதிநிதித்துவம்

ஒற்றை உறுப்பினர் தொகுதிகளில் எந்த விகிதத்தில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுககப்படுகிறார்கள் என்பதைப் பொறுத்து, அதிகப்படியாகவோ, குறைவாகவோ விகிதாச்சாரத்தை உருவாக்கக் கூடியது கலப்பு உறுப்பினர் முறை. எனவே ஒரு கட்சிக்கு எழுச்சி மிக்க ஆதரவு இருக்கும்போது இம்முறையை ஒரு கட்சி ஆட்சியை உருவாக்கும் வகையில் மாற்றியமைக்கலாம்; மக்களின் வாக்குப் பரவலாகச் சிதறிப்போனால், கூட்டணி ஆட்சியை உருவாக்குகின்ற வகையிலும் அமைக்கலாம். கட்சிப்பட்டியல் முறையில் இதுபோன்ற அனுகூலங்கள் இருந்தாலும், தொகுதிகள் உள்ள பிரதிநிதிகள் என்றும், தொகுதிகள் இல்லாத பிரதிநிதிகள் என்றும் இருவகையான பிரதிநிதிகள் நிலவும் நிலையும் ஏற்படும். தொகுதிகளில் போட்டியிட்டுத் தோற்பவர்களில் அதிகப்படியான வாக்குகளைப் பெறுபவர்களைக் கட்சிப்பட்டியலில் சேர்த்தும், பினனர் அவர்களுக்கு அந்தந்த தொகுதிகளின் பொறுப்புகளைக் கவனிக்குமாறு செய்தும் இந்தக் குறைபாடடை நிவர்த்திக்க முடியும் என்று கட்சிப் பட்டியல் முறையை ஆதரிப்பவர்கள் கூறுகிறார்கள்.

30. கூட்டணி அரசு மக்களாட்சிக்குப் புறம்பானதா?

பன்மை முறையும், மாற்று வாக்கு முறையும் குடிமக்களின் வாக்குகளை சமத்துவ மற்ற நிலையில் கருதுவதால், மக்களாட்சிக்குப் புறம்பானவை என்று, விகிதாச் சாரப் பிரதிநிதித்துவத்தை ஆதரிக்கின்றவர்கள் கூறுகிறார்கள். இவ்விரு முறைகளும் ஒருவரின் வாக்குகளை மற்றவர்களைக் காட்டிலும் உயர்வானதாகக் கருதுவதால் மக்களாட்சியின் அடிப்படைக் கோட்பாடான அரசியல் சமத்துவம் மீறப்படுகிறது. எனவே வாக்காளர்களில் சிறுபான்மையினரின் ஆதரவைப் பெற்றவர்கள் அரசாங்கம் அமைக்க அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் இதற்கு மாறாக, விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையை எதிர்ப்பவர்கள், இம்முறையில் எந்த ஒரு கட்சியும் மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெறுவது மிகவும் அரிதானதால் கூட்டணி அரசுதான் சாத்தியமாகும் என்று கூறுகிறார்கள். அவ்வாறு உருவாகும் கூட்டணி அரசுகளில் வாக்காளர்களின் கருத்து எடு படாமல், கட்சித் தலைவர்களே அரசாங்கத்தைத் தீர்மானிக்கும் நிலை ஏற்படுவ தால், அரசாங்கத்தின் மீதான மக்களின் கட்டுப்பாடும், அரசாங்கத்தின் பதிலளிக்கும் பொறுப்பும் வெகுவாகக் குறைந்துவிடும். வலதுசாரி பெரிய கட்சிக்கும், இடதுசாரி பெரிய கட்சிக்கும் இடையே 'கீல்' போல அமைந்துள்ள சிறுபான்மைக் கட்சிகளுக்கு அவற்றின் அளவிற்குப் பொருத்தமில்லாத விகிதத்தில் அதிகாரங்கள் அளிக்கப்படலாம். இந்த வாதங்களை மறுப்பவர்கள், கூட்டணி அரசில் உள்ள கட்சிகள் அனைத்தும் தமது கூட்டு முடிவுகளுக்கு வாக்காளர்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்புடையவை என்றும், வலதுசாரிக் கட்சிகளுக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்கும் கிடைக்கும் வாக்குகள் தேர்தலுக்குத் தேர்தல் மாறுபடலாம் என்பதை மத்தியக் கட்சிகள் மறந்துவிடலாகாது என்றும் கூறுகின்றனர்.

குறிப்பிட்ட சூழ்நிலைகள்

ஒரு நாட்டின் சூழ்நிலையைக் கருத்தில் கொள்ளாமல் இந்த வாதங்களின் அடிப் படையில் ஒரு சமநிலையான முடிவுக்கு வருவது மிகவும் சிரமமானது. பன்மை முறையில் உள்ள குறைபாடுகளை இங்கிலாந்தின் அண்மைக்கால வரலாறு காட்டுகிறது; அதே போல விகிதாச்சார முறையில் உள்ள ஓட்டைகளை இத்தாலி யின் சமீப கால நிகழ்வுகள் மெய்ப்பிக்கின்றன. தொகுதிவாரி பிரதிநிதித் துவத்தின் பலமான கூறுகளையும், விகிதாச்சாரத்தினைச் சமப்படுத்துகின்ற கூறுகளையும் ஒன்றிணைக்கும் புதிய முறை மிகவும் பயனுள்ளதாக அமையலாம். ஆனால் கட்சி முறை வளர்ச்சி மற்றும் அரசியலமைப்பு ஏற்பாடுகள் ஆகிய வற்றைப் பொறுத்தே இவ்விரண்டுக்கும் உள்ள தொடர்பு அமையும்.

31. நேர்மையான தேர்தலுக்கு எவ்வாறு உத்தரவாதம் அளிப்பது?

தேர்தல்கள் நேர்மையான முறையில் நடப்பதைத் தடுப்பதற்கு மூன்று முக்கியமான ஆதாரங்களில் இருந்து அச்சுறுத்தல் தோன்றலாம். முதலாவதாக, ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் கட்சி (கள்) பெறும் அனுகூலம். இதனை முற்றிலுமாக

ஒழித்துக்கட்ட முடியாது என்றாலும், பலவழிகளினால் இதனைக் குறைக்க முடியும். அவற்றுள் முக்கியமானதாக, தொகுதி வரையறை செய்வது முதல், வாக்காளர் பதிவு, தேர்தல்பிரச்சாரம், வாக்குப்பதிவு, வாக்கு எண்ணிக்கை போன்ற அனைத்து நடவடிக்கைகளும் சுயேட்சையான தேர்தல் ஆணையம் ஒன்றின் மேற்பார்வையின்கீழ் நடைபெற வேண்டும். அரசியல் கட்சிகளும் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று விதிக்கலாம்.[1] சுயேட்சையான ஒலிபரப்புக் கழகம் ஒன்று இல்லை என்றால், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் தொடர்பு சாதனங்களை ஆளும்கட்சி பயன்படுத்து வதையும் தேர்தல் ஆணையம் முறைப்படுத்த வேண்டும். அரசாங்க அமைப் பையும், ஆளும்கட்சியின் அமைப்பையும் சட்டப்பூர்வமாகத் தனித்தனியாக்கி, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்குத் தேவையான விஷயங்கள் தவிர மற்ற விஷயங்களுக்காகத் தேர்தல் பிரச்சார நேரத்தில் அரசாங்கச் சலுகைகளையும் அரசாங்க எந்திரத்தையும் அமைச்சர்கள் பயன்படுத்தாமல் பார்த்துக்கொள்வதும் தேர்தல் ஆணையத்தின் பொறுப்பாகும்.

தேர்தல் முறைகேடுகள்

இரண்டாவதாக, கட்சி உறுப்பினர்களும் அவர்களது ஆதரவாளர்களும் செய்கின்ற ஆள்மாறாட்டம், வாக்காளர்களைப் பயமுறுத்திப் பணியவைப்பது, ஒரே ஆள் பல முறை வாக்களிப்பது, லஞ்சம் கொடுப்பது போன்ற எல்லா வகையான முறைகேடுகளும் நேர்மையான தேர்தல் முறைக்கு அச்சுறுத்தலாக அமைகின்றன. காவல்துறையினரும், தேர்தல் அலுவலர்களும் போதிய அளவில் பணியமர்த்தப்பட்டு, வேட்பாளர்களுக்குப் பாதுகாப்பு அளித்து, தேர்தல் முறையைக் கட்டுக் கோப்பாக நடத்திச் செல்வதன் மூலமே இத்தகைய முறைகேடுகளைத் தவிர்க்க முடியும். இவற்றுள் மிகவும் முக்கியமானது தேர்தல் அலுவலர்களின் திறமையாகும்; அவர்களை நியமிப்பதும் அவர்களுக்குப் பயிற்சியளிப்பதும் தேசியத் தேர்தல் ஆணையத்தின் பொறுப்பாக இருக்க வேண்டும். அனுபவமிக்க சர்வதேச நோக்கர்கள் இருப்பதும் பெரும் உதவியாக இருக்கும். சொல்லப் போனால், மக்களாட்சி நாடுகள் அனைத்திலும் தேசியத் தேர்தல்களின் போது கட்டாயமாக சர்வதேச நோக்கர்கள் இருந்தால், நேர்மை யான தேர்தல்களுக்குப் புறநிலைப் பாதுகாவலாகவும், சீரிய தேர்தல் முறையைப் பரப்புவதாகவும் அமையும் என்றும் சொல்லலாம்.

பணபலம்

நேர்மையான தேர்தல் நடைமுறைக்குக் குந்தகம் விளைவிக்கும் முககியமான கடைசி அச்சுறுத்தல்-பணபலம். வேட்பாளர்களும், அரசியல் கட்சிகளும் பெரும் அளவில் பணம் வைத்திருப்பதும், பெரும் பணக்காரர்களின் ஆதரவைப் பெற்றி ருப்பதும் அவர்களுக்கு மிகவும் அனுகூலமாகி விடுகிறது. இதனைத் தடுக்க மிகவும் எளியவழி, வேட்பாளர்களும் அரசியல் கட்சிகளும் தேசிய அளவிலும்

1 இந்தியாவில் அரசியலமைப்பின்படி ஏற்படுத்தபபட்ட சுயேட்சையான தேர்தல் ஆணையம்தான் நாடாளுமன்றத்திற்கும், மாநிலச் சட்டமன்றங்களுக்குமான தேர்தல் களை நடத்துகிறது.

சுதந்திரமான, நேர்மையான தேர்தல்கள்



சுதந்திரத்துக்கும், நேர்மைக்கும் ஊறுவிளைவிப்பவை — லஞ்சம், அச்சுறுத்தல், ஆள்மாறாட்டம்.

உள்ளூர் அளவிலும் தேர்தலுக்கென்று செய்கின்ற செலவுகளுக்கும், அவர்களுடைய ஆதரவாளர்கள் செய்கின்ற செலவுகளுக்கும் திட்டவட்டமாக ஓர் எல்லையை நிர்ணயிப்பதுதான். மேலும் தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ள முறைப்படி அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் தொடர்பு சாதனங்களைப் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிப்பதன் மூலம் பண பலத்தின் செல்வாக்கைக் குறைக்கலாம்.[1]

கருத்து வாக்கெடுப்பு

நேர்மையான தேர்தலுக்குக் குறைந்த அளவில் அச்சுறுத்தலை உண்டாக்குபவை 'கருத்து வாக்கெடுப்புகள்' என்று பல நாடுகளிலும் விவாதங்கள் நடைபெறுகின்றன. தேர்தலுக்கு முன்னதாக மக்களின் எண்ண ஓட்டம் எவ்வாறுள்ளது என்று ஒரு குறிப்பிட்ட மாதிரி வாக்காளர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து நடத்தப்படும் கருத்து வாக்கெடுப்பு முடிவுகளைத் தேர்தலுக்கு ஒரு வாரத்திற்குள் வெளியிடக் கூடாது என்றும், சில நாடுகளில் தேர்தல் சமயத்தில் அத்தகைய கருத்து வாக்கெடுப்புகளையே நடத்தக் கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டுள்ளது. கருத்து வாக்கெடுப்புககளால், வெற்றி பெறும் வாய்ப்புள்ள கட்சிக்கு ஆதரவாகவோ, எதிராகவோ மக்கள் செயல்படுமாறு தூண்டப்படலாம். இதனால் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், எதிர்பார்க்கின்ற ஒரு முடிவுக்கு ஆதரவான வகையில் ஆரோக்கியமற்ற நிலையை அவை உருவாக்கி விடுகின்றன என்று சொல்லப்படுகிறது. எனினும் கருத்து வாககெடுப்பு முடிவினால மககள் வாக்களிக்கும் முறையில் ஏதேனும் தாக்குறவு ஏற்படுமா என்று நிபுணர்கள் ஐயுறுகிறார்கள். மேலும் சர்வதேச அளவிலான மக்கள் தொடர்பு சாதனங்களின் வாயிலாக மக்களுக்கு செய்திகள் தெரிய பெரிதும் வாய்ப்புள்ளதால், கருத்து வாக்கெடுப்பு முடிவுகளை உள்நாட்டில் தடை செய்வதால் என்ன பயன என்ற கருத்தும் நிலவுகிறது.

32. அரசியல் கட்சிகளுக்கு அரசாங்கமே நிதியளிக்க வேண்டுமா?

மக்களாட்சி முறையில் அரசியல் கட்சிகள் அரசியலில் மிக முக்கியமான பங்களிப்பைச் செலுத்துகின்றன. அரசியல் கட்சிகளுக்கு அரசாங்கமே நிதியுதவி அளிப்பதன் மூலம் அவற்றை அங்கீகரிக்க வேண்டுமெனவும், அவ்வாறு அரசாங்க நிதியுதவி அளிப்பதன் மூலம் சக்தி வாய்ந்த சுயநலமிகளின் செல்வாக்கு அரசியலில் குறைந்துவிடும் என்றும், இதற்கு ஆதரவான கருத்துககள் உள்ளன. ஒவ்வொரு முறையும் தேசியத் தேர்தலில் கட்சிகள் பெறும் வாக்குகளின் விகிதாச்சாரத்திற்கு ஏற்ப அவற்றுக்கு நிதியுதவி அளிக்கலாம்; எந்த ஒரு பிரிவு மக்களுக்காவது சமூக அரசியல் உரிமைகளை மறுக்கின்ற வகையில்

---

1 நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களில போட்டியிடுவோர் இந்த அளவுக்குத் தான் செலவிடலாம் எனற வரமபு இந்தியாவில உள்ளது மேலும தேர்தலின் போது வானொலி தொலைக் காட்சி மூலமாகப் பிரச்சாரம் செய்ய அனைத்துக் கட்சிகளுக்கும் வாயப்பளிக்கப்படுகிறது.

பிரச்சாரம் செய்த கட்சிகளுக்கும், தேர்தல் முறைகேடுகளுக்காகத் தண்டனை அளிக்கப்பட்ட கட்சிகளுக்கும் அரசாங்க நிதியுதவியை மறுக்கலாம்.

கட்சிகளின் சுயாட்சி

அரசாங்கத்தில் இருந்து கட்சிகள் தனித்துச் செயல்படும் சுயாட்சி கொண்டவையாக இருந்தால்தான், மக்களின் எண்ண ஓட்டங்களை வெளிப்படுத்தும் வாயிலாக அவை திகழ முடியும் என்றும், அவ்வாறு சுயேட்சையாகச் செயல்படுவதற்கு மக்களே முன்வந்து நிதியுதவி அளிப்பது அவசியமானது என்றும், இதை எதிர்ப்பவர்கள் கூறுகிறார்கள். மக்கள் தாமே முன் வந்து நிதியுதவி அளிக்கின்ற அளவுக்குக் கட்சிகள் மக்களிடையே ஆதரவைப் பெற்றிருக்கவில்லை என்றால், அக்கட்சிகள் ஆட்சியைப் பிடிக்கப் போட்டியிடுவதற்கு அருகதையற்றவை. ஆனால் அதே சமயத்தில் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் கட்சிகளுக்கு அளிக்கப்படும் நிதியுதவியை எல்லாரும் அறியுமாறு அறிவிக்க வேண்டும் என்றும், நிறுவனங்கள் நிதியுதவி அளிக்குமுன் அவற்றின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் ஆகியோரின் வெளிப்படையான ஒப்புதலைப் பெற்றாக வேண்டும் என்றும் விதிப்பதன் மூலம் குறிப்பிட்ட ஒரு சில பிரிவினரின் செல்வாக்கைக் கட்டுப்படுத்த முடியும்.

வரம்புற்ற அரசாங்க ஆதரவு

பலகாலமாகச் செயல்பட்டு வரும் பெரும்பாலான மக்களாட்சிகளில், மக்கள் தாமே முன் வந்து அளிக்கும் நிதியுதவியைப் பெற்றே அரசியல் கட்சிகள் செயல்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் கட்சித் தொண்டர்களுக்குப் பயிற்சி அளிப்பது, தேர்தல் சமயத்தில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவது போனற காரணங்களுக்காக ஓரளவு அரசாங்க நிதியுதவி அளிக்கலாம். குறிப்பாக, புதிதாக மக்களாட்சி முறை நோக்கிய உருமாற்றக் காலத்தில், அரசியல் கட்சிகள் எந்த ஒரு ஆயத்தமும் இல்லாமல் தமது நடவடிக்கைகளைத் தொடங்குகின்ற நிலையில், அண்மைக் காலத்தில் தேர்தல் போட்டி அனுபவம் எதுவும் இருந்திராத நிலையில், அத்தகைய நிதியுதவி அவசியமானதாகும்.

33. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தேர்தலுக்குப் பின்னர் கட்சிமாற அனுமதிக்கலாமா?

கூடாது. ஒரு குறிப்பிட்ட கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடுபவர்கள், அந்தக் கட்சி பதவியில் இருக்கும் வரை அதற்கு ஆதரவளிப்பது என்ற உறுதிப் பாட்டின் பேரிலேயே போட்டியிடுகிறார்கள். அவர்கள் அப்படி நடந்து கொள்ளவில்லை என்றால், பல்வேறு வாக்குறுதிகள்-திட்டங்களின் அடிப்படையில் அவர்களைத் தேர்ந்தெடுக்கப் பயன்படுத்திய வாக்குக்கு அர்த்தமே இல்லாமல் போய் விடுகிறது. தொகுதி வாரியாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற தேர்தல் முறையில், தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் கட்சிமாறுகின்றவர் தமது பிரதிநிதி பதவியை ராஜினாமா செய்துவிட்டு இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி

பெற வேண்டுமென விதிக்க வேண்டும்.[1] கட்சிப்பட்டியல் முறையில், தேர்தலுக்குப் பின்னர் கட்சி மாறுபவர் ராஜினாமா செய்துவிட்டு பட்டியலில் அடுத்ததாக உள்ள அதே கட்சியைச் சேர்ந்த உறுப்பினரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

34. தேர்தல்களுக்கு இடைப்பட்ட காலத்தில் வாக்காளர்களுக்கு ஏதேனும் அதிகாரம் உள்ளதா?

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வாக்களிப்பது மட்டுமே பொதுமக்களின் அரசியல் நடவடிக்கை என்பதால், இடைப்பட்ட காலங்களில் அவர்களுக்கு எவ்விதமான அதிகாரமும் இல்லை என்று எண்ணுவது பிழையானது. எதிர்காலத்தில் வாக்காளர்களைச் சந்திக்க வேண்டும் என்ற நிலையே, ஆட்சியில் உள்ளவர்களை ஒழுங்காக நடந்து கொள்ளச் செய்வதுடன், தொடர்ந்து மக்களின் எண்ண ஓட்டங்களைப் புரிந்துகொண்டு செயல்படவைக்கும். வேறு விதமாகச் சொல்வதென்றால் ஆட்சியாளர்கள் முன்னே தேர்தல் பயம் எப்போதுமே நிழலாடிக் கொண்டிருக்கும். தொகுதிவாரியான தேர்தல் முறையில், ஓர் இடைத் தேர்தலில் ஆளுங்கட்சி வேட்பாளர் தோற்றுப்போனால், அக்கட்சியின் கொள்கையில் பெருத்த மாற்றம் ஏற்படுவதுடன், சில சமயங்களில் கட்சித் தலைமையிலேயே கூட மாற்றம் ஏற்படுவதில் இருந்து இவ்வுண்மையைப் புரிந்து கொள்ளலாம். இது தவிர, தேர்தல்களுக்கு இடைப்பட்ட காலங்களில் அரசாங்கத்தின் மீது மக்கள் தமது செல்வாக்கைச் செலுத்தப் பல வழிகள் உள்ளன. அரசாங்கத்தின்மீது நெருக்கடியை உண்டாக்குகின்ற அமைப்புகளில் சேருவது, தமது பிரதிநிதிகளையும், அரசாங்கத்தின் உறுப்பினர்களான அமைச்சர்களையும் சந்தித்துப் பேசி தமது எண்ணத்தை வெளிப்படுத்துவது, பொது மக்களின் பிரசார இயக்கங்களில் பங்கெடுப்பது, தர்ணாக்களில் ஈடுபடுவது போன்ற வழிகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். அத்துடன், மக்களின் எண்ண ஓட்டங்களைத் தொடர்ந்து வெளிப்படுத்துவதற்கான கருவியாக மக்கள் தொடர்பு சாதனங்களும் உள்ளன.

35. மக்களாட்சியில் கருத்துக் கணிப்புகள் எப்போது நடத்தப்பட வேண்டும்?

அரசியலமைப்பில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும்போது அல்லது பெருமளவுக்கு அரசியலமைப்பு மாற்றத்தை உருவாக்கக் கூடிய சட்டத்தைத் திருத்தும் போது, கருத்துக் கணிப்பு நடத்தி குறிப்பிட்ட பெரும்பான்மை ஆதரவைப் பெற வேண்டுமென மக்களாட்சிகள் பலவற்றிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.[2]

1. இந்தியாவில், ஒரு கட்சியிலிருந்து மூன்றிலொரு பங்குக்கும் குறைவான தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கட்சி மாறமுனைவது, கட்சி தாவலாகக் கருதப்படும். கட்சி தாவல் தடைச் சட்டத்தின் கீழ் அவர்களது மன்ற உறுப்பினர் பதவி பறி போகும். ஆனால் மூன்றிலொன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் விரும்பும் பட்சத்தில், பிரிந்து சென்று தனிக்கட்சி ஆரம்பிக்கவோ வேறு கட்சியுடன் இணையவோ உரிமையுண்டு.
2. நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் மாற்றங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் பட்சத்தில், இந்திய அரசியலமைப்பில் அம்மாற்றங்களைக் கொணரலாம்.

அரசியலமைப்பு, மக்களனைவருக்கும் பொதுவானது; நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ ஆட்சியில் உள்ள அரசுக்கோ அது சொந்தமானதில்லை; எனவே அதில் திருத்தங்கள் செய்யும்போது மக்களின் நேரிடையான ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற நோக்கத்திலேயே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

மற்ற சட்டங்களுக்குக் கருத்துக் கணிப்பு

மற்ற தனியியலான கொள்கைகள் அல்லது சட்டங்கள் மீது கருத்துக் கணிப்பு நடத்துவது பெரிதும் விவாதத்திற்குரியது. ஒரு கட்சியின் தேர்தல் அறிக்கையின் பொதுவான அம்சத்தில் அடிபட்டுப் போகின்ற அல்லது புறக்கணிக்கப்பட்டு விடுகின்ற முக்கியமான விஷயங்களில் மக்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்த கருத்துக் கணிப்பு ஒரு வாய்ப்பாக அமைகிறது என கருத்துக் கணிப்புக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அரசியலில் தீர்மானிக்கப்படுகின்ற பல விஷயங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாதலால் (எ-டு வரிவிதிப்பும் அரசாங்கச் செலவும்) ஒரு விஷயத்தை மட்டும் தனியாக எடுத்துக் கொண்டு அதற்கான முடிவை, மற்ற தீர்மானங்களுக்குப் பொறுப்புடையவர்களை விலக்கிவிட்டு ஒரு குறிப்பிட்ட பிரிவு மக்களிடம் மட்டும் கேட்பது தன்னிச்சையானது என்று கருத்துக் கணிப்புக்கு எதிராக வாதிடலாம். எனவே கருத்துக் கணிப்பு என்பது ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது பிரதிநிதித்துவ முறையில் மக்களுக்கு உள்ள நம்பிக்கையின்மையையே அது புலப்படுத்தும். அதன் காரணமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பொறுப்புடைமை அதிகரிப்பதற்குப் பதிலாக குறைந்து விடுவதற்கே வாய்ப்பு உள்ளது.

சரியான விடை கிடையாது

சரியான விடையோ, தவறான விடையோ எதுவுமில்லாத பல விஷயங்களில் இதுவும் ஒன்று. எனவே, தம்முடைய அரசியல் பாரம்பரியத்திற்கு ஏற்ற வகையில் மக்களாட்சிகள் பல முறைகளைப் பின்பற்றுகின்றன.

3

வெளிப்படையான பொறுப்புடைய அரசாங்கம்

36. மக்களாட்சிக்கு வெளிப்படையான அரசாங்கம் ஏன் அவசியமாகிறது?

வெளிப்படையான அரசாங்கம் இல்லை என்றால் ஆட்சியாளர்களைப் பொறுப்புடையவர்களாக்க முடியாது. அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பற்றியும், அதன் கொள்கைகளினால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் துல்லியமான விவரங்கள் இல்லை என்றால், மக்கள் விவரமறிந்தவர்களாகத் தமது வாக்குரிமையைச் செலுத்த முடியாது. அத்தகைய விவரங்களை மக்களும், மக்களின் சார்பாக மக்கள் தொடர்பு சாதனங்களும் எளிதாகப் பெறுவதற்கு வழியிருக்க வேண்டும். அரசாங்கம் செயல்படுவதற்கான செலவுகளை வரிப்பணமாகச் செலுத்துகின்றவர்கள் பொதுமக்களாதலால், அவர்களுடைய பணம் எவவாறு செலவிடப்படுகிறது என்றும், அவர்களுடைய பெயரைச் சொல்லி என்ன செய்கிறார்கள் என்றும் தெரிந்து கொள்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. இந்த விவரங்களை அரசாங்கம் விரும்பினால்தான் தரலாம் என்ற நிலை இருக்கக்கூடாது. இவ்வாறு விவரங்களைத் தருவதற்கே அரசாங்கப் பணம் பெருமளவுக்குச் செலவாகும் என்று இதனை எதிர்ப்பவர்கள் கூறலாம். ஆனால் இவ்வாறு செய்வதால் அரசாங்கத் திறமை வளரவும், வீணான செலவுகளைக் கண்டறியவும், ஊழலைத் தடுக்கவும், கொள்கைகளில் உள்ள பிழைகள் மோசமான நிலையை அடைவதற்கு முன் அவற்றைக் கண்டறியவும் வாய்ப்புகள் உள்ளன. அரசாங்கமும் அதன் முகமைகளும் பராமரிக்கும் அவற்றின் பணியாளர்களின் தனிக்கோப்புகளில் உள்ளவற்றைச் சம்பந்தப்பட்டவர்கள் எளிதாகத் தெரிந்து கொள்ள இயலுவது, சமூக உரிமைகளைப் பாதுகாப்பதில் முக்கியமான அம்சமாகும்.

வெளிப்படையான அரசாங்கத்தின் பண்புக்கூறுகள்

வெளிப்படையான அரசு என்பது எதைக் குறிக்கிறது? வெளிப்படையான அரசாங்கத்தில் நான்கு முக்கியக் கூறுகள் இருப்பதாகக் கொள்ளலாம். முதலாவதாக, அரசாங்கமே தனது கொள்கைகளைப் பற்றிய உண்மையான தகவல்களைத் தருவதாகும். அதாவது, அரசின் கொள்கைகள் சார்ந்துள்ள ஆதாரங்கள், அவற்றை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள், அவற்றுக்காகும் செலவுகள், அவற்றைச் செயல்படுத்துவதற்கான விதிகள்

போன்றவற்றை அரசாங்கமே அளிக்க வேண்டும். இரண்டாவதாக, தனி மனிதர்களும் பத்திரிகைகளும் நேரடியாகவும், நாடாளுமன்றத்தின் மூலமாகவும் அரசாங்க ஆவணங்களைப் பார்வையிட வழியிருக்க வேண்டும். இதில் பணி யாளர்களின் தனிக்கோப்புகளைப் பார்வையிடுவதும் அடங்கும். மூன்றாவதாக, அரசாங்கத்தின் கூட்டங்களை மக்களும் பத்திரிகைகளும் நேரிடையாகப் பார்த்து அவற்றில் என்ன விஷயங்கள் விவாதிக்கப்படுகின்றன என்று தெரிந்து கொள்ள வாய்ப்பிருக்க வேண்டும். நாடாளுமன்றக் கூட்டங்கள், நாடாளுமன்றக் குழுக்களின் கூட்டங்கள், அரசின் நிதியுதவி பெறும் அமைப்புகளின் கூட்டங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் கூட்டங்கள் போன்றவை இதில் அடங்கும். நான்காவதாக, அரசாங்கம் ஒரு கொள்கையை வகுத்து அமலாக்கு வதற்கு முன்னர் சம்பந்தப்பட்டவர்களிடம் முறையாக அதைப்பற்றி விவாதித்துப் பெறப்பட்ட ஆலோசனைகளை அனைவருக்கும் தெரியுமாறு வெளியிடுவதும் ஆகும்

நியாயமான விதிவிலக்குகள்

வெளிப்படையான அரசாங்கம் என்ற கோட்பாட்டுக்கு ஏதேனும் விதிவிலக்குகள் உள்ளனவா? பொதுவாக மக்களாட்சி அமைப்புகளில் சில விஷயங்களை நியாயமாக ரகசியமாகவே வைக்க வேண்டுமென ஏற்கப்பட்டுள்ளது. அவை யாவன: அமைச்சரவை விவாதங்கள்; அரசு அலுவலர்கள் அமைச்சர்களுக்கு அளிக்கும் அரசியல் ஆலோசனைகள், நாட்டின் பாதுகாப்புக்கும் மக்களாட்சி முறையின் பாதுகாப்புக்கும், தனிமனிதர்களின் உயிருக்கும் அச்சுறுத்தலை உண்டாக்கும் விவரங்கள்; தனியார் நிறுவனங்களின் வாணிக ரகசியங்கள், சம்பந்தப்பட்ட தனிமனிதர்களைத் தவிர மற்றவர்களுக்குத் தனிக் கோப்புகளைப் பார்வையிட அனுமதி மறுத்தல் ஆகியனவாகும்.

37. வெளிப்படையான அரசாங்கத்தை எப்படி நிலை நாட்டுவது?

இருபதாம் நூற்றாண்டுக்கு முந்தைய, வரம்புற்ற அரசாங்க அமைப்புகளில் வெளிப்படையான அரசாங்கத்தை உறுதிப்படுத்துவதற்கு பத்திரிகைச் சுதந்திரத் திற்கு உத்தரவாதம் அளித்தாலே போதுமென்று எண்ணினர். அரசாங்கத்தின் செயல்பாடுகள் பல்கிப் பெருகி விரிவடைந்துள்ள இன்றைய காலகட்டத்தில், பத்திரிகையாளர்கள் தமது செய்திகளுக்கான ஆதாரங்களை ரகசியமாக வைத்துக்கொள்வது உள்ளிட்ட தாராளமான பத்திரிக்கைச் சுதந்திரங்கள் மட்டும் இதற்குப் போதுமானதில்லை. அரசாங்கமும் அதிகார வர்க்கமும் தமது தவறு களும் குற்றங்களும் வெளித் தெரியாதவாறு இருக்கவும், இக்கட்டுகளைத் தவிர்த்து விடுவதற்கும், தமக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற எண்ணத்தை வலியுறுத்தவும் அவர்களுடைய நடவடிக்கைகள் அனைத்தையும் ரகசியமாக மூடி மறைத்து விடுகின்றனர். இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்துவதற்கு இக்காலத்தில் 'வெளிப்படையான அரசாங்கம்', 'தகவல் அறியும் உரிமை' ஆகியவற்றுக்காகச் சட்டங்கள் இயற்ற வேண்டியுள்ளது.

தகவலறியும் உரிமை

தகவலறியும் உரிமையைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாதிரிச் சட்டங்கள் அமெரிக்காவிலும் ஸ்வீடனிலும் செயல்படுகின்றன. முன்னர் குறிப்பிட்ட எல்லா விஷயங்களையும் (36வது வினாவைக் காண்க) உள்ளடக்கியவையாய் இச் சட்டங்கள் திகழ்கின்றன. பகிரங்கப்படுத்தும் அரசாங்கத்தின் கடமை; ஆவணங் களைப் பார்வையிடுவதற்கான பொதுமக்களின் உரிமை; அரசாங்க அமைப்பு களின் கூட்டங்களைப் பலரறிய நடத்துதல்; அரசாங்கத்தின் சட்ட விரோதமான நடவடிக்கைகள், முறைகேடுகள் பற்றிய ஆதாரங்களை வெளியிடுகின்றவர் களுக்குப் பாதுகாப்பு ஆகியவை இவற்றில் அடங்கும். நிர்வாகத்தின் பணிகளைக் கூர்ந்தாய்வு செய்யும் நாடாளுமன்றத்தின் உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் நடவடிக்கைகளுக்குக் கூடுதலாகவும் துணையாகவும் தகவலறியும் உரிமைச் சட்டங்களைக் கொள்ள வேண்டும். எனினும், தகவல்களை வெளியிடுவதற்கு விதிவிலக்கான விஷயங்கள் (எ-டு தேசியப் பாதுகாப்பு, அந்தரங்கம் போன்ற வற்றைப் பாதுகாப்பதற்கானவை) குறித்து இந்தச் சட்டங்களில் எழும் சிக்கல் களுக்கு அரசாங்கம் விளக்கமுரைப்பதைக் காட்டிலும், நீதிமன்றங்களே விளக்க முரைகக வேண்டுமென ஏற்பாடு செய்வது மிகவும் அவசியமானதாகும்.

மக்கள் தொடர்பு செலவுகள்

இதுகுறித்து மேலும் இரண்டு விஷயங்களைக் குறிப்பிட்டாக வேண்டும். முதலாவதாக, இக்காலத்திய அரசாங்கங்கள் அனைத்தும் 'மக்கள் தொடர்புக் கென' பெரும் செலவு செய்கின்றன. அரசாங்கக் கொள்கைகள் பற்றி உண்மை யான தகவல்களைத் தருவதுடன், அனுகூலமான விளைவைப் பெறுவதற்காக தக்க சமயத்தில் அவற்றை வெளியிடுவது, தேர்ந்தெடுத்த சில விவரங்களை மட்டும் வெளியிடுவது போன்ற எல்லாவிதமான மக்கள் தொடர்பு உத்திகளையும் பயன்படுத்தி மக்களின் எண்ண ஓட்டத்தை இதமாக்குகின்ற வேலையும் இதில் அடங்கும். இது போன்ற நடவடிக்கையால் அரசாங்கம் பற்றிய தகவல்களைச் சுயேட்சையாகப் பெறுவதற்கும், அவற்றைச் சரிபார்த்துக் கொள்வதற்கும் உத்தர வாதம் இல்லாமல் போய் விடுகிறது. எனவே அரசாங்கமும், நாடாளுமன்றமும், பொது மக்களும் சமத்துவமாக விவரங்களைப் பெறுகின்ற வகையில் சுயேட்சை யான புள்ளிவிவர சேவை ஒன்றிருப்பது அவசியமாகிறது.

பொதுமக்களைக் கலந்தாலோசித்தல்

முடிவாகச் சொல்வதென்றால், வெளிப்படையான அரசாங்கம் என்பது தகவ லறியும் உரிமை என்பதைக் காட்டிலும் மிகவும் பரந்து பட்டது. அமைச்சர்கள் பகிரங்கமான விவாதங்களில் கலந்து கொண்டு தமது கொள்கைகளின் நியாயங்களை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பு, அரசாங்கம் தனது கொள்கை களை வரையறுத்துச் செயல்படுத்துவதற்கு முன்பாக பொதுமக்களைக் கலந்தா லோசிக்க வேண்டுவது போன்றவற்றை அது உள்ளடக்கியது. பொது மக்களைக் கலந்தாலோசித்தல், கலந்தாலோசிப்பதற்கான காலஅளவு மற்றும் நடை முறைகள், சம்பந்தப்பட்ட தரப்பினரின் கருத்துக்களைப் பகிரங்கமாக வெளி யிடுதல், சுற்றுச் சூழலில் ஏற்படும் விளைவுகளின் மதிப்பீடு, போன்றவற்றைப்

பற்றிச் சட்டம் இயற்றப்பட வேண்டும். இவ்வாறாக, 'வெளிப்படை' என்பதில், துல்லியமான தகவல்களைத் தருவதும், பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்கத் தயாராக இருப்பதும் அடங்கும்.

38. பொறுப்புடைமை கொண்ட அரசாங்கம் என்றால் என்ன?

பொறுப்புடைமை கொண்ட அரசாங்கம் என்பதில் மூன்று முக்கியப் பரிமாணங்கள் உள்ளன.

சட்டப் பொறுப்புடைமை


முதலாவது சட்டப் பொறுப்புடைமை. அதாவது, தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் தேர்ந்தெடுக்கப்படாத அரசாங்கப் பணியாளர்கள் அனைவரும் தமது நடவடிக்கைகள் சட்டப்படியானவைதாம் என்பதாக நீதிமன்றங்களுக்குப் பொறுப்புடைமை கொண்டிருப்பது. 'சட்டத்தின் ஆட்சி' என்பதன் அடிப்படைக் கருத்து இது. சட்டத்தை இயற்றிச் செயல்படுத்துகின்றவர்களும், சட்டத்திற்கும் அரசியலமைப்பிற்கும் உட்பட்டு, சட்டப்படியாக வரையறுக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியே செயல்பட வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது.

அரசியல் பொறுப்புடைமை

இரண்டாவது அம்சம் அரசியல் பொறுப்புடைமையாகும். அதாவது, அரசாங்கம் அல்லது நிர்வாகம் தனது கொள்கைகளும் அவற்றின் முன்னுரிமைகளும், அவை செயல்படுத்தப்படும் முறைகளும் நியாயமானவையே என்று மக்களுக்கும் நாடாளுமன்றத்திற்கும் பொறுப்புடையதாய் இருப்பது. முதலாவதான சட்டப் பொறுப்புடைமை அரசாங்கப் பணியாளர்களுக்கும் நீதிமன்றங்களுக்கும இடையேயானதால் மிகவும் எளிமையானது; ஆனால் அரசியல் பொறுப்புடைமையோ மிகவும் சிக்கலானது. தேசிய அளவில் அரசாங்கத்தின் தேர்ந்தெடுக்கப்படாத முகமைகளான சிவில் பணியாளர்தொகுதி, முப்படைத்தொகுதி, காவல் துறை, பாதுகாப்புத் துறை போன்றவை அரசாங்கத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கு, அவரால் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் வாயிலாகப் பொறுப்புடைமை கொண்டவை. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத் தலைவரும், அமைச்சர்களும், தேர்தல்கள் வாயிலாக நேரிடையாய் மக்களுக்கும் மக்களின் முகவரான நாடாளுமன்றத்துக்கும் பொறுப்புடைமை கொண்டவர்கள். நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள், அவர்களைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களுக்குப் பொறுப்புடைமை கொண்டவர்கள்.

நிதிப் பொறுப்புடைமை

மூன்றாவது, நிதிப்பொறுப்புடைமை என்ற குறுகிய கருத்து. வரிவசூல் மூலம் பெற்ற வருவாயை நாடாளுமன்றம் அங்கீகரித்த நோக்கங்களுக்காக மட்டுமே சிக்கனமான முறையில் செலவிடுவதை இது குறிப்பிடுகிறது. இந்த நிதிப் பொறுப்புடமை அரசியல் பொறுப்புடைமை போன்றே ஒரே வழியில்



படம் 2 : பொறுப்புடைமையின் பாதை

செல்லுகிறது என்றாலும் இங்கே அதிகப்படியான ஓர் அமைப்பாகத் தலைமைத் தணிக்கையர் விளங்குகிறார். இந்தத் தலைமைத் தணிக்கையர் அமைப்பு, அரசாங்கச் செலவினங்களை நுணுக்கமாகக் கூர்ந்தாய்வு செய்யும் சுயேட்சையான அமைப்பாக இருப்பதுடன் நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புடையதாகவும் இருக்கிறது.

பொறுப்புடைமையும் மக்களின் கட்டுப்பாடும்

இந்தப் பொறுப்புடைமைகளின் வழித்தோற்றம் படம் 2இல் காட்டப்பட்டுள்ளது. அவை ஒவ்வொன்றும் மக்களாட்சிக் கோட்பாடான அரசாங்கத்தின் மீது மக்களுக்குரிய கட்டுப்பாட்டுக்கு வழி செய்வதாக இருக்கின்ற அதே வேளையில், நிதி மற்றும் நீதித்துறை பொறுப்புடைமைகள் இரண்டும் நேரடியான மக்களின் செல்வாக்கோ, அரசியல் செல்வாக்கோ இல்லாமல் சுயேட்சையான அமைப்புகள்

மூலம் இன்னும் சிறப்பாக உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளதைக் காணலாம். அந்த அமைப்புகளும் தமது தொழில் முறை நடத்தை விதிகளுக்குக் கட்டுப்பட்டவை. ஆனால் இறுதியாகப் பார்க்கும்போது அரசியல் பொறுப்புடைமைதான் எல்லாவற்றிலும் மேலானதாகத் திகழ்கிறது. ஏனென்றால், நீதிமன்றங்கள் அமல் படுத்துகின்ற சட்டங்களும், தலைமைத் தணிக்கையர் கூர்ந்தாய்வு செய்கின்ற செலவினங்களும், அரசியலமைப்புக்கு உட்பட்டுச் செயல்படுகின்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தினைப் பொறுத்தே அமைந்துள்ளன.

39. அதிகாரப் பகுப்பு ஏன் அவசியமானது?

மக்களாட்சியில் அரசாங்கம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை: (அ) கொள்கையை வரையறுத்துச் செயல்படுத்துகின்ற நிர்வாகம் (சில சமயங் களில் அரசாங்கம் என்று நேரடியாகவே அழைக்கப்படுவது); (ஆ) சட்டம் இயற்றுதல், வரி விதித்தல் போன்றவற்றுக்கு ஒப்புதல் அளிப்பதுடன் நிர்வாகத் தின் செயல்பாடுகளைக் கூர்ந்தாய்வு செய்கின்ற நாடாளுமன்றம் (பிரதிநிதித்துவ சபை என்றும் தேசியப் பேரவை என்றும் சில நாடுகளில் அழைக்கப்படுவது). (இ) சட்டம் ஒழுங்காகப் பின்பற்றப்படுவதைக் கணகாணித்து, சட்டம் மீறப்படு கிறது எனில், மீறுகின்ற குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிக்கின்ற நீதித்துறை (நீதி மன்றங்கள்) ஆகியவை. மேலே குறிப்பிட்ட சில வகையான பொறுப் புடைமைகளை (வினா 38 ஐக் காண்க) உத்தரவாதப்படுத்துவதற்கு இந்த மூன்று பிரிவுகளையும் தனித்தனியாக்குவது அவசியமானதாகும். நாடாளுமன்றத்தில் இருந்தும், நிர்வாகத்தில் இருந்தும் பிரிந்து நீதிமன்றங்கள் சுயேட்சையாகச் செயல் படாவிட்டால், அரசாங்க அலுவலர்கள் சட்டதிற்கு உட்பட்டுத்தான் செயல்படு கிறார்களா என்பதைப் பயமின்றியும் பாரபட்சமின்றியும் உறுதிப்படுத்த முடியாது. அதே போல சட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கவும், நிர்வாகத்தின் செயல்பாட்டை ஆராயவும் சுயேட்சையான அதிகாரங்கள் நாடாளுமன்றததிற்கு இல்லை என்றால், அரசாங்கத்தின் அரசியல் பொறுப்புடைமையும், நிதிப் பொறுப்புடைமையும் வெகுவாகப் பாதிக்கப்படும்.

பல்வேறான முறைகள்

நிர்வாகத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் இடையேயான அதிகாரப் பகுப்பானது, மக்களாட்சி அரசாங்கத்தில் காணப்படும பொதுவான அம்சம் என்றாலும், பல்வேறு அரசியல முறைகளிலும் இந்தப் பகுப்பு வெவ்வேறு வகையாகக் காணப்படுகிறது. நாடாளுமன்றமும், தலைமை நிர்வாகியும் தனித்தனியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அதிபர் ஆட்சி முறையில், இரண்டுக்குமான அதிகாரப் பகுப்பு மிகத் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுள்ள கட்சித் தலைவரையே தலைமை நிர்வாகியாகத் தேர்ந்தெடுக்கின்ற பிரதமர் ஆட்சிமுறையில், நிர்வாகத்தின் தலைவராகவும், நாடாளுமன்றத்தின் பெரும்பான்மைக் கட்சித் தலைவராகவும் ஒருவரே இருப்பார்.

அதிபர்முறை

ஒவ்வொரு முறையிலும் நன்மைகளும் தீமைகளும் உண்டு. அதிபர் ஆட்சி முறையில் உள்ள நன்மை என்னவென்றால், நிர்வாகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நாடாளுமன்றம் மிகவும் சுதந்திரமாகச் செயல்படமுடியும். இதிலும் கூட, இரண்டு பிரிவுகளுக்கும் இடையேயான அரசியல் கட்சி அமைப்பின் தன்மை மற்றும் கட்சிக் கட்டுப்பாட்டின் சமன்பாடு ஆகியவற்றைப் பொறுத்தே நாடாளு மன்றத்தின் சுதந்திரம் அமையும். இந்த முறையில் உள்ள தீமை என்னவென்றால், இந்த அரசாங்கம், அரசாங்கம் என்று சொல்லுமளவுக்கு தனது கொள்கைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவையான வரிவிதிப்புகளையும் சட்டங் களையும் இயற்றுவதற்கு நிர்வாகத்தால் இயலாமல் போய்விடும். ஒருசில சமயங் களில் இந்த இரு பிரிவுகளுக்கும் இடையேயான அதிகாரப் போட்டியில் அதிபர் தாம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, ராணு வத்தின் உதவியுடன் நாடாளுமன்றத்தையே கவிழ்த்து விடக் கூடிய மோசமான நிலையும் ஏற்பட்டுவிடும்.

நாடாளுமன்றமும் நிர்வாகமும்

பிரதமர் ஆட்சி முறையில், தேவையான சட்டங்களை இயற்றி வரிகளை விதிந்து நிர்வாகத்தின் கொள்கைத் திட்டத்துடன் இணக்கமாகச் செல்லக்கூடிய அனுகூலம் இருக்கிறது. நாடாளுமன்றத்திற்கு எதிராக நிர்வாகம் மேற்கொள்ளும் அதிரடிப் புரட்சி ஏற்படுவதற்கு அனேகமாகச் சாத்தியமே இருக்காது. ஆனால் இந்த முறையில் நாடாளுமன்றத்தின் பணிகளை நிர்வாகம் பெரிதும் கட்டுப் படுத்திட முடியும். ஏனெனில், நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர் களின் ஆதரவைப் பெற்றவரே நிர்வாகத் தலைவராக இருப்பதால், அவர்கள் ஆட்சியில் உள்ள குறைகளை மக்களுக்கு வெளிப்படுத்துவதைக் காட்டிலும் அரசாங்கத்தின் நம்பகத் தன்மை தொடர்ந்து நீடிப்பதிலேயே (அதைச் சார்ந்து தான் அவர்களின் பதவியும் எதிர்கால முன்னேற்றமும் அமைந்துள்ளதால்) அக்கறை காட்டுவர்.

40. சட்டத்தின் ஆட்சி என்றால் என்ன? அதற்கு எங்ஙனம் உத்தரவாதம் அளிக்க முடியும்?

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களானாலும், தேர்ந்தெடுக்கப்படாதவர்களாயினும் அர சாங்கப் பதவியில் உள்ள அனைவரும் சட்டத்திற்கும் அரசியலமைப்புக்கும் உட் பட்டு, சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியே செயல்பட வேண்டும் என்ற எளிய கோட்பாடுதான 'சட்டத்தின் ஆட்சி' (சட்டப் பொறுப் புடைமை, வினா 38ஐக் காண்க). 'சிறந்த அரசாங்கம் என்பது சட்டத்தின் ஆட்சியே அன்றி மனிதர்களின் ஆட்சி அன்று' என்ற அரிஸ்டாடிலின் கருத்தில் இருந்தே இந்தக் கோட்பாடு தோன்றியது எனலாம். ஆனால் இன்று வழங்கி வரும் இக்கோட்பாடு, முடியாட்சி மன்னர்களின் எதேச்சாதிகார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக, எல்லா வகையான நிர்வாகச் செயல்களுக்கும் சட்டப் படியான அங்கீகாரம் வேண்டுமெனப் போராடியதன் விளைவாக உருவானது.

மக்களாட்சியும் சட்டத்தின் ஆட்சியும்

தனிமனித சுதந்திரத்திற்கும், மக்களாட்சிக்கும் அடிப்படையாகத் திகழ்வது சட்டத்தின் ஆட்சியே. இது இல்லாமல் நிர்வாகத்திடமிருந்து தனிமனித உரிமைகளுக்குப் பாதுகாப்பு இருக்காது. சட்டத்திற்குத் தோற்றுவாயே மக்களாட்சி நெறியிலான அரசியலமைப்பும் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றமுமே. ஆதலால், நிர்வாகம் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் என்பது மக்களாட்சியின் அவசியத் தேவையாகும். எனவே, தேசிய நலனுக்காகவோ, மக்களின் உடனடி கோரிக்கைகளுக்காகவோ, சட்டப்படியான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் செயல்படுவது மக்களாட்சிக்கு எதிரானதாகும்.

நீதித்துறையின் சுதந்திரம்

சட்டத்தை நிலைநாட்டுவதற்கு சுதந்திரமான நீதித்துறை இருந்தால்தான் 'சட்டத்தின் ஆட்சி' தழைக்கும். 'நீதித்துறை சுதந்திரமாகச் செயல்படுவதற்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிப்பதுடன் நாட்டின் சட்டங்களில் அல்லது அரசியலமைப்பில் அதை இடம் பெறச் செய்ய வேண்டும்' என்று நீதித்துறை பற்றிய ஐ.நாவின் அடிப்படைக் கோட்பாடுகளின் முதலாவது பிரிவு கூறுகிறது. இந்தச் சுதந்திரம், நிர்வாகத்தின் தலையீடு இல்லாமல் நீதித்துறை என்ற அமைப்பு செயல்படுவதற்கான கூட்டுச் சுதந்திரத்தையும், பயமோ, பாரபட்சமோ இன்றி நீதிபதிகள் தமது கடமையைச் செவ்வனே செய்வதற்கான தனிநபர் சுதந்திரத்தையும் உள்ளடக்கியது. இந்த இருவகையான சுதந்திரத்தையும் உறுதி செய்ய அரசியலமைப்பு ரீதியான ஏற்பாடுகள் மட்டும் போதாது. நீதிபதிகள் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்கள் என்பதைப் பொறுத்தும், அவர்களுடைய பணிக்காலத்திற்கான பாதுகாப்பினைப் பொறுத்தும் கூட இந்தச் சுதந்திரம் அமைந்துள்ளது. எனவே நீதிபதிகளின் நியமனம் அரசாங்கத்தின் கையிலோ, நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிலோ இருத்தலாகாது; மாறாக, நாடாளுமன்றத்தின் நீதித்துறைக் குழு மூலமாகவோ, அரசியலமைப்பின்படி உருவாக்கப்பட்ட சுயேட்சையான நீதித்துறை பணியாளர் தேர்வுக்குழு மூலமாகவோ நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டும். அதே போல ஆட்சி மாறும்போது நீதிபதிகளையும் பதவி நீக்கம் செய்யும் படியாக இருத்தலாகாது. மாறாக, ஊழல், குளறுபடிகள், கடமை தவறல் போன்ற ஒரு சில காரணங்களுக்காக விசேஷ முறைப்படிப் பதவி நீக்கம் செய்வதைத் தவிர நீதிபதிகளின் பணிக்காலத்திற்குப் பாதுகாப்பளிக்கப்பட வேண்டும். இது போலவே, சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதற்காக, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விலகிச் சுயேட்சையாக செயல்பட வேண்டிய பிற சட்டத்துறை அமைப்புகளுக்கும் சுதந்திரம் இருக்க வேண்டும்.

41. அரசாங்கத்தின் பொறுப்புடைமைக்கு நாடாளுமன்றம் என்ன பங்காற்றுகிறது?

நிர்வாகத்தின் அரசியல் பொறுப்புடைமைக்கும், நீதிப் பொறுப்புடைமைக்கும் நாடாளுமன்றமே முக்கியமான பங்காற்றுகிறது. முதலாவதாக, சட்டம் இயற்றுவதற்கும் வரிவிதிப்பதற்கும் ஒப்புதல் அளிப்பதன் மூலமும், ஒரு பிரேரணை சட்டமாவதற்கு முன்னர் அதன் எல்லா அம்சங்களையும் விரிவாக

விவாதிப்பதன் மூலமும் நாடாளுமன்றம் இப்பணியைச் செய்கிறது. இரண்டாவதாக, நிர்வாகத்தின் நடவடிக்கைகளைக் கூர்ந்தாய்வு செய்வதன் மூலமும் இது நடைபெறுகிறது. நாடாளுமன்றத்தில் அமைச்சர்களிடம் வினா எழுப்புவது, ஆவணங்களைப் பரிசோதிப்பது, சம்பந்தப்பட்ட அரசாங்க அலுவலர்களைக் குறுக்கு விசாரணை செய்வது போன்றவை இதில் அடங்கும். இப்பணியை நாடாளுமன்றம் தனது கூட்டத்தொடர்களிலும், முறைப்படியான நாடாளுமன்றக் குழுக்களின் மூலமாகவும் செய்கிறது.

நாடாளுமன்றத்தின் செயல்திறம்

அரசாங்கத்தின் பொறுப்புடைமையை உறுதிப்படுத்தும் நாடாளுமன்றத்தின் செயல்திறம், அதன் உறுப்பினர்களின் சுயேட்சையான மனப்போக்கையும் ஓரளவுக்குச் சார்ந்து இருக்கிறது. நாடாளுமன்றத்திற்குள் உறுப்பினர்கள் தமது கருத்துக்களை எடுத்துரைத்ததற்காகவும் பேசியதற்காகவும் அவர்கள் மீது வழக்கு எதுவும் தொடுக்க முடியாத அளவிற்குப் பாதுகாப்பு அளித்தால் மட்டும் போதும்; அந்தப் பாதுகாப்பின் காரணமாக அவர்கள் எவ்வித அச்சமும் இன்றி நாடாளுமன்றத்திற்குள் தமது கருத்துக்களை சுதந்திரமாகப் பேச முடியும் என்று நீண்டகாலமாகவே நம்பப்பட்டு வருகிறது. ஆனால் இன்றைக்குள்ள அரசாங்க நடவடிக்கைகளின் சிக்கல் நிறைந்த இயல்புகளைப் பார்க்கும்போது, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான அளவிற்கு அலுவலக வசதிகள் ஆய்வு வசதிகள் போன்றவற்றுடன் வெளியாருடைய ஆலோசனைகளும் உடனடியாகக் கிடைத்தால்தான் அவர்களால் சிறந்த விமர்சனங்களைச் செய்ய முடியும். மேலும், அவர்கள் கட்சிப் பதவிகளில் முழுமூச்சாகச் செயல்படவேண்டிய நிர்பபந்தம் இல்லாமல் இருந்தால்தான் அவர்களுடைய விமர்சனக் கண்ணோட்டம் முனை மழுங்காமல் இருக்கும். அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கோ, பின்னர் விசேஷக் குழுக்களில் இடம் பெறுவதற்கோ, அவர்கள் கட்சித் தலைமையின் தயவை நம்பியிருக்கும் பட்சத்திலும் அவர்களிடம் இருந்து முறையான விமர்சனங்களை எதிர்பார்க்க முடியாது.

எதிர்க் கட்சிகளின் பங்கு

இந்தக் குறைபாடுகள் இருந்த போதிலும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கூர்ந்தாய்வு செய்வதில் அமைப்பு ரீதியான கட்சிமுறைக்கு உள்ள முக்கியத்துவத்தை நாம் புறககணித்து விடமுடியாது. அங்கீகரிக்கப்பட்ட நாடாளுமன்ற எதிர்க்கட்சி 'அரசமைக்கக் காத்திருக்கும்' மாற்றுக்கட்சியாக மட்டுமின்றி, அரசாங்கத்தைத் தொடர்ந்து விமர்சிப்பதன் மூலம் கூர்ந்தாய்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் உதவுகிறது. ஆனால் அரசாங்கம் மேற்கொள்கின்ற சில சீரிய திட்டங்களைக்கூட 'எதிர்க்க வேண்டும் என்பதற்காகவே' எதிர்க்கின்றதால் இத்தகைய விமர்சனப் பணியை நாடாளுமன்றப் பணிகளிலேயே மிகவும் சுவாரஸ்யமற்றதாகப் பெரும்பாலோர் எண்ணுகின்றனர். உண்மையிலேயே இந்தக் கருத்து பிரிட்டிஷ் நாடாளுமன்ற அமைப்பிலும், அதனைப் பின்பற்றித் தோன்றிய அமைப்புகளிலும் நன்கு வேரூன்றி இருக்கிறது. ஆயினும், இக்கால அரசாங்கங்கள் அமைப்பு ரீதியாக நன்கு உருவெடுத்துள்ளதால், அவற்றைக்

கூர்ந்தாய்வு செய்கின்ற முறையும் அமைப்பு ரீதியாக உருப்பெற வேண்டும். எனவே அதிகாரத்தில் இருக்கும் ஆட்சியை ஆதரிக்காதவர்களிடமே விமர்சனப் பொறுப்பு வருகிறது. தம்முடைய தேசப்பற்றைச் சந்தேகிக்கின்ற நிலை உருவாவதைப் பற்றிக் கவலைப்படாமல், எவ்விதமான அச்சமுமின்றி அரசாங் கத்தை விமர்சிப்பது அவர்களால் மட்டுமே முடியும்.

42. யார் வேண்டுமானாலும் நாடாளுமன்ற உறுப்பினராக முடியுமா?

பிரதிநிதிகளிடம் உள்ள விசேஷத் திறமைகளுக்காக நாம் அவர்களைத் தேர்ந் தெடுப்பதில்லை; மாறாக, தொகுதிமக்களின் நலன்களைப் பேணுவதிலும் அரசாங்கத்தின் மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், அரசாங் கத்தின் நடவடிக்கைகளைக் கூர்ந்தாய்வு செய்வதிலும், அவர்கள் கடமையுணர் வுடன் நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையில்தான் மக்கள் அவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். சாதாரணமான புத்திசாலித்தனமும், கருத்துக்களை முறை யாக எடுத்துவைக்கும் திறமையும், கடமையுணர்வும் கொண்ட எவர் வேண்டு மானாலும் இப்பணியைச் செய்ய முடியும். ஆனால் அவர்கள் மக்கள் பிரதி நிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் தமது பொறுப்பைத் திறம்படச் செய்வதற்குப் போதிய நேரமும், மற்ற வசதிகளும் தேவை. காலப்போக்கில் தம் கடமையின் வாயிலாகவே அனுபவத்தை வளப்படுத்திக்கொள்வார்கள். ஆனால் இதற்காக வாழ்நாள் முழுவதும் எவரும் மக்கள் பிரதிநிதியாகவே இருக்க முடியும் என்ற சூழ்நிலையை வாக்காளர்கள் உருவாக்கி விடக்கூடாது.

தனிமனிதரின் போட்டி

எனவே, மக்கள் பிரதிநிதிகளாகச் செயல்பட பலராலும் முடியும் என்றாலும், வெகுசிலர் மட்டுமே அவ்வாறு இருக்கிறார்கள். ஒருவர் மக்கள் பிரதிநிதியாக ஆக வேண்டுமானால் அவர் கடினமான நீண்ட பாதையைக் கடந்து வர வேண்டியுள்ளது. பெரும்பாலும் ஓர் அரசியல் கட்சியில் பல ஆண்டுகள் தொண்டராக இருந்து, பின்னர் உள்ளூர் அல்லது மாவட்ட அளவில் ஏதேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிகளை வகித்தவராக அனுபவம் பெற்றிருக்க வேண்டும். பின்னர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தான் தகுதிபடைத்துள்ளதாக கட்சியின் தெரிவுக் குழுவை ஏற்கச் செய்ய வேண்டும். பலருடன் போட்டியிட்டு, அவ்வாறு கட்சியின் ஒப்புதலைப் பெற்று தேர்தலில் போட்டியிட்டாலும் முதல் முறையே வெற்றி பெற்று விடமுடியாது. இவ்வாறு ஒரு சில தேர்தல்களில் போட்டியிட்டு ஒருவர் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் படும்போது அவர் சார்ந்துள்ள கட்சி அந்த ஆண்டுத் தேர்தலில் பல இடங்களில் தோற்றுப்போய் இருக்கலாம். எனவே மக்கள் பிரதிநிதியாவதற்கு கடுமையான உழைப்பும் திடச்சித்தமும் இருப்பதுடன் ஓரளவுக்கு அதிர்ஷ்டமும் வேண்டும். மக்களின் பிரச்சினைகளில் அதிகமாக அக்கறை கொண்டவர்களும், நேரம் காலம் பாராமல் மக்களுக்காகப் பணியாற்றிடத் தயாராக இருப்பவர்களும் மட்டுமே இறுதியில் நிலைத்து நிற்கமுடியும்.

43. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஊதியம் பெறும் பிற பணிகளில் இருக்க அனுமதிக்கலாமா?

நாடாளுமன்றப் பணி என்பது ஆண்டு முழுவதுமான முழுநேரப் பணியன்று எனவும், திறமை வாய்ந்த நபர்களை அரசியலுக்கு ஈர்க்கின்ற வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் போதிய வருவாய் இருப்பதில்லை என்றும், எதார்த்த உலகியலை அறிந்து கொள்ள உறுப்பினர்கள் வேறிடங்களில் பணியாற்றுவது உதவியாய் இருக்கிறது என்றும் காரணங்கள் கூறி, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஊதியம் பெறும் பிற பணிகளில் இருக்க அனுமதிக்க வேண்டும் எனக் கூறுகின்றனர். ஆனால் இந்த வாதங்களில் எவையுமே ஏற்புடையவை அல்ல. ஆண்டு முழுவதும் நாடாளுமன்றக் கூட்டத் தொடர்கள் நடைபெறுவதில்லை என்றாலும், அதன் பணி இடையறாத தொடர்புடையது. எனவே அதனை முறையாகச் செய்ய முழுநேரப் பணியாகவே அதனை ஏற்க வேண்டும்.[1] ஆகவே, தமது பிரதிநிதிகள் முழுநேரப் பணியாளர்களாக இருக்க வேண்டும் என்று வாக்காளர்கள் எதிர்பார்ப்பதுடன், அந்தப் பொறுப்புக்கேற்ற விதத்திலும் அதற்கேற்ற வசதிகளைப் பெறுவதற்கும் போதிய ஊதியத்தை மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கத் தயாராகவும் இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள் எதார்த்த உலகியலை உணர்ந்து கொள்ள உகந்த வழி, தமது தொகுதிகளில் உள்ள பலதரப்பட்ட மக்களையும் அவ்வப்போது தொடர்ந்து சந்தித்துப் பேசி, அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்று கவனித்து அதற்கேற்பச் செயல்படுதலேயாகும்.

சில பிரிவினரின் நலன்கள்

சமுதாயத்தில் உள்ள ஒரு சில பிரிவினரின் நலனுக்காக நாடாளுமன்றத்தில் செயல்படும் பொருட்டு பிரதிநிதிகளுக்கு அப்பிரிவினர் ஏதேனும் தொகையை அளிக்கலாமா என்றும் கேட்கலாம். பல நாடாளுமன்றங்களிலும் இது போன்ற வழக்கம் நடைமுறையில் இருந்தாலும், இதுவும் விரும்பத்தக்கது அன்று.[2] ஒரு சில பிரிவினரிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டால், தமது தொகுதி மக்களின் நலன்களைப் பேணுகின்ற வகையில் மக்கள் பிரதிநிதிகள் இடைவிடாமல் எங்ஙனம் செயல்படுகிறார்கள் என்று கவனிப்பது மிகவும் சிரமமானதாகும். ஒரு சில பிரிவினரிடம் பணம் பெறுகின்ற முறையை முற்றிலுமாகத் தடை செய்வதைக் காட்டிலும், அவ்வாறு பெறுகின்ற தொகைக்குக் கணக்குக் காட்ட வேண்டும் என்று விதிப்பது ஓரளவுக்குப் பரவாயில்லை எனலாம்.

பதவி நீக்கம்

மக்கள் பிரதிநிதியாக இருப்பவரின் அவலமான நிலை என்னவென்றால், அவர் சரிவரச் செயல்படவில்லை என்ற காரணம் இல்லாமலேயே, அவர் சார்ந்துள்ள கட்சித் தலைமையின் திட்டங்கள் மக்களுக்கு ஏற்புடையதாக இல்லாதபட்சத்தில்,

---

1 இந்தியாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள ஊதியம் பெறும் பிறபணிகளில் எதையும் வகிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு உள்ளது.

2 இந்திய அமைப்பில் இவ்வாறான அன்பளிப்புகளை வழங்க முற்படுதலும், வாங்குதலும், லஞ்ச ஊழலாகக் கொள்ளப்படுகிறது.

பிரதிநிதி பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டு விடலாம். தொழிலாளர்களுக்குச் சம்பந்தமில்லாத பொருளாதார ஏற்றத்தாழ்வுகளினால் தனியார் நிறுவனங்களில் திடீரென்று தொழிலாளர்களை வேலையைவிட்டு நிறுத்துவது போன்றதே இது. எனவே தொழிலாளர்களைப் போலவே மக்கள் பிரதிநிதிகளுக்கும் அவர்கள் பணியாற்றிய காலத்திற்கு ஏற்ப பணிநீக்க ஈட்டுப்படிகள் வழங்கப்பட வேண்டும். மேலும், அவர்களுக்குக் குடும்ப ஒய்வூதியத் திட்டமும் செயல்படுத்தப்பட வேண்டும்.[1]

44. அரசியலில் ஊழலை எவ்வாறு ஒழிப்பது?

அரசியல் ஊழல் - அதாவது சுயநலத்திற்காகத் தமது பதவியைத் தவறாகப் பயன்படுத்துவது என்பது எல்லா அரசியல் முறைகளிலும் எல்லா மட்டத்திலும் காணப்படுகிறது. மக்களாட்சி அமைப்புகள் சிலவற்றில், இதனைப் பதவிகளில் இருந்து எதிர்பார்க்கப்படும் சில சலுகைகளாக ஏற்றுக் கொண்டு, அரசாங்க ஒப்பந்தங்களை வழங்குவது, வியாபார உரிமங்களைத் தருவது போன்ற விஷயங்களில் ஊழல் மலிந்து விட்டிருக்கிறது. ஆனால் இது, வாக்காளர்கள் தமது பிரதிநிதிகள் மேல் வைத்த நம்பிக்கையை அழிப்பதுடன், மக்களாட்சி நடைமுறை மீது மக்கள் கொண்டிருந்த நல்லெண்ணத்தையே பொய்யாக்கி, மக்களாட்சி முறையை ஏன் போற்றிக் காக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்துவிடும். எனவே ஊழலை முற்றிலுமாக ஒழிக்க முடியாவிட்டாலும் கூட, அதனை வெகுவாகக் குறைப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

பரிகாரங்கள்

அரசாங்கப் பதவிகளுக்கான ஊதியம் சொற்பமாக இருக்கும் போதும், அல்லது கௌரவமான வருமானத்தைப் பெறுவதற்கு அது ஒன்று மட்டுமே வழியாக இருக்கும் போதும், தனியார் துறையின் பொருளாதாரச் செழிப்புகள் அரசாங்கத்தின் தன்னிச்சையான முடிவுகளைப் பொறுத்து அமைகின்ற போதும், ஊழல் நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி தண்டனையளிப்பதற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கின்ற போதும், ஊழல் மலிந்துவிடுகிறது. இத்தகைய நிலைமை உருவாகாமல் தடுப்பதற்கான வழிவகைகளும் அவற்றிலேயே பொதிந்துள்ளன. அரசாங்கப் பதவிகளை வகிப்போருக்கு, மற்ற இடங்களில் உள்ளது போன்று அளவுக்கதிகமாக ஊதியம் வழங்கவில்லை என்றாலும் கண்ணியமான அளவுக்கு ஊதியம் தர வேண்டும்; தனியார் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிக்கும் அரசாங்க முடிவுகளை மேற்கொள்வதற்குத் தெளிவான சட்ட திட்டங்களை வரையறுக்க வேண்டும்; அரசாங்க நடவடிக்கைகள் வெளிப்படையாக அமைவதுடன் சந்தேகப்படும்படியான விஷயங்களில் நிர்தாட்சண்யமாக நீதித்துறைப் புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் ஊழலுக்கு எதிரான மிகச் சிறந்த தடுப்பு நடிவடிக்கை என்னவென்றால், காலப்போக்கில், தன்னலமற்ற சேவைபுரியும் மனப்பாங்கினை வளர்ப்பதுதான். சுயநலம்

---

1 இந்தியாவில் நாடாளுமன்ற உறுப்பினராகவோ, சட்டமன்ற உறுப்பினராகவோப் பணியாற்றிய மக்கள் பிரதிநிதிகளுக்கு அவர்களின் பணிக் காலத்துக்கேற்ப ஒய்வூதியம் வழங்கும் திட்டம் அமலில் உள்ளது.

மிகுந்துவிட்ட எதார்த்த வாழ்வில், தன்னலமற்ற பொதுச் சேவை மனப்பான்மை வேரூன்றவில்லை. ஊழலை ஒழிக்க இங்கே சொல்லப்பட்ட வழிமுறைகள் எதுவும் அவ்வளவு எளிதானதல்ல; அதிலும், பல்லாண்டுகளாக ஊழல் ஆழ வேரூன்றி விட்ட சமூகத்தில் தன்னலமற்ற பொதுச்சேவை மனப்பாங்கை வளர்ப்பது என்பது மிகவும் சிரமமானது.

45. மக்களாட்சியில் சிவில் பணியாளர்களின் பங்கு என்ன?

எந்த ஓர் அரசாங்கமானாலும், அதன் அன்றாட நடவடிக்கைகள் சுமுகமாகச் செல்ல உதவும் நிரந்தர நிர்வாக அமைப்பாகச் செயல்படுபவர்கள்-தேர்ந் தெடுக்கப்படாத, முழுநேர சிவில் பணியாளர்கள். அரசாங்கத்தின் திட்டங்களை வகுக்கவும், சட்டங்களை இயற்றவும், அவற்றைச் செயல்படுத்துவதற்கான நிர்வாக அமைப்பை உருவாக்கவும் தேவையான ஆலோசனைகளை அவர்கள்தான் வழங்குகின்றனர். எந்த ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அல்லது அரசாங்கத்தின் கொள்கையைத் தனிப்பட்ட முறையில் அவர்கள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும், தமது மனச்சாட்சிப்படி பாரபட்சமின்றி அவர்கள் செயல்பட வேண்டும். இக்கால அரசாங்க முறைகள் அனைத்திலுமே சிவில் பணியாளர்கள் பிரதான அங்கம் வகித்தாலும், மக்களாட்சியில் சிவில் பணியாளர் அமைப்புப் பற்றிச் சில பிரச்சினைகள் தோன்றுகின்றன. அவை: முதுநிலை சிவில் பணி யாளர்கள் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்கள், சிவில் பணியாளர்கள யாருக்குப் பதிலளிக்கும் பொறுப்புடையவர்களாக இருக்க வேண்டும், சிவில் பணிக்கு எவ்வாறு ஆளெடுப்பு நடைபெறுகிறது போன்றவை.

அரசியல் நியமனங்கள்

அதிகாரத்தில் உள்ள கட்சியின் கொள்கைகளை ஒப்புக்கொள்ளாத முதுநிலை சிவில் பணியாளர்களில் சிலர் அவற்றைச் செயல்பட ஒட்டாமல் தடுப்பதும், தம்மைக் காட்டிலும் போதிய நிபுணத்துவம் இல்லாத அமைச்சர்களுக்குத் தம் முடைய சொந்தக் கருத்தையேற்றி ஆலோசனைகளை வழங்குவதும் வாடிக்கை யாய் உள்ளது என அரசியல்கட்சிகள் பலவும் கூறுகின்றன. ஆனால்இது மிகைப் படுத்திய கூற்றே. அரசாங்கத்தின் எந்த ஒரு கொள்கையானாலும் அதற்குத் தோன்றக் கூடிய எதிர்ப்புகளையும், அதனைச் செயல் படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களையும் சீர்தூக்கிப் பார்த்து, நடைமுறைப்படுத்துவதற்கான வழிவகையைக் கண்டறிவது சிவில் பணியாளர்களின் பிரதானக் கடமையாகும். இதனை முட்டுக்கட்டைப் போடுவதாகப் பல சமயங்களில் விமர்சிப்பதுண்டு. ஆனால் அதே சமயத்தில், அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளை வரை யறுப்பதில் சிவில் பணியாளர்களின் செல்வாக்கு அதிகம் இருக்கிறது என்பதும், அந்தச் செல்வாக்கு மக்களாட்சிக்கு விரோதமாகப் பயன்பட வாய்ப்பு இருக்கிறது என்பதும் மறுக்க முடியாத உண்மை. நன்கு காலூன்றிய மக்களாட்சிகளில் இந்த வாய்ப்பினைக் குறைப்பதற்கு கீழ்க்காணும் இரண்டு வழிமுறைகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்துகின்றனர். அவை: ஒன்று, ஒவ்வோர் அமைச்சகத்திலும் உள்ள உயர்நிலை நிர்வாக அலுவலர் பதவியை அரசியல்சார்ந்த நியமனமாக்கி, ஆட்சிகள் மாறும்போது அந்த அலுவலர்களையும் மாற்றுவது. இன்னொன்று,

ஒவ்வோர் அமைச்சகத்திலும் கட்சி ஆதரவாளர்களாகிய நிபுணர்கள் அடங்கிய அரசியல் அலுவலகம் ஒன்றை உருவாக்குவது. இதில் உள்ளவர்கள், நிரந்தரமான சிவில் பணியாளர்கள் அமைச்சர்களுக்கு வழங்கும் ஆலோசனைகளை சுயேட்சையாகச் சீர்தூக்கிப் பார்த்து, அமைச்சர்களுக்கு ஆலோசனைகளையும் மாற்று வழிகளையும் எடுத்துரைப்பர். இந்த இரண்டு வழி முறைகளிலும் எதுவுமே பிரச்சினையற்றதன்று; எனினும் இவற்றால் ஏற்படும் பாதகங்களைக் காட்டிலும் சாதகங்கள் அதிகம் எனலாம்.

சிவில் பணியாளர்களின் பொறுப்புடைமை

இன்னொரு விஷயம், சிவில் பணியாளர்களின் பொறுப்புடைமையைப் பற்றியது. சிவில் பணியாளர்கள் அனைவரும் கீழிருந்து தத்தம் மேலதிகாரிகளுக்குப் பதிலளிக்கும் பொறுப்புடையவர்கள், இறுதியாக உயர்நிலைப் பணியாளர், தமது அமைச்சருக்கும், அமைச்சரின் வாயிலாக நாடாளுமன்றத்திற்கும் பதிலளிக்கும் பொறுப்புடையவர். ஆனால் சில சமயங்களில், தமது மேலதிகாரிகளுக்குப் பதிலளிக்கும் பொறுப்பையும் கடந்து சட்டத்திற்கும், நாடாளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் பதிலளிக்கும நேரடிப் பொறுப்பு சிவில் பணியாளர்களுக்கு இல்லையா? மேலதிகாரிகள் பிறப்பிக்கும் உத்தரவுகள் சட்டத்தை மீறுவதாகவோ, நாடாளுமன்றத்தை ஏமாற்றுவதாகவோ, பொது மக்களின உரிமைகளை அத்து மீறுவதாகவோ இருந்தால என்ன செய்வது? இந்த மாதிரியான சூழ்நிலைகளில் அதிகார வர்க்கத்தின் பொறுப்புடைமைக்கும், மக்களாட்சிக் கோட்பாடுகளின் பொறுப்புடைமைக்கும் முரண்பாடுகள் தோன்றுவது நிச்சயம். இம்மாதிரியான முரண்பாடுகள் தோன்றும்போது பெரும்பாலான சிவில் பணியாளர்கள் காதும்காதும் வைத்தாற்போல அவ்விஷயங்களை 'வெளியே விட்டு' விடுகிறார்கள். எனவே பொதுமக்கள் நலன் கருதி அரசாங்க ரகசியங்களை வெளியிடுவோருக்குச் சட்டப்படியான பாதுகாப்புத் தேவை என்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும் (37வது வினாவைக் காண்க)

சிவில் பணியாளர்களுக்கான ஆளெடுப்பு

மக்களாட்சியில் சிவில் பணியாளர் பற்றிய இன்னொரு முக்கியமான விஷயம், ஆளெடுக்கும் முறையாகும். உயர் கல்வித் தகுதிகள், முறையான தொழில்ரீதியான அனுபவம், நிபுணத்துவம் போன்றவற்றின் அடிப்படையில், கட்சி விசுவாசம் பாராமல், தகுதியான நபர்கள் போட்டித் தேர்வுகள் மூலம் சிவில் பணிகளுக்குத் தெரிவு செய்யப்படுகிறார்கள். இத்தகைய தெரிவு முறையில் அறிவுக் கூர்மையே விசேஷமாகப் பார்க்கப்படுவது போல், சமூக விசேஷம் எதுவும் பார்க்கப்படலாகாது. மக்களாட்சியின் அரசுப் பணிகளில், சமூகத்தின் பிரதானப் பிரிவினர் அனைவருக்கும், போதிய அளவிற்கு நியாயமான பிரதிநிதித்துவம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும், அரசியல் சமத்துவக் கோட்பாடும் கூட, அரசாங்கப்பணி நியமனங்களில் அனைவருக்கும் — அவர்கள் எந்த சமூகப் பிரிவைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் – சமமான வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்றே வலியுறுத்துகிறது. அதாவது, பாரபட்சமில்லாத போக்கும், சம வாய்ப்புகளும் கல்வி முறையிலும் சிவில் பணியாளர் ஆளெடுப்பு முறையிலும் ஒன்றிணைந்த ஓரம்சமாக இருக்க வேண்டும்.

46. பொறுப்புடைய அரசாங்கத்தை உருவாக்குவதில் குடிமக்களின் தனிப்பட்ட பங்கு என்ன?

அரசாங்க அலுவலர்களின் சட்டப்புறம்பான முடிவுகள் அல்லது நிர்வாகச் சீர்கேடு (புறக்கணிப்பு, காலம் தாழ்த்தல், தன்னிச்சையான செயல்பாடு போன்றவை) காரணமாகக் குடிமக்கள் தமது நலன் பாதிக்கப்படும்போது, அதற்கு உரிய பரிகாரம் பெறுவதற்கு மக்களாட்சி முறையில் பல வழிகள் உள்ளன. சட்டம் வரையறுத்துள்ள அதிகாரத்தையும் தாண்டி, அரசாங்கம் மேற்கொள்ளும் முடிவுகளினால் ஏற்படும் இழப்புகளுக்கு நீதிமன்றங்கள் மூலம் பரிகாரம் பெறலாம். நிர்வாகச் சீர்கேடுகளினால் பாதகம் ஏற்பட்டால் தொகுதியின் பிரதிநிதியிடம் முறையிடலாம்; அல்லது நிர்வாக நடவடிக்கைகளினால் பாதிக்கப்படும் தனிநபர் முறையீடுகளை விசாரிப்பதற்கான 'ஆம்புட்ஸ்மென்'[1] போன்ற பிரத்யேக அமைப்புகளிடம் முறையிட்டு நிவாரணம் பெறலாம். அண்மையில் சில நாடுகளில் 'குடிமக்கள் சாசனம்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி, நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு ஏற்ற அளவில் அரசாங்க சேவை அமையாவிட்டால் இழப்பீடு வழங்கப்படும். இவையாவும் தனி நபர்களுக்குப் பொறுப்புடையதாய் இருப்பதற்கான எடுத்துக்காட்டுகளாகும்; கூட்டு முறையில் பொறுப்புடையதாய் இருப்பதென்று முன்னர் விளக்கியதற்கு (வினா எண் 38) எதிரிடையானவையாகும். அரசாங்க சேவைகளைப் பெறுகின்ற பிரதான நுகர்வோர் மக்களே என்பதையும், அரசாங்கத்தின் சட்டப்படியான, அரசியல் ரீதியான நிதிசார்ந்த பொறுப்புடைமை அனைத்தும் குடிமக்களை நோக்கியவையாகவே இருக்க வேண்டும் என்பதையும் இவை நினைவுறுத்துகின்றன.

47. இராணுவத்தை மக்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது எப்படி?

நீண்ட காலமாக வேரூன்றி செழித்துள்ள மக்களாட்சிகளில் அரசியல் முடிவுகளுக்கும், இராணுவ முடிவுகளுக்கும் இடையே திட்டவட்டமான பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையிலான பாகுபாட்டின் காரணமாகப் பிரச்சினைகள் எழுவதில்லை. ஆயுதங்களைக் கொள்முதல் செய்வது, இராணுவத்தின் பணி நிலைமை போன்ற சில விஷயங்களில் மட்டும் எப்பொழுதேனும் கருத்து வேறுபாடு தோன்றலாம். ஆனால் அண்மையில் உருவான மக்களாட்சிகளில் இராணுவ அதிரடிப் புரட்சிகளோ, இராணுவ ஆட்சியோ, இராணுவத்தின் ரத்து அதிகாரப் பிரயோகங்களோ ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் இப்பிரச்சினை தீர்க்க முடியாத ஒன்றாகத் தோன்றலாம். ஆள்பலமும் அமைப்பு ரீதியான வலுவும் கொண்டுள்ள இராணுவம், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகளைப் பதவியில் இருந்து விரட்டி விட்டு மக்கள் அனைவரையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வரும் ஆற்றலைப் பெற்றதுதான். ஆனால் அவ்வாறு செய்வதற்கு இராணுவம் விரும்புகிறதா என்பதே கேள்வி. அவ்வாறு விரும்புகிறது என்றால் அதைத் தடுப்பதற்கு என்ன வழி என்று பார்க்க வேண்டும்.

---

1 'லோக்பால்' என்ற பெயரில் இந்தியாவில் ஆம்புட்ஸ்மென் அமைப்பைத் தோற்றுவிக்க ஏற்பாடுகள் நடைபெற்றன. ஆனால் இந்த அமைப்பு இன்னும் உருவாகவில்லை.

இராணுவ அதிரடிப் புரட்சிகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக இராணுவத்தை வைத்திருப்பது அவ்வளவு எளிதானது அன்று. அரசியல் சாராத பணிகளில் மட்டும் அவர்களுக்குப் பயிற்சி அளித்தோ, கணிசமான அளவுக்கு ஊதியத்தையும் அந்தஸ்தையும் வழங்கியோ, நவீன போர்த்தடவாளங்களைத் தந்தோ மன நிறைவடையச் செய்ய முடியாது. எனவே இராணுவ அதிகாரிகளுக்குள்ளேயே தோன்றுகின்ற அதிருப்தி காரணமாகவும் இராணுவ அதிரடிப் புரட்சிகள் தோன்றலாம். ஆனால் அது மிக அரிது. மக்களாட்சி முறையில் தொடர்ந்து ஏதாவது பிரச்சினைகள் தோன்றிக் கொண்டே இருப்பதுடன் அவை வேரூன்றிப் போய், அரசியல்வாதிகளால் அவற்றுக்குத் தீர்வு காணமுடியாத சூழ்நிலைகளில் மட்டுமே இராணுவம் ஆட்சியைத் தன் வசப்படுத்திக் கொள்கிறது. உள்நாட்டுப் போர், நிரந்தரமான பணவீக்கம், பொது ஒழுங்குச் சீர்குலைவு, பட்டவர்த்தனமாகத் தொடர்ந்து நடைபெறும் ஊழல் போன்ற காரணங்களினால் இராணுவ ஆட்சி ஏற்பட நேரிடலாம். காலங்காலமாகச் செயல்பட்டு வரும் சில விஷயங்களை அடியோடு மாற்றிவிடும் திட்டத்துடன் வரும் அரசியல் கட்சிகளை ஆட்சியில் இருந்து விரட்டவோ, தேர்தலில் வெற்றி பெறுவதைத் தடுக்கவோ வேண்டி இராணுவ அதிரடிப்புரட்சி ஏற்படலாம். எவ்வாறானாலும், மக்களாட்சி அமைப்புகள் ஒன்றிணைந்து செயல்படாததால் தான் இராணுவப் புரட்சி ஏற்படுகிறதே ஒழிய, இராணுவத்தின் உள்ளார்ந்த இயல்பினால் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இராணுவ ஆட்சி

சமுதாயத்தின் பிரச்சினைகளுக்கு இராணுவ ஆட்சி தற்காலிகத் தீர்வைத் தருமேயன்றி நிரந்தரமான தீர்வை வழங்க இயலாது. மக்களாட்சி அரசியலின் ஊழல், பிரிவினைப் போக்குகள் போன்றவற்றிலிருந்து நாட்டை மீட்டுப்புனரமைத்து, பொருளாதார நவீனமயத்தை உருவாக்கக்கூடியது இராணுவ ஆட்சி என்று அதனைப் புகழ்ந்துரைப்பது சுமார் 10-20 ஆண்டுகளுக்கு முன் வழக்கமாக இருந்தது. ஆயினும் அப்போதெல்லாம் ஆட்சிக்குரிய முறையான ஓர் அமைப்பை இராணுவத்தால் வழங்க முடியவில்லை. இராணுவ ஆட்சிகள் இருண்ட ஆட்சிகளாகவே இருந்திருக்கின்றன. ஒரு சிலர் மட்டுமே ரகசியமாக நடத்திய ஆட்சி, ஊழலைக் குறைப்பதற்கு பதிலாக அதனை மறைப்பதற்குத் தான் துணையாய் இருந்தது. இராணுவ ஆட்சிகள் வலுவான பொருளாதார மேலாண்மைக்கு அடித்தளமாகத் திகழவில்லை. மேலும் இராணுவ ஆட்சிகளின் போது, வெளிப்படையான எந்த ஓர் அரசாங்கமும் சகித்துக் கொள்ள முடியாத அளவிற்கு மனித உரிமைகள் வெகுவாக மீறப்பட்டுள்ளதையே வரலாறுகள் காட்டுகின்றன.

மக்களாட்சி ஒருங்கிணைப்பு

மக்களாட்சி அமைப்புகளை ஒன்றிணைப்பது, அரசியலமைப்பு ரீதியான அரசாங்கத்தை உருவாக்குவது, தேவை எனில் சர்வதேச ஆதரவினைப் பெற்று சட்டத்தின் ஆட்சியை அமைப்பது, சமூகப் பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை

மூலமும் விட்டுக் கொடுத்தல் மூலமும் தீர்வு காண்பது போன்றவற்றை அடைய நெடிய பயணம் மேற்கொள்ள வேண்டுமே ஒழிய குறுக்கு வழி ஏதுமில்லை. அதே சமயத்தில், மனித உரிமை மீறல்களைக் கண்டறிந்து, அதிலும் குறிப்பாக, அரசாங்கப் பணியாளர்களால் தொடர்ந்து நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்களுக்குத் தண்டனை அளிக்கவும், அத்தகைய உரிமை மீறல்கள் தொடர அனுமதியளிக்கும் ஆட்சிகளுக்கு எதிராகத் தடைவிதிக்கவும் தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் பல ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.[1]

48. மக்களாட்சியில் ரகசியப் பணிக்கு இடமுள்ளதா?

அரசாங்கத்தின் எந்த மட்டத்திலும் ரகசியம் இருக்கலாகாது என்பதே மக்களாட்சியின் அடிப்படைக் கோட்பாடாகும். எனினும், அன்னிய அச்சுறுத்தலுக்கு எதிராகவும், உள்நாட்டிலேயே திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற குற்றங்களுக்கு எதிராகவும், மக்களாட்சி அமைப்பையே தகர்த்து விடுகின்ற சதிவேலைகளுக்கு எதிராகவும், ஒளிவு மறைவான நடவடிக்கைகள் சிலவற்றை மக்களாட்சி அரசு மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் அதற்கெனப் பின்பற்றும் வழிமுறைகளான ரகசியக் கண்காணிப்பு வேலைகள், தொலைபேசியை ஒட்டுக் கேட்டல் போன்ற மோசமான நடவடிக்கைகள் அனைத்துமே தனிமனிதர்களின் சிவில் உரிமைகளை மீறுவதாகும். மேலும், இத்தகைய நடவடிக்கைகள் ரகசியமாக மேற்கொள்ளப்படுவதால் நியாயமான வரம்புகளையும் மீறி, அரசாங்கத்திற்கும் அதன் திட்டங்களுக்கும் தலைவலியை ஏற்படுத்துகின்ற அரசியல் கட்சிகள் போன்றவற்றின் சட்டப்படியான நடவடிக்கைகளையும் கண்காணிக்கின்ற சூழ்நிலையும் சந்தர்ப்பமும் ஏற்படலாம்.

அரசியல்பொறுப்புடைமை

எனவே, அனைத்தும் அரசியல் கட்டுப்பாட்டைப் பொறுத்தே உள்ளன. ஒரு நாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட அமைச்சர் நாடாளுமன்றத்திற்குப் பதிலளிக்கும் பொறுப்புடையதாக விட்டுவிடுவது மட்டும் போதாது. பாதுகாப்பு நடவடிக்கைகளில் வெளிப்படையாக அங்கீகரிக்கக் கூடிய வழிமுறைகள் மட்டுமே பின்பற்றப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்ய நாடாளுமன்றத்தின் விசேஷக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும். பொதுமக்கள் சட்டப்படியாக மேற்கொள்கின்ற நடவடிக்கைகளை ரகசியமாகக் கண்காணிக்கும்போது, அவர்களுடைய சிவில் உரிமைகள் மீறப்படுவதாக நம்புவதற்குப் போதிய காரணங்கள் இருந்தால், அவர்களுடைய புகார்களை விசாரிக்கும் அதிகாரம் பெற்ற சுயேட்சையான ஒர் அமைப்பும் இருக்க வேண்டும்

49. மக்களாட்சிக்கு உள்ளாட்சி அமைப்புகள் ஏன் அவசியம்?

மக்களாட்சி முறையின் வலிமைக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பல வழிகளில் உறுதுணையாக உள்ளன. பொதுமக்கள் சம்பந்தப்பட்ட

---

1. இந்தியாவில் தேசிய மனித உரிமைக் கமிஷன் செயல்பட்டு வருகிறது.

முடிவெடுத்தலுக்கான வாய்ப்புகளையும் அதில் பங்கேற்பவர்களின் எண்ணிக்கையையும் உள்ளாட்சி அமைப்புகள் அதிகரிக்கின்றன. அவை உள்ளூர் அளவிலானவையால், தேசிய அரசாங்கத்தைக் காட்டிலும் அவ்வப் பகுதி மக்களின் தேவைகளை நிறைவு செய்வனவாக அமையும். புதிய திட்டங்கள் அல்லது கொள்கைகளைச் சிறிய அளவில் பரிசோதனை முறையில் செயல்படுத்துவதற்கான களமாக அவை திகழ்கின்றன. அத்தகு முயற்சிகள் வெற்றி பெற்றால் வேறு இடங்களில் அல்லது தேசிய அளவில் அத்திட்டங்களை செயல்படுத்தலாம். தேசிய அளவில் பதவிகளைப் பெற விழையும் அரசியல்வாதிகளுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் உள்ளாட்சி அமைப்புகள் காலூன்றுவதற்கான படிக்கட்டுகளாகவும் விளங்குகின்றன. மத்தியில் உள்ள அரசாங்கத்தின் அதிகாரக் குவியத்தைக் குறைப்பதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகள், அரசியலமைப்பு ரீதியான அதிகாரப்பகுப்புக்கு விரிவான பரிமாணத்தையும் தருகின்றன. இந்தச் சிறப்பம்சங்கள் ஒவ்வொன்றும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை; அனைத்தையும் ஒட்டுமொத்தமாக சேர்த்துப்பார்க்கும்போது தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் அவசியத் தேவையை உணரலாம்.

மைய நோக்குப் போக்குகள்

ஆயினும் இக்கால அரசாங்கங்கள் பலவற்றிலும், அரசியல் முடிவுகள் மேலே மையத்தில் இருந்துதான் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தூண்டுகின்ற பல அதிகாரச் சக்திகள் செயல்படுகின்றன. தேசியப் பொருளாதார மேலாண்மைக்கு அத்தியாவசியமான ஒன்றாக, அரசாங்கச் செலவுகள் அனைத்தும் தம் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என கருவூலத்துறை நெருக்குகிறது. மையத்தில் மேற்கொள்ளப்படும் புதிய திட்டங்கள் அல்லது கொள்கை முடிவுகளுக்கு உள்ளூர் அளவில் உள்ள மாற்றுக் கட்சியினர் முட்டுக்கட்டை போடக் கூடாது என்று தேசிய அளவிலான அரசியல் தலைவர்கள் எண்ணுகிறார்கள். உள்ளூர் அளவில் வெவ்வேறு இடங்களில் அளிக்கப்படும் வசதிகள் இடத்துக்கு இடம் மாறுபடுவதைக் காணுகின்ற பொதுமக்களும், அத்திட்டங்கள் அனைத்தும் பாரபட்சமின்றி மையத்தில் இருந்தே செயல்பட வேண்டும் என எண்ணுகின்றனர். குடியுரிமையில் சமத்துவம் என்றால் அளிக்கப்படும் வசதிகளும் சமமாக இருக்க வேண்டும். இதனை உறுதி செய்ய, பல்வேறு பகுதிகளுக்கு இடையேயான வளங்களை மறு பகிர்வு செய்வதும், தேசிய அளவில் முறைப்படுத்துவதும் அவசியம் என்றால், அதனால் உள்ளாட்சி அமைப்புகளின் சுயாதிகாரம் வெகுவாகக் குறைக்கப்படுவதுடன், வாக்காளர்கள் தாம் விரும்பியதைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்புகளும் குறைந்துவிடும்.

முரண்படும் போக்குகள்

ஒன்றுக்கொன்று முரண்படும் இப்போக்குகளைச் சமரசமாக்க எளிய தீர்வு ஏதுமில்லை; எல்லாச் சூழல்களுக்கும் பொருந்துகின்ற மாற்றுவழியும் இல்லை. எனினும், இக்காலகட்டத்தில் மைய அரசிடம் இருந்தே பெரும்பாலான அதிகார நெருக்குதல்கள் தோன்றுவதால், உள்ளாட்சி அமைப்புகளுக்கும், உள்ளூர் மக்களுக்குமே அவற்றின் நலனைப் பேணுவதற்கான பாதுகாப்புத் தேவையாய்

இருக்கிறது. இதை நிறைவேற்ற வேண்டுமானால், வாக்காளர்களுக்குப் புரிகின்ற வகையில் மைய அரசுக்கும் உள்ளாட்சிகளுக்கும் இடையேயான செயல்பாடு களில் திட்டவட்டமான பிரிவினை வேண்டும்; உள்ளாட்சிகள் தேசிய நெறி முறைக் கட்டமைப்புக்கு உட்பட்டு, உள்ளூர் மக்களின் தேவைகளுக்கும் விருப் பங்களுக்கும் ஏற்ப, தமது செயல்பாடுகளை மேற்கொள்ள போதிய அதிகாரமும் நிதியும் தரப்பட வேண்டும்; உள்ளாட்சிகள் வாக்காளர்களுக்குப் பொறுப்புடை யவையாய் இருப்பதை உறுதி செய்வதற்குப் போதிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்; உள்ளாட்சிகள் தம் உசிதப்படி மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் மைய அரசு தலையிடக் கூடாது; வேண்டுமானால் அரசியலமைப்பு நீதிமன்றம் மூலம மைய அரசு தலையிடாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் எவ்வாறாயினும் மத்திய அரசுக்கும் உள்ளாட்சிகளுக்கும் இடையே யான நல்லுறவு, பரஸ்பரம் ஒத்துழைப்பு மற்றும் ஒன்று மற்றதன் செயல்பாடு களை அங்கீகரித்தல் ஆகியவற்றைப் பொறுத்து உள்ளதே ஒழிய, குறுகிய மனப்போக்குடைய சட்டப்படியான வாதங்களினால் அன்று என்பதையும் உணர வேண்டும்

50. கூட்டரசு அமைப்பு எப்போது விரும்பத்தக்கது?

ஒரு நாட்டின் நிலப்பரப்பைத் தனித்தனி மாநிலங்களாகப் பகுத்து, அம் மாநிலங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான நிர்வாக அமைப்பும், தேர்ந் தெடுக்கப்படும் சட்டமியற்றும் அவையும் உருவாக்கி, தேசிய அரசுக்கும் மாநில அரசுக்கும் அரசியலமைப்பு ரீதியாக வரையறுக்கப்பட்டுள்ள அதிகாரப் பகுப்பின்படி மாநிலங்கள் சட்டம் இயற்றி வரிவசூலித்து ஆட்சி செலுத்தும் முறையே கூட்டரசு அமைப்பாகும்.[1] உலக வரலாற்றைப் பார்க்கும் போது, கூட்டரசு அமைப்பு பல்வேறு முறைகளில் தோன்றியுள்ளது தெரிய வரும். முன்னர் இறையாண்மை நாடுகளாக இருந்தவற்றை ஒருங்கிணைத்ததன் மூலமாகவும், ஏற்கெனவே மையத்தில் மட்டும் அதிகாரம் இருந்த ஒரடுக்கு அரசு முறையில் மாகாணங்களுக்கு தன்னாட்சி அளித்ததன் மூலமாமகவும், ஒரு மூல ஒப்பந்தத்தின் மூலமாகவும் கூட்டரசு அமைப்புகள் உருவாகியிருக்கலாம்.

வட்டார வேறுபாடுகள்

பெரும் பரப்பளவைக் கொண்டதும் பண்பாட்டு ரீதியாகவும், புவியமைப்பு ரீதியாகவும் வட்டாரங்களுக்கு இடையே பெருத்த வேறுபாடுகள் உள்ளதுமான நாடுகளில் கூட்டரசு அமைப்பு விரும்பத்தக்கது. இனவழியாகவோ, பண்பாட்டு வழியாகவோ தனித்து விளங்கும் சிறுபான்மைப் பிரிவினர் தனி நாடாகப் பிரிந்து போவதற்குப்பதிலாக அவர்களுக்குத் தன்னாட்சி அளிக்க இந்த அமைப்பு ஒரு வாய்ப்பாகவும் அமையும். ஓரளவுக்குத் துண்டுபட்டு இருப்பது,

---

1. இந்திய அரசியலமைப்பும கூட்டரசு அமைப்பானதே. 25 மாநிலங்கள், 7 யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றின் ஒன்றியமாக இந்தியா திகழ்கிறது. ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுக்கும் திட்டவட்டமான அதிகாரப் பிரிவினை அரசியலமைப்பிலேயே இடம்பெற்றுள்ளது

முற்றிலுமாகத் தொடர்பு அறுந்து போவதற்கும், ஒரே கூரையின் கீழ் தொடர்ந்து சச்சரவிட்டுக் கொண்டிருப்பதற்கும் மேலானது அல்லவா? எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் தேவையே என முன்னர் கூறிய காரணங்கள் அனைத்தும் (வினா எண் 49) கூட்டரசு அமைப்பும் தேவை என்பதற்கும் பொருந்தமுடையதாய் இருப்பதைக் காணலாம்.

4

தனிநபர் உரிமைகளும் அவற்றைத் தற்காத்தலும்

51. மனித உரிமைகள் என்பன யாவை?

மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் மனிதகுலத் தேவைகளில் இருந்து தோன்றிய தனிநபர் உரிமைகளாகும். சர்வதேசச் சட்டங்களில் மனித உரிமைகளை அங்கீகரித்து, அவற்றைத் தற்காத்துக் கொள்வதற்கான வழிவகைகளைச் செய்திருப்பது இந்நூற்றாண்டு கண்ட மிக முக்கியமான அறநெறி முன்னேற்றம் எனலாம். மனித உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தங்கள் அல்லது உடன்பாடுகள் பலவற்றைச் சமீப காலங்களில் உலக நாடுகள் ஏற்றுக் கொணடுள்ளன. இந்த உடன்பாடுகள் மனித உரிமைகள் — சுதந்திரங்களின் நோக்கெல்லை பற்றி அனைவரும் ஒப்புக் கொள்ளும் வரையறைகளை உருவாக்குவதோடு, அனைத்து நாட்டு அரசாங்கங்களையும் அவ்வுரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்து சட்டப்படியாகவும் நடைமுறை ரீதியாகவும் பாதுகாப்பு அளிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோருகின்றன.

உலகளாவிய பிரகடனம்

1948 ஆம் ஆண்டு டிசம்பர் பத்தாம் நாள் ஐக்கிய நாடுகள் மாமன்றத்தின் பொதுச் சபையில் ஏற்கப்பட்ட உலகளாவிய மனித உரிமைப் பிரகடனமே, இன்று நாம் காணுகின்ற மனித உரிமைக் கருத்துக்கள் அனைத்திற்கும் தோற்றுவாய் எனலாம். உலகளாவிய பிரகடனத்தில் இடம்பெற்றிருந்த உரிமைகளின் அடிப்படையில் 1966ஆம் ஆண்டில் இரண்டு சர்வதேச துணை ஒப்பந்தங்களை ஐக்கிய நாடுகள் மாமன்றம் ஏற்றுக்கொண்டது. அவை, பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தம்; சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் ஒப்பந்தம் ஆகியவையாகும். தற்போது இந்த இரண்டு ஒப்பந்தங்களுக்கும் உலக நாடுகளில் மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் ஒப்புதல் அளித்து விட்டன. சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் ஒப்பந்தத்திற்கு விருப்புறுதி இசைவுக் குறிப்பு ஒன்றையும் ஐ.நா. ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படி, தனி மனிதர்களின் உரிமைகளை ஓர் அரசாங்கம் மீறுமானால், இசைவுக் குறிப்பின் கண்காணிப்பு அமைப்பான மனித உரிமைகள் குழுவிடம் பாதிக்கப்பட்ட நபர்கள் முறையீடு செய்ய உரிமை உண்டு. ஆனால் ஒரு நாடு இந்த சர்வதேச ஒப்பந்தத்தையும் இசைவுக் குறிப்பையும் ஏற்றுக் கொண்டிருந்தால்

தான் அந்நாட்டுக் குடிமகனுக்கு இவ்வுரிமை கிடைக்கும். பெரும்பாலான நாடுகள் இவற்றை இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை.[1]

வட்டார ஒப்பந்தங்கள்

உலகளாவிய மனித உரிமைப்பிரகடனம், இரண்டு சர்வதேச ஒப்பந்தங்கள், விருப்புறுதி இசைவுக்குறிப்பு ஆகிய அனைத்தையும் ஒன்று சேர்த்து 'சர்வதேச மனித உரிமைகள் வரைவு' என்று அழைக்கப்படுகின்றன. இவை தவிர, மனித உரிமைகள் பற்றிய அமெரிக்க ஒப்பந்தம், மனித உரிமைகள் மற்றும் மக்கள் உரிமைகள் பற்றிய ஆப்பிரிக்க சாசனம், மனித உரிமைகள் பற்றிய ஐரோப்பிய ஒப்பந்தம் போன்ற தேசிய அளவிலான ஒப்பந்தங்களும் உள்ளன. ஆனால் அவை அனைத்தையும் இங்கே நாம் விவாதிக்க முடியாது.

52. உரிமைகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?

உரிமைகளைப் பலவாறாக வகைப்படுத்தலாம் என்றாலும், சிவில் உரிமை, அரசியல் உரிமை, சமூக உரிமை, பொருளாதார உரிமை, பண்பாட்டு உரிமை என்று வகைபடுத்துவதைப் பரவலாக ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்த வகைப் பாடு சர்வதேச மனித உரிமைகள் வரைவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. உயிர வாழ்வதற்கான உரிமை, துன்புறுத்துவதில் இருந்து விடுபெறும் உரிமை, கொத்தடிமையாக இருப்பதிலிருந்து விடுபெறும் உரிமை, தன்னிச்சையாக கைது செய்யப்படுவதற்கு எதிரான உரிமை, நேர்மையான வழக்கு விசாரணை நடத்தப் படவேண்டும் என்ற உரிமை, சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சி, சமய நம்பிக்கை ஆகியவற்றில் சுதந்திரமான உரிமை, அந்தரங்க வாழ்க்கை உரிமை, பேச்சுரிமை, சங்கம் சேரும உரிமை, பொது விவகாரங்களில் பங்கெடுக்கும் உரிமை போன்றவை சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கு எடுத்துக்காட்டுக் களாகும். அதாவது, தனி மனிதர்கள் அல்லது குழுவினரின் நடவடிக்கைகளில் இருந்து அரசாங்கம் ஒதுங்கியிருப்பது அல்லது அவற்றில் தலையிடாமல் இருப்பதே சிவில் மற்றும் அரசியல் உரிமைகளாகும். மேலும் சில சமயங்களில் அரசாங்கத்தின் மீது சில கட்டுப்பாடுகளை விதிப்பதாகவும் இவ்வுரிமைகள் அமையும். எடுத்துக்காட்டாக, ஏழைமக்களில் சிலர் கடுமையான குற்றச்சாட்டு களுக்கு ஆளாகும்போது, அவற்றை எதிர்த்து நீதிமன்றங்களில் போராடுவதற்கு அவர்களுக்குப் போதிய வசதிகள் இல்லாத நிலையில் அரசாங்கம் இலவச சட்ட உதவியை அளிக்க வேண்டுமென விதிக்கலாம்; சிறுபான்மையினர் மக்கள் தொடர்பு சாதனங்களின் வாயிலாய்த் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு அரசாங்கம் செலவிட வேண்டுமென விதிக்கலாம்.

பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள்

உணவைப் பெறுவதற்கும் ஆரோக்கியமாக இருப்பதற்குமான உரிமை, நியாயமான வாழ்க்கைத் தரத்தை அடைவதற்கு உரிமை, சமவேலைக்குச்

---

1. இந்தியா இந்த ஒபபந்தத்தையும இசைவுக் குறிப்பையும் ஏற்றுக்கொண்டு தேசிய மனித உரிமை கமிஷன் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

ஊதியம் பெறும் உரிமை, சமூகப் பாதுகாப்புக்கு உரிமை, வேலை செய்யும் உரிமை, வேலை நிறுத்தம் செய்யும் உரிமை, வீட்டுவசதி பெறும் உரிமை, கல்வி பெறும் உரிமை, பண்பாட்டு வாழ்வில் பங்கு பெறும் உரிமை போன்றவை பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளுக்கு எடுத்துக் காட்டுகளாகும். தனி மனிதர்கள் தமக்குத் தாமே செய்து கொள்ள முடியாதவற்றை—அவர்கள் வேலையில்லாமல் இருப்பதாலோ, ஊன முற்றிருப்பதாலோ செய்ய முடியாதவற்றை—அரசாங்கமே செய்து தருவது அல்லது அவற்றைப் பெற அரசாங்கம் உதவியளிப்பதுதான் பொருளாதார, சமூக உரிமைகளாகும்.

பாரபட்சம் இல்லாமை

மேலே சொல்லப்பட்ட எல்லாவிதமான உரிமைகளிலும் இழையோடும் ஒரு முக்கியமான கோட்பாடு என்னவென்றால், இவ்வுரிமைகளைச் செயலுறுத்தும் போதும் பால், இனம், சமயம் போன்ற காரணங்களினால் யாருக்கும் பாரபட்சம் காட்டக்கூடாது என்பதாகும்.

53. சில உரிமைகள் மற்றவற்றைக் காட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்தவையா?

சர்வதேச அரங்கில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் அனைத்துமே ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டவையாய் இருப்பதுடன் ஒன்றுக்கொன்று வலிவு சேர்ப்பதாகவும் உள்ளன. சில நாடுகளில் அவற்றின் வளர்ச்சி நிலையைப் பொறுத்துச் சில உரிமைகள் பெரும்பாலான குடிமக்களுக்குக் கிடைத்திருப்பதாகவே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எடுத்துக்காட்டாக, பணக்கார நாடுகளில் நியாயமான வாழ்க்கைத் தரம், உணவு, உடை, உறையுள், கல்வி வசதி ஆகியவற்றைப் பெறுதல் போன்ற உரிமைகள் எல்லோருக்கும் கிட்டியதாகவே ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால் ஏழை நாடுகளில் இந்த உரிமைகளைப் பெறுவதற்குத்தான் மக்கள் போராட வேண்டியுள்ளது. மக்களாட்சி அமைப்புகள் அனைத்திலும், சட்டத்தின் ஆட்சிப்படியே குடிமகன் நடத்தப்படுதல், தன்னிச்சையாகக் கைது செய்யப்படுவதில் இருந்து பாதுகாப்புப் பெறுதல், சுதந்திரமான கருத்து வெளிப்பாடு மற்றும் சங்கம் சேருதல் போன்ற அடிப்படையான சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்திருப்பது போலவே, அடிப்படையான சமூக பொருளாதார உரிமைகளுக்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டும். ஒவ்வொரு நாடும் தனது குடிமக்கள் அனைவருடைய மனித உரிமைகளையும் எவ்விதப் பாரபட்சமும் இன்றி மதித்துப் பேணிக்காக்க வேண்டியது அவற்றின் கடமையாகும் என சர்வதேசச் சட்டம் கூறுகிறது.

54. மனித உரிமைகள் உலகளாவியவையா?

ஆம். ஏனென்றால், உலகெங்கிலும் உள்ள தனிமனிதர்களின் பொதுவான தேவைகளையும் இயல்பையும் கணக்கில் கொண்டே சர்வதேச அளவீடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. உலகமக்கள் பல்வேறு நாட்டினராகவும், பண்பாட்டினராகவும் பிரிக்கப்பட்டு இருக்கலாம்; ஏழை நாடுகளைச் சேர்ந்தவர்களாகவோ, பணக்கார நாட்டினராகவோ இருக்கலாம். சர்வதேச மனித உரிமை



அனைத்து உரிமைகளும் உலகளாவியவை

அளவீடுகள் தனிமனிதர்களில் இருந்தே ஆரம்பித்தாலும், சமூகத்திலிருந்து வேறுபட்டவர்களாகத் தனி மனிதர்களைக் கருதாமல் சமூகத்திற்குத் தனிமனிதன் ஆற்ற வேண்டிய கடமையையே பிரதானமாக வலியுறுத்துவதாலும், பண்பாடுகளிலிருந்து அன்னியமானவை என்ற வாதம் முன் வைக்கப்படுகிறது. தனிமனித உரிமைகள் பற்றிய இக்காலக் கருத்துக்கள், சமூகங்களுக்கும் அவற்றின் உறுப்புக்களாகிய மக்களுக்கும் இடையிலான உறவிற்குப் புது விளக்கம் தருகின்றனவா என்பது குறித்து முன்னேறிய நாடுகளிலும் வளரும் நாடுகளிலும் பலத்த சர்ச்சைகள் நடைபெற்று வருகின்றன. தனிமனித உரிமைகளை அங்கீகரிப்பதாலோ, அவற்றைப் பேணிக்காப்பதாலோ மனித சமூகத்தின் கட்டுக்கோப்பு சிதைந்து போனதற்கான ஆதாரம் ஏதுமில்லை. மாறாக, உலகளாவிய மனித உரிமைக் கோட்பாடுகள், தனிமனிதர்கள் தமது மொழி, பண்பாடு, சமயம், வாழ்க்கை முறை போன்றவற்றோடு ஒத்துள்ள சகமனிதர்களுடன் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய தேவையை அங்கீகரித்து அத்தகு மக்கள் பிரிவினரின் நலனைப் பேணிக்காக்கின்றன. சர்வதேச மனித உரிமைச் சட்டம் முதலில் மனிதர்கள் அனைவருக்குமான அடிப்படையான மனித உரிமைகளை அங்கீகரிக்கிறது; அதற்கும் அப்பால் எல்லா வகையான பண்பாட்டுப் பிரிவினரும் செழித்து ஓங்கும் உரிமையையும் ஏற்றுக்கொள்கிறது

உரிமைகளும் கடமைகளும்

தனிமனிதர்கள் தாம் சார்ந்துள்ள சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளைப் பற்றியும் உலகளாவிய மனித உரிமைப் பிரகடனம் பேசுகிறது. தனி மனிதன் ஒரு சமூகத்துடன சேர்ந்திருக்கும்போதுதான் அவனுடைய ஆளுமை எவ்வித கட்டுப்பாடும் இன்றி முழுமையாக உருப்பெறுகிறது என அப்பிரகடனம் வலியுறுத்துகிறது. இருந்த போதிலும், தனிமனிதர் ஒவ்வொருவரும் தனிச் சிறப்பியல்புடையவர் என்று எண்ணும்போதுதான் மனித உரிமை என்ற கருத்தே தோன்றுகிறது. (இரண்டாவது வினாவையும் காண்க).

தெரிவில்லாத அளவீடுகள்

தனிநபருக்கு முன்னுரிமை அளிக்கவேண்டுமா அல்லது சமூகத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமா என்ற முரண்பாட்டினைக் காட்டிலும், தனிநபர்களின் உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமா அல்லது அவர்களுடைய கடமைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமா என்ற முரண்பாட்டில் இருந்து, உலகளாவிய விருப்பங்களாக மனித உரிமை அளவீடுகள் அமைவதற்கு எதிர்ப்புகள் குறைவாகவே தோன்றுகின்றன. எனவே, மனித உரிமைகளின் இந்தப் பரிமாணங்களைப் பொறுத்தவரை, அவற்றின் உலகளாவிய அத்தியாவசியக் கூறுகளைப் புறந்தள்ளாமல், பலதரப்பட்ட பண்பாடுகளிலும் வெவ்வேறான அளவீடுகள் இருக்கும் என்பது தெளிவு. மேலும், மனித உரிமை மீறல்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் எல்லா அரசாங்கங்களும் ஒரே மாதிரியாக நடந்து கொள்ளாத ஆதாரங்களும் இந்த எதிர்ப்புகளுக்கு எண்ணெய் வார்க்கின்றன. நாடுகளுக்கு இடையேயான அதிகார உறவுகளின் அடிப்படையில் மனித உரிமை மீறல் எதிர்ப்புகளில் பாரபட்சமாக நடந்து கொள்வது கண்டிக்கத்தக்கதே. வேறு விதமாகச் சொல்வதென்றால், எதிரி நாடுகளின் மனித உரிமை

மீறல்களைக் கடுமையாக விமர்சிக்கின்ற நாடுகள், தமது நட்பு நாடுகளின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளைக் கண்டு கொள்வதே இல்லை. மனித உரிமைகளுக்கும் மக்களாட்சிக்கும் உலகளாவிய ஆதரவைப் பெறவேண்டுமானால், மனித உரிமைகளை மதித்து நடக்கும் சர்வதேச நடைமுறை, பொதுவான உலக அளவீடுகளை மதித்து நடப்பதான சர்வதேச பொறுப்புடைமையின் அடிப்படையில் உருவாக வேண்டும்; அதுவும் மற்ற நாடுகளின் மனித உரிமை மீறல்களை மதிப்பிடும்போது அனைத்திற்கும் ஒரே மாதிரியான அளவீடுகளைப் பின்பற்றும் கோட்பாட்டினைச் சார்ந்து அமைய வேண்டும்.

வியன்னா மாநாடு

மனித உரிமைகள் பற்றிய இந்த முக்கியமான அம்சங்களும், இவற்றைப் பேணுவதில் உலக நாடுகளுக்கு உள்ள கடமைகளும், 1993ஆம் ஆண்டு ஜூன் மாதம் வியன்னாவில் நடைபெற்ற உலக மனித உரிமைகள் மாநாட்டில் திட்டவட்டமாக உறுதிப்படுத்தப்பட்டன.

> மனித உரிமைகள் அனைத்தும் உலகளாவியவை; ஒன்றை ஒன்று சார்ந்தும், தொடர்புடையதாயும் விளங்கும் அவ்வுரிமைகள் தனித்துப் பிரிக்க முடியாதவை. உலக நாடுகள் அனைத்தும் மனித உரிமைகளை எல்லா நாடுகளிலும் சமமான கண்ணோட்டத்தில், நியாயமான முறையில், ஒரே மாதிரியாகவே அணுகவேண்டும். உலக நாடுகள் தமது தேசிய, வட்டார சிறப்பியல்புகளையும், பல்வேறு வரலாற்று—பண்பாட்டு—சமயப் பின்னணிகளையும் கருத்தில் கொள்கின்ற அதே நேரத்தில் அவற்றின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு முறைகள் எவ்வாறாக அமையினும் மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் பேணிக்காப்பது அவற்றின் கடமையாகும் (நிறைவு ஆவணம், பத்தி.3).

55. ஒரு நாட்டின் மனித உரிமை மீறல்கள் பற்றி உலக நாடுகள் கவலை தெரிவிப்பது முறையாகுமா?

ஒரு நாட்டின் உள் விவகாரங்களில் மற்ற நாடுகள் தலையிடக் கூடாது என்பது ஐக்கிய நாடுகள் சாசனத்தில் வரையறுக்கப்பட்டு ஏற்கப்பட்டுள்ள கோட்பாடாகும். எனினும் சர்வதேச அளவிலான மனித உரிமைகள் இயக்கம் பெற்றுள்ள வளர்ச்சியினாலும், மனித உரிமைகள் பற்றிய சர்வதேச அளவீடுகள் தொடர்ந்து விரிவாகி வந்ததாலும் மனித உரிமைகள் மீறல் விஷயத்தில் மற்ற நாடுகள் விமர்சிப்பது அதன் உள் விவகாரங்களில் தலையிடுவதாக ஆகாது என்பது தற்போது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. 'மனித உரிமைகள் அனைத்தையும்போற்றி, பேணிக் காப்பது உலக நாடுகள் அக்கறை காட்டவேண்டிய ஓர் விஷய மாகும்' என்று உலக மனித உரிமைகள் மாநாடு உறுதிப்படுத்தியுள்ளது (நிறைவு ஆவணம், பத்தி2.2).

56. மனித உரிமைகளுக்கும் மக்களாட்சிக்கும் என்ன உறவு?

மனித உரிமைகளுக்கும் மக்களாட்சிக்கும் இடையேயான உறவு, 'ஒன்றை ஒன்று சார்ந்திருப்பதுடன் பரஸ்பரம் வலுச் சேர்ப்பதாகும்' என்று உலக மனித

உரிமைகள் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மனித உரிமைகளின் பாதுகாப்பும், சட்டத்தின் ஆட்சியும் முன்னேறிய நாடுகளில் மட்டுமின்றி வளரும் நாடுகளில்கூட மக்களாட்சிக் கோட்பாட்டின் மூலமே சிறப்பாக உறுதி செய்யப் படமுடியும் என்பதை உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொண்டிருப்பதே இக்கருத்துக்கு வலுச் சேர்ப்பதாகும். மேலும், சிறப்பாகவும் முறையாகவும் மக்களாட்சி செயல்பட வேண்டுமானால் மனித உரிமைகளும் அடிப்படை சுதந் திரங்களும் சரியாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. மக்களாட்சியல்லாத அமைப்புகளில், அதிலும் குறிப்பாக, பொருளாதார முன்னேற்றத்திற்கு முன்னுரிமை அளிக்கின்ற அமைப்புகளில், மனித உரிமைகளைப் பேணிக்காக்க முடியும் என்று சிலர் வாதிடலாம். ஆனால் அத்தகைய அமைப்புகள் விரைவிலேயே நலமிழந்து, அடக்குமுறை மிகுந்து, ஊழல் மலிந்து, ஸ்திரமற்றுப் போனதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

மக்களாட்சியைப் பெறுவதும் மனித உரிமையே

மக்களாட்சிக்கும் மனித உரிமைகளுக்கும் நெருங்கிய தொடர்புள்ளதென்ற நம்பிக்கை புதியதாகத் தோன்றியதன்று. உலகளாவிய மனித உரிமைப் பிரகட னத்தில் மக்களாட்சி அரசாங்கத்திற்கான ஒப்புதலும் சேர்க்கப்பட்டுள்ளது. 'மக்களின் விருப்பமே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாகத் திகழ வேண்டும்' என (பிரிவு 21) அதில் கூறப்பட்டுள்ளது. பொது விவகாரங்களில் குடிமக்கள் நேரிடையாகவோ, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் மூலம் மறைமுகமாகவோ பங்கெடுக்கவும், குறிப்பிட்ட கால இடைவெளியில் நடை பெறும் தேர்தல்களில் வாக்களிக்கவும், போட்டியிடவும், பதவி வகிப்பதில் சமவாய்ப்பு பெறவும் ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையும் வாய்ப்பும் அளிக்க வேண்டுமென சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் ஒப்பந்தம் கூறுகிறது (பிரிவு 25).

வளர்ச்சிக்கு உரிமை

உலகளாவிய மனித உரிமைகளும் மக்களாட்சி அரசும் பரஸ்பரம் ஒன்றுக் கொன்று தொடர்புடையவை என்று திட்டவட்டமாக அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொண்டிருப்பது, கெடுபிடிப் போருக்குப் பின்னர் சர்வதேச உறவுகளில் ஏற்பட்டுள்ள முக்கியமானதொரு முன்னேற்றமாகும். மேலும், மனித உரிமை களையும் மக்களாட்சி அரசாங்கத்தையும் ஏற்றுப் போற்றுவதன் மூலமே வளர்ச்சிக்கான உரிமையை அடைய முடியும் என்று வளரும் நாடுகள் ஒப்புக் கொண்டிருப்பதும் இக்கால கட்டத்தில் ஏற்பட்டுள்ள அனுகூலமான இன்னொரு முன்னேற்றமாகும்

57. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கும் மக்களாட்சிக்கும் என்ன உறவு?

ஒவ்வொரு குடிமகனுடைய சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கு அளிக்கப் படும் உத்தரவாதம் மக்களாட்சியில் இரண்டு முக்கியப் பணிகளை



இதுவும் ஜனநாயக உரிமையே

ஆற்றுகின்றன. முதலாவதாக, கூட்டாக முடிவெடுத்தலில் அரசியல் சமத்துவம் மற்றும் மக்களின் கட்டுப்பாடு என்ற மக்களாட்சியின் இரட்டைக் கோட்பாடு களையும் உறுதி செய்வதற்கு இந்த உரிமைகள் அவசியமானவை. இரண்டாவ தாக, பெரும்பான்மை முடிவுகளுக்கும் அப்பாற்பட்டதான தனிநபர் விருப்பங் களையும் சுதந்திரத்தையும் வரையறுப்பதன் மூலம் இந்த உரிமைகள் கூட்டுச் செயல்பாட்டுக்கு மூக்கணாங்கயிறாகச் செயல்படுகின்றன. இந்த இரண்டு முக்கியப் பணிகளையும் இன்னும் விளக்கமாக அறிந்து கொள்ள மக்களாட்சி முறையுடன் நெருக்கமாகத் தொடர்புடைய சிவில் மற்றும் அரசியல் உரிமை களைச் சற்றுச் சுருக்கமாக ஆராயலாம்.

தனி மனிதர்களின் சுதந்திரமும் பாதுகாப்பும்

தன்னிச்சையாக கைது செய்தல், காவலில் வைத்தல், துரத்தியடித்தல், நாடு கடத்துதல் போன்றவற்றில் இருந்து பாதுகாப்பு அளிக்கப்படாமல் எவரும் அரசியல்விவாதங்களிலோ, நடவடிக்கைகளிலோ பங்கேற்க முடியாது. நாடாளு மன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றம் சம்பந்தபட்ட நடவடிக்கைகளில் ஈடுபட் டிருக்கும் போது அவர்களைக் கைது செய்ய முடியாமல் பாதுகாப்பு அளிக்கும் விதியை அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொண்டிருப்பதில் இருந்தே இத்தகைய பாதுகாப்பின் அவசியம் புலப்படும். எனவே, தனிமனித சுதந்திரத்தை மதித்து நடக்க வேண்டிய தேவை எல்லா மக்களாட்சிகளுக்கும் அவசியமானது. மக்களாட்சிச் சமூகத்தில் பெரும்பான்மையோர் விருப்பத்திற்கு மாறாகக்கூட, எவருமே விரும்பாத ஒரு தனிமனிதனின் சுதந்திரத்திற்கு பாதுகாப்பு அளிக்கப் படுகிறது.

முறையான வழி

குடிமக்கள் மீது அநியாயமாகக் குற்றஞ்சாட்டுவது, ஒரவஞ்சனையுடன் வழக்குப் போடுவது, அவர்களை மோசமாக நடத்திச் சித்ரவதை செய்வது போன்ற வற்றுக்கு எதிராகவும் பாதுகாப்பளிக்கப்பட வேண்டும் எனவும் வாதங்கள் முன் வைக்கப்படலாம் மக்களாட்சி நெறியை ஏற்காத சமூகத்தில் அரசியல் எதிரி களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவது வாடிக்கைதான். ஆனால் மக்களாட்சி அமைப்பில், சுயேட்சையான நீதித்துறையும், குற்றநீதி நிர்வாகமும் அவசிய மாகும். அவை சட்டத்தின் ஆட்சி அடிப்படையில் இருப்பதுடன், அரசியல் அல்லது கருத்தியல் செல்வாக்கின் தாக்குறவு இல்லாததாகவும் இருக்க வேண்டும்.

சிந்தனைச் சுதந்திரமும் மனச்சாட்சிச் சுதந்திரமும்

மக்களாட்சிச் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் சுயமான சிந்தனை கொண்டவர்கள் என்றும், தத்தமக்கு என்று விருப்பங்களையும், எண்ண ஓட்டங்களையும், கருத்துக் களையும், வாழ்வியல் தத்துவங்களையும் அவர்கள் கொண்டிருப்பதற்குச் சுதந்திரம் உள்ளதென்றும் பொதுவாகவே ஏற்கப்பட்டுள்ளது. அதேபோல மற்ற வர்களின் உரிமைக்குப் பங்கம் இன்றி தனிநபர்கள் தமக்கு விருப்பமான சமயத்தை ஏற்றுப் பின்பற்றி வளர்ப்பதற்கும் மக்களாட்சி சுதந்திரம் அளிக்கிறது. பொதுவாக சமுதாயத்தில் நிலவுகின்ற நம்பிக்கையானாலும் அல்லது மிகப்

பெரும்பான்மையோரின் நம்பிக்கையானாலும், அவற்றுக்கு எதிராகச் சிந்திக்கக் கூடிய தனிமனித உரிமையை எப்போதும் மதித்துப் போற்ற வேண்டும். சமய நம்பிக்கையானாலும், சமயச்சார்பற்ற நம்பிக்கையானாலும் அதில் தனிமனித சிந்தனைச் சுதந்திரம் இருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக சமயச் சிறு பான்மையினருக்கு, பெரும்பான்மைச் சமூகத்தினருக்கு உள்ள அத்தனை உத்தர வாதங்களும் அளிக்கப்பட வேண்டும்.

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும், மக்கள் தொடர்பு சாதனங்களின் சுதந்திரமும்

ஒவ்வொரு குடிமகனின் குரலும் மற்றவர்களுடையதைப் போலவே செவி மடுக்கப்படவேண்டும் என்பதுதான் மக்களாட்சியின் சாரம் என ஏற்கெனவே நாம் கண்டுள்ளோம். எனவே ஒவ்வொரு குடிமகனுடைய குரலும் செவிமடுக்கப் படவேண்டும் என்றால் பேச்சுரிமை அத்தியாவசியமான மனித உரிமையாகும். பேச்சுச் சுதந்திரம் என்பது பேச்சுரிமை மட்டுமல்லாமல், எல்லைகளைக் கடந்து எந்த ஒரு மக்கள் தொடர்பு சாதனத்தின் வாயிலாகவும் எல்லாவிதமான தகவல் களையும் கருத்துக்களையும் கோரிப் பெறும் உரிமையும் அடங்கியது என்று சர்வதேச அளவீடுகள் குறிப்பிடுகின்றன. அதாவது, மக்கள் தொடர்பு சாத னங்கள், தனிமனிதர்களின் கௌரவத்தையும் அந்தரங்கத்தையும் பாதுகாக்கும் விதிகளுக்கு உட்பட்டு, குடிமக்களுக்குத் தகவல் அறிவிக்கவும், அரசாங்கத்தை விமர்சிக்கவும், அரசாங்கத் திட்டங்களைப் பற்றிய விவாதங்களைத் தூண்டி விடவும் இயலுமாறு சுதந்திரமாகச் செயல்படவேண்டும் (ஆறாம் வினாவைக் காண்க).

தகவலறியும் சுதந்திரம்

தகவலறியும் சுதந்திரத்தின் வாயிலாக மக்களாட்சி அரசின் வெளிப்படையான தன்மை மேலும் உயருகிறது. அதாவது, ரகசியமானவை என்று ஏற்கப்படும் ஒரு சில விதிவிலக்கான விஷயங்கள் தவிர அரசாங்கத்தின் எல்லாவிதமான நடவடிக்கைகள் மற்றும் ஆவணங்களைப் பொதுமக்கள் தாராளமாகப் பார்த்து, தெரிந்து கொள்ளும் சுதந்திரம் (37ஆவது வினாவைக் காண்க).

கூட்டாகச் சேரவும் சங்கம் அமைக்கவுமான சுதந்திரம்

பொது விவகாரங்களை விவாதிப்பதற்காக மக்கள் அனைவரும் ஒன்று கூடவும், தொழிற்சங்கங்கள் மற்றும் அவை போன்ற ஏனைய சங்கங்களை அமைக்கவும், அரசாங்கத்திடம் தமது கோரிக்கைகளை ஒரு சேர முன்வைக்கவும், அரசியல் கட்சிகளை அமைக்கவும், அவற்றில் பங்கெடுத்துக் கொள்ளவும் உத்தரவாதம் அளிக்கப்படவில்லை என்றால் பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை செயல்படவே முடியாது. மக்கள் பெருந்திரளாக ஓரிடத்தில் கூடும் உரிமை, தர்ணா செய்யும் உரிமை, குறைபாடுகளை நிவர்த்திக்க முறையிடும் உரிமை ஆகியவையும் இந்தச் சுதந்திரத்தில் அடங்கும்.

58. சமூக, பொருளாதார உரிமைகள் மக்களாட்சியுடன் எவ்வாறு தொடர்புடையன?

மக்களாட்சி பிரமிடில் (15 ஆவது வினாவைச் காண்க) வேலை வாய்ப்பு, வீட்டு வசதி, உணவு, நியாயமான வாழ்க்கைத் தரம், கல்வி வசதி போன்றவற்றுக்கு உத்தரவாதம் அளிக்கும் அடிப்படை உரிமைகள், சிவில் சமுதாயத்தைக் கட்டமைக்கும் அடித்தளங்களாகத் திகழ்வதைக் கண்டோம். பஞ்சமும் பட்டினியும் தலை விரித்தாடும் சமூகத்தில் மக்களாட்சி அரசியல் உருப்படியாக அமைய முடியாது. மக்களாட்சி சரிவரச் செயல்பட வேண்டுமானால் மனிதனின் அடிப் படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். வாக்காளரின் குரல் ஒவ்வொன்றும் சமமாகப் போற்றப்படவேண்டும் என்று மக்களாட்சிக் கோட் பாடுகள் கூறுகின்றன. வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்வதில் எந்த அளவிற்கு ஏற்றத் தாழ்வுகள் உள்ளனவோ அந்த அளவிற்கு ஒரு சமூகத்தின் மக்களாட்சித் திறம் பாதிக்கப்பட்டுவிடும். ஆனால் அதே சமயத்தில், அத்தகைய ஏற்றத் தாழ்வுகளை இனங்கண்டு அவற்றைப் போக்குவதற்கான கூட்டு முயற்சி யாகவும் மக்களாட்சி முறை திகழ்கிறது.

வளர்ச்சியும் மனித உரிமைகளும்

வளர்ச்சிப் பணிக்கும் இது அப்படியே பொருந்தும். மக்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்புடையதாகவும் சட்டத்தின் ஆட்சிக்கு உட்பட்டும் மனித உரிமைகள் அனைத்தையும் மதிப்பதான கட்டமைப்புக்கு உட்பட்டும், வளர்ச்சித் திட்டங்கள் அமையும் போதுதான் அவை நீண்டகாலத்திற்குத் தாக்குப் பிடித்துச் செயல்பட முடியும்.

59. உரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மக்களாட்சி அரசுக்கு முகாந்திரங்கள் உள்ளனவா?

பொது ஒழுங்கு, தேசியப் பாதுகாப்பு, மற்றவர்களின் உரிமை போன்ற குறிப் பிட்ட காரணங்களுக்காக சில உரிமைகளைச் செயல்படுத்துவதற்குத் தடை விதிக்க சர்வதேச அளவீடுகள் அனுமதி அளிக்கின்றன. ஆனால் வேறு சில உரிமைகளை அவ்வாறு கட்டுப்படுத்த முடியாது. துன்புறுத்தப்படுவதில் இருந்து பாதுகாப்பு, சிந்தனைச் சுதந்திரம், பாரபட்சமான போக்கிற்கு எதிரான பாதுகாப்பு போன்ற சில அடிப்படை உரிமைகளை மக்களாட்சி முறையில் ஒரு போதும் நிறுத்தி வைக்க முடியாது.

உரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்கான கோட்பாடுகள்

ஓர் உரிமையில் தலையிடுவது அல்லது அவ்வுரிமையைக் கட்டுப்படுத்துவதற்கான நியாயமான காரணங்கள் பற்றிய கோட்பாடுகள் சர்வதேச சட்டவியலில் குறிப் பிடப்பட்டுள்ளன. அவையாவன: சட்டத்தின்படி விதிக்கப்பட்டுள்ள கட்டுப் பாடுகள்; நியாயமான காரணத்திற்கான கட்டுப்பாடு - அதாவது, சர்வதேச அளவீடுகளால் அனுமதிக்கப்பட்ட கட்டுப்பாடு; மக்களாட்சி அமைப்பின் கருது கோளுக்கு ஏற்றவாறு விதிக்கப்படும் கட்டுப்பாடு அல்லது தலையீடு. அரசாங்கம்



காவல்துறை, ராணுவம் போன்றவற்றுக்கும் மனித உரிமைகள்
பற்றிய கல்வி அளிக்கப்பட வேண்டும்

கட்டுப்பாடுகளை விதிக்கும்போது அவை கண்டிப்பானவை அல்ல என்றும், நியாயமான வரம்புகளுக்கு உட்பட்டவையே என்றும் அது காட்டியாக வேண்டும் என்பதே இதற்குப் பொருளாகும்.

விதிவிலக்கான சூழ்நிலைகள்

எனவே, ஓர் அரசியல் கட்சியை அது அரசியலமைப்புக்குப் புறம்பான செயல்களிலோ, வன்முறை நடவடிக்கைகளிலோ ஈடுபட்டுள்ளது என்று தெள்ளத் தெளிவாக நிரூபிக்கும் வரை அதனைத் தடை செய்ய முடியாது. அதே போல் மிகவும் அசாதாரணமான சூழ்நிலைகளில்தான் பத்திரிகைகளுக்கு முன் தணிக்கையை அமலாக்கலாம் என்று சர்வதேச மனித உரிமை அளவீடுகள் வரையறுத்துள்ளன. மிகவும் கொந்தளிப்பான செய்தியை வெளியிடப் போகிறது என்றும் அவ்வாறு வெளியிட்டால் தனி நபர்களின் உயிருக்கு அபாயம் நேரும் என்றோ, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நேரும் என்றோ நீதிமன்றத்தின் முன்னர் எடுத்துரைத்த பின்னரே பத்திரிகை முன்தணிக்கையை அமலாக்கலாம்

60. நெருக்கடி நிலைகளில் மனித உரிமைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாமா?

ஒரு நாட்டின் உயிருக்கு அபாயம் நேருகின்ற சூழ்நிலை உருவாகியுள்ளதென அதிகாரப் பூர்வமாக நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ள சந்தர்ப்பங்களில் சிலவகையான சிவில் உரிமைகளையும் அரசியல் உரிமைகளையும் செயலபடுத்துவதைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கலாம் என்று சர்வதேச மனித உரிமை அளவீடுகள் அனுமதி அளிக்கின்றன. உள்நாட்டு அரசியல் போராட்டம் அல்லது இனப் போராட்டம் முற்றிப்போய், வன்முறையும் பயங்கரவாதமும் தலைவிரித்தாடுகின்றன என்ற காரணத்தைக் காட்டியே பல அரசுகள் அடிக்கடி நெருக்கடி நிலையை அறிவிக்கின்றன. அப்போதெல்லாம் எவரை வேண்டுமானாலும் கைது செய்யவும் எந்த இடத்தை வேண்டுமானாலும், சோதனையிடவும், விசாரணையின்றிக் காவலில் வைக்கவும் காவல் துறைக்கும் ஏனைய பாதுகாப்புப் படைகளுக்கும் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன.

மட்டுப்படுத்த முடியாத உரிமைகள்

மக்களாட்சி அரசு மிகவும் தயக்கத்துடனேயே நெருக்கடி கால அதிகாரங்களை அமல்படுத்தும்; விசேஷ அதிகாரங்களை மிகவும் குறுகிய காலத்திற்கு மட்டுமே செயல்படுத்துவதுடன், அந்த அதிகாரங்கள் தவறாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதற்குரிய அதிகபட்ச பாதுகாப்பு ஏற்பாடுகளையும் முன்கூட்டியே செய்து விடும். நெருக்கடிநிலைப் பிரகடனத்தின்போதுகூட உயிர் வாழ்க்கை உரிமை, சிந்தனைச் சுதந்திரம், மனசாட்சிச் சுதந்திரம், துன்புறுத்தப்படுவதில் இருந்து பாதுகாப்புப்பெறும் உரிமை போன்ற சில உரிமைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவோ, மட்டுப்படுத்தவோ முடியாது. மட்டுப்படுத்த முடியாத உரிமைகள் என்றழைக்கப்படும் இவ்வுரிமைகள் முழுநிறைவான உரிமைகளாகும்.

61. மக்களாட்சியில் குடியுரிமை பெறுவதில் இருந்து எவரையேனும் சட்டப்படி விலக்கி வைக்க முடியுமா?

யார் யாரெல்லாம் ஒரு நாட்டின் குடிமகனாக முடியும் என்றும், குடியுரிமையை எங்ஙனம் பெறுவதென்றும் தீர்மானிக்கும் உரிமை அந்த அரசாங்கத்திற்கு உண்டு. ஆனால் இந்த இறையாண்மை அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது அரசாங்கம் பாரபட்சமாக நடந்து கொள்ளக்கூடாது. எடுத்துக்காட்டாக, இனவழி பாரபட்சம் காட்டுகின்ற குடியேற்றக் கொள்கையைப் பின்பற்றக்கூடாது. அகதிகளை அனுமதிக்கின்ற விஷயத்தில் ஒரு நாடு தான் ஒப்புதலளித்துள்ள சர்வதேச உடன்பாடுகளின்படி நடந்து கொள்ள வேண்டும்.

குடியிருக்கும் அன்னியர்களின் உரிமைகள்

ஒரு நாட்டில் வசிக்கும் குடிமக்கள் அல்லாத அன்னியப் பிரஜைகளுக்கு அரசியல் உரிமைகளை வழங்க அந்த அரசாங்கம் மறுக்கலாம். ஆனால் மக்களாட்சி முறையில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு நாட்டில் வசித்த அன்னியப் பிரஜைகளுக்குக்கூட வாக்களிக்கும் உரிமை உட்பட அரசியலில் பங்கெடுக்கும் உரிமைகள் வழங்குவது அண்மைக்காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது (வினா 21ஐக் காண்க). குடியுரிமையுடன் சேர்ந்துவரும் அரசியல் உரிமைகள் தவிர, சட்டப்படியாக ஒரு நாட்டில் குடியிருக்கும் அன்னியப் பிரஜைகளுக்கு எவ்விதமான பாரபட்சமும் இன்றி எல்லாவிதமான அடிப்படை உரிமைகளும் வழங்கப்படுவதை உறுதி செய்யும் கடப்பாடும் அரசாங்கத்திற்கு உண்டு.[1]

62. மக்களாட்சியில் சிறுபான்மையினருக்கு ஏதேனும் உரிமைகள் உள்ளனவா?

சமயச் சிறுபான்மையினர், இனவழிச் சிறுபான்மையினர், மொழிவழிச் சிறுபான்மையினர், பண்பாட்டுச் சிறுபான்மையினர் என்று எவராயினும் அவர்களுக்கென்று சில குறிப்பிட்ட பாதுகாப்புகளை சர்வதேச மனித உரிமைக் கோட்பாடுகள் அளிக்கின்றன. அத்தகைய சிறுபான்மையினர் இருப்பதை ஒரு நாடு அங்கீகரிக்க வேண்டுமென்ற உரிமை மட்டுமின்றி, அவர்களுடைய தனித்துவத்தைப் போற்றிக் காக்கவும், பேணி வளர்க்கவும் அவர்களுக்கு உரிமை உண்டு. நாட்டின் விவகாரங்களில் மற்றவர்களைப்போலவே சம அளவில் பங்கெடுக்கவும், தம்முடைய சிறுபான்மை இனத்தைப் பாதிக்கின்ற முடிவுகளை மேற்கொள்வதில் பங்கெடுக்கவும் உள்ள உரிமை உள்பட சிறுபான்மையினருக்கு எல்லாவிதமான மக்களாட்சி உரிமைகளும் உண்டு.

சிறுபான்மையினர் பற்றிய ஐ.நா. பிரகடனம்

இவையும் பிற கோட்பாடுகளும் 1992 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுப் பேரவையில் ஏற்கப்பட்ட தேசிய, இனவழி, சமய, மொழிச் சிறுபான்மைப் பிரிவு மக்களின்

1. இந்தியாவில் குடியிருக்கும் அன்னியர்களுக்கு, வாக்குரிமை உள்ளிட்ட அரசியலில் பங்கேற்கும் உரிமையைத் தவிர மற்ற அனைத்து அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் உண்டு.

உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் பிரகடனத்தில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. அநேக நாடுகளில் சிறுபான்மைப் பிரிவினர் உள்ளனர். அவர்களுடைய உரிமைகளை எவ்வாறு அவை அணுகுகின்றன என்பதே மக்களாட்சிக்குரிய பரிசோதனையாகும். ஐ.நா.வின் இந்தப்புதிய பிரகடனத்தின் கோட்பாடுகளை அமல்படுத்துவதே எல்லா நாடுகளுடைய உடனடி இலட்சியமாக இருக்க வேண்டும்.

63. மனித உரிமைகளை நடைமுறையில் எவ்வாறு தற்காத்துக் கொள்வது?

உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள் குறித்து மக்களாட்சி அமைப்புகளிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. எனினும் இந்த வழிமுறைகள் குறித்தும், மனித உரிமைகள் மீறப்படும்போது அதற்கான பரிகாரம் பெறுவதற்கான ஏற்பாடுகள் குறித்தும் சர்வதேச அளவீடுகள் சில வழிமுறைகளைக் குறிப்பிடுகின்றன. தமது நாடு ஏற்பளித்துள்ள மனித உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கைகளில் இடம் பெற்றுள்ள உரிமைகளைக் குடிமக்கள் செயலுறுத்தலாம். உலக நாடுகளில் ஒரு சிலவற்றைத் தவிர மற்ற அனைத்தும் எழுதப்பட்ட அரசியலமைப்பைக் கொண்டுள்ளன. அவற்றில் மக்களாட்சி முறை செயல்படும் விதத்துடன், உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் பற்றியும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.[1] அரசியலமைப்புகளில் இடம் பெற்றுள்ள 'உரிமைப்பட்டியலில்' உள்ள தனிமனித உரிமைகளை தற்காப்பதில் நீதிமன்றங்கள் முன்னிலை வகிக்கின்றன. மக்கள் தமது உரிமைகளை நிலைநாட்டுவதற்காக, தங்கு தடையின்றி நீதிமன்றங்களை அணுகவும், தேவையானால் இலவச சட்ட உதவி பெறவும் வாய்ப்பு இருக்க வேண்டும். இவ்வுரிமைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில், நீதிமன்றங்கள் பிறப்பிக்கும் உத்தரவுகளை அரசாங்கம் அமல்படுத்த வேண்டும்; மனித உரிமைகளை மீறுவதான சட்டங்கள் ரத்து செய்யப்படுவதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதும் இதில் அடங்க வேண்டும். மேலும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உடன்பாட்டு நடவடிக்கையாகச் சில சட்டங்கள் இயற்றப்படவும் வேண்டும். எடுத்துக்காட்டாக, எல்லா விதமான பாரபட்சமான போக்குகளையும் தடை செய்யவும், சிறுவர், மகளிர், ஊனமுற்றோர். சமூக ரீதியாகப் பின்தங்கியோர் போன்ற பாதிப்புக்கு ஆளாகும் பிரிவினருக்கு உரிய உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்யவும் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

உரிமைகளைத் தற்காப்பதற்கான அமைப்புகள்

மக்களாட்சியில் மக்கள் தமது உரிமைகளைப் பெறவும், நியாயம் பெறவும் தேர்ந்தெடுக்கப்பட்ட தமது பிரதிநிதிகளையே அவ்வப்போது அணுகுகின்றனர். உரிமைகள் மீறப்படுவதைக் கண்காணிக்கும் காவல்நாயாக, மக்கள் தொடர்பு சாதனங்கள் முக்கியப் பணியாற்ற முடியும். நடைமுறையில், அரசாங்கத்தின்

---

1. இந்திய அரசியலமைபபில் அடிப்படை உரிமைகள் என்ற ஓர் அத்தியாயம் சேர்க்கப்பட்டு, உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தில் உள்ள கிட்டத்தட்ட அனைத்து உரிமைகளுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

செயல்பாடுகளைக் கவனிக்கும் சுயேட்சையான அமைப்பு உள்பட பல அமைப்புகள் மனித உரிமைகளின் தற்காப்பிற்காகச் செயல்படுகின்றன.[1] ஆனால் எல்லாவற்றுக்கும் மேலான காப்பு, மக்களாட்சியின் கோட்பாடுகளிலும் நோக்கங் களிலும் நம்பிக்கை கொண்டு செயல்படுவதே ஆகும். எனவே மனித உரிமைகள் பற்றியும், மக்களாட்சிக் குடியுரிமை பற்றியும் எல்லா நிலைகளிலும் மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். அத்தகைய அறிவுறுத்தல்கள் பள்ளிகள், கல்லூரிகளில் மட்டுமின்றி காவல்துறை, இராணுவம் உள்ளிட்ட அரசாங்க அமைப்புகளில் உள்ளவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

1. இந்தியாவில் மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்காக 'தேசிய மனித உரிமைக் கமிஷன்' என்ற சுயேட்சையான அமைப்பு செயல்பட்டு வருகிறது.

5

மக்களாட்சி நெறியுள்ள சமூகம் அல்லது சிவில் சமூகம்

64. சிவில் சமூகம் என்றால் என்ன?

சமூக நிறுவனங்கள் அனைத்தையும் அரசாங்கத்தின் ஆதரவுடன் தோற்றுவித்து நிர்வகித்த இருபதாம் நூற்றாண்டின் பாசிச, கம்யூனிச சர்வாதிகார அரசுகளால் ஏற்பட்ட மோசமான அனுபவத்தின் காரணமாக, மக்களாட்சியின் ஓர் அத்தியாவசியமான அங்கமாக சிவில் சமூகம் அமைய வேண்டும் என்ற கருத்துத் தோன்றியது எனலாம். சிவில் சமூகம் என்ற கருத்தை இரு வேறு கோணங்களில் இருந்து பார்க்கலாம். எதிர்மறையாகப் பார்த்தால், சமூக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது, சமூக வாழ்வு முறையில் ஊடுருவுவது, சமூக முயற்சிகளையும் திறமைகளையும் ஈர்த்துக் கொள்வது ஆகியவற்றில் அரசாங்கத்தை அண்ட ஒட்டாமல் தடுக்கலாம். உடன்பாட்டு நோக்கில் பார்த்தால், சமூகத்திற்குள் சுதந்திரமாகச் செயல்படும் பல சுயஸ்தாபனங்களின் மூலம் மக்கள் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கூட்டு முயற்சி மேற்கொள்ளவும், அரசாங்கத்தின் மீது நெருக்குதலை உண்டாக்கப் பொதுமக்களின் எண்ண ஓட்டத்தை வெளிப்படுத்தும் வாயிலாகவும், அரசாங்கத்தின் அத்து மீறல்களில் இருந்து பாதுகாப்புப் பெறும் கவசமாகவும் சிவில் சமூகம் திகழ்கிறது

சிவில் சமூகத்தின் கூறுகள்

சந்தைப் பொருளாதாரம் (ஒன்பதாம் வினாவைக் காண்க), சுதந்திரமான தகவல் தொடர்பு சாதனம் (ஆறாம் வினா), அரசாங்கக் கொள்கைகளின் அனைத்து அம்சங்களையும் பற்றிய அரசு சாராத நிபுணத்துவ ஆதாரங்கள் ஆகியவற்றுடன் எல்லாவற்றுக்கும் மேலாக, மக்கள் தமது விவகாரங்களைத் தாமே நிர்வகித்துக் கொள்வதற்கு ஏற்றவாறு சமூக வாழ்வின் எல்லாத் தரப்பிலும் பரவலாகக் காணப்படும் தன்னார்வ அமைப்புகள் போன்றவை சிவில் சமூகத்தின் பிரதானக் கூறுகளாகும். இத்தகைய தன்னார்வ அமைப்புகள் தொழிற்சங்கங்களாகவோ, தொழில் முறைச் சங்கங்களாகவோ, மகளிர் அமைப்புகளாகவோ, மனித உரிமை அமைப்புகளாகவோ, வளர்ச்சி அமைப்புகளாகவோ, சுய உதவிக் குழுக்களாகவோ, சமய ஸ்தாபனங்களாகவோ, கீழ்மட்டத்து அமைப்புகளாகவோ எப்படிப்பட்டவையாக இருந்தாலும், பல்வேறு சந்தர்ப்பங்களிலும் மக்களாட்சியை பேணிக்காத்து வளர்ப்பதில் பல முக்கியப் பணிகளை ஆற்றுகின்றன.

மக்கள் தம்முடைய நலன் சம்பந்தப்பட்ட விஷயங்களில் தாம் முக்கியப் பங்கெடுக்க வேண்டுவது மிகவும் அவசியமானது என்று உணருகின்றபோது, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும், சங்கம் அமைக்கும் சுதந்திரமும் உள்ள சூழ்நிலையில் இத்தகைய அமைப்புகள் பல்கிப் பெருகும். இத்தகைய அமைப்புகள் சம்பந்தப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைகளில் அவற்றிடம் ஆலோசனைகளைப் பெறுவதற்கு உரிய முக்கியத்துவம் செலுத்தி அங்கீகாரம் அளிப்பதன் மூலமும் இந்த அமைப்புகள் தோன்றுவதற்கு உற்சாகம் அளிக்கலாம்.

65. சிவில் அமைப்புகள் மக்களாட்சி நெறியற்றவையாய் இருக்கலாமா?

சிவில் சமூகத்தின் அமைப்புகளும் ஸ்தாபனங்களும் சுதந்திரமானவையாக, அதாவது சுயமாக உருவாகி, சுயமாகத் தாமே நிதியுதவி பெற்றுச் செயல்படுவதாலேயே அரசாங்கக் கொள்கைகளில் சிலவற்றைத் திருத்தியமைக்கவோ, அமல்படுத்த ஒட்டாமல் தடுக்கவோ அதிகாரம் பெற்றவை எனலாம். இந்த அதிகாரம் எங்கே மக்களாட்சி நெறியற்றுப் போகிறது என்பதை விளக்குவது அவ்வளவு சுலபமானதன்று. மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பாலான அரசுகள் இத்தகைய சமூக அமைப்புகளைக் கலந்தாலோசித்து, சில விஷயங்களில் விட்டுக் கொடுத்து நிர்வாகத்தை நடத்துகின்றன. ஏனெனில், மக்களாட்சி என்பது அடிப்படையாகப் பார்த்தால் பரஸ்பரம் ஒப்புதல் பெற்று ஆட்சி புரிவதுதான். ஆனால் சில அமைப்புகள் அவற்றின் இயல்பினாலும், பணபலத்தினாலும், அவற்றுக்குள்ள தொடர்புகளினாலும் மற்ற அமைப்புகளைக் காட்டிலும் அரசாங்கத்திடம் அதிகச் செல்வாக்குக் கொண்டவையாய் இருக்கலாம். இத்தகைய செல்வாக்கு ஒரு சிலரின் பணபலம், அதிகாரம், மேலிடத் தொடர்புகள் போன்றவற்றால் ஏற்படுவதைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையிலான மக்களின் ஆதரவினால் ஏற்பட்டால், அது பெரிதும் மக்களாட்சி நெறி சான்றது எனலாம். மேலும், இத்தகைய அமைப்புகள் ஸ்தாபன ரீதியாக மக்களாட்சி நெறியிலானவை என்றால், அதாவது அவற்றின் தலைவர்கள் அவ்வமைப்புகளின் உறுப்பினர்களின் உண்மையான பிரதிநிதிகளாகத் திகழ்ந்தால், அவற்றுக்கு மற்றவற்றைக் காட்டிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். இறுதியாக, சில மக்களின் சமூக, பொருளாதார, உடலியல் சார்ந்த குறைபாடுகளால் அவர்கள் தமது கருத்துக்களை அரசியல் நடவடிக்கைகளில் எடுத்துச் சொல்ல வாய்ப்பு இல்லாமல் முடங்கிப் போய் இருந்தால், அத்தகைய அமைப்புகளின் கருத்துக்களைச் செவிமடுக்க விசேஷ ஏற்பாடுகளையும் மக்களாட்சி சமூகம் செய்ய வேண்டும்.

66. பொருளாதார அமைப்புகளும் மக்களாட்சி நெறியில் அமைய வேண்டுமா?

மக்கள் வேலை செய்கின்ற இடங்களே அவர்களின் வாழ்க்கை முறையைத் தீர்மானிப்பதில் முக்கியப் பங்காற்றுவதால், உண்மையான மக்களாட்சிச் சமூகத்தை ஏற்படுத்த விழைவோர், மக்கள் வேலை செய்கின்ற இடங்களை

மக்களாட்சி முறையினதாக மாற்றுவதற்கு உயர் முன்னுரிமையளிக்க வேண்டுமென மக்களாட்சி ஆதரவாளர் பலரும் கூறியுள்ளனர். அதாவது, குறைந்த பட்சம் தொழிலாளர்கள் தமது வாழ்க்கைத் தரத்தையும் பணிச்சூழலையும் மேம்படுத்துவதற்காகக் கூட்டாகச் செயல்படுவதற்கு ஏதுவாக அவர்கள் தொழிற் சங்கங்களை அமைப்பதற்குத் தொழிலதிபர்கள் தடை ஏதும் விதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் மக்களாட்சி நெறி தழைக்க வேண்டுமானால், லாபத்தைப் பகிர்ந்து கொள்வது பற்றி தொழிலாளர்களும் தொழிலதிபர்களும் சேர்ந்து தீர்மானிப்பதற்கு வகை செய்யலாம். அவ்வாறானால் தொழில் நிறுவனத்தின் வெற்றிக்கு எல்லாத் தொழிலாளர்களுக்கும் சம பொறுப்பு ஏற்படும். ஆனால் இது போன்ற திட்டத்தைப் பின்பற்றினால் தொழிலாளர்களிடையே கட்டுப்பாட்டைக் கொண்டு வர முடியாது என்றும், தவறிழைக்கின்ற தொழிலாளர்களைப் பணி நீக்கம் செய்வது சிரமமாகிவிடும் என்றும் சிலர் வாதிடலாம். ஆனால், தொழிலாளர்களின் அக்கப்பூர்வமான ஆற்றல்களைத் தூண்டி உற்சாகம் அளித்து, அவர்களை அதிகாரத்திற்கு அடிபணிபவர்களாக அல்லாமல் சம அந்தஸ்துடையவர்களாக நடத்துகின்ற நிறுவனங்கள் மிகவும் வெற்றிகரமாகச் செயல்படுவதை நாம் கண்கூடாகக் காணலாம். தொழிற்சாலைகளை மக்களாட்சி நெறிப்படுத்துவதன் மூலம் நிர்வாகத்தினருக்கும் தொழிலாளருக்கும் இடையேயான ஊதிய விகித வேறுபாடுகளைக் குறைப்பதற்கான நெருக்குதல்கள் தோன்றினாலும், மக்களாட்சி நெறியும் திறமையும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

பொருளாதார நிறுவனங்களின் பொறுப்புடைமை

மக்களாட்சிச் சமூகத்தில், பொருளாதார நிறுவனங்கள் தம்மைச் சுற்றியுள்ள உள்ளூர் மக்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்புடையவையாய் இருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, தொழிற்சாலைகளினால் ஏற்படும் சுற்றுச் சூழல் கேட்டுக்கு அவை பொறுப்பேற்க வேண்டும். பொதுமக்களின் நலன்களுக்கு அரசாங்க அமைப்புகளினால் ஊறு ஏற்பட்டால் பரிகாரம் பெற உரிமை உள்ளது போலவே, தொழிற்சாலைகளினால் மக்களின் நலனுக்கும் ஆரோக்கியத்துக்கும் ஊறு நேரும்போது அவற்றுக்குப் பரிகாரம் பெறும் உரிமையும் மக்களுக்கு உண்டு. எனவே தனியார் தொழிற்சாலைகள் சட்டப்படியான நெறிமுறைகளுக்கு உட்பட்டும், சுற்றுச் சூழலுக்குக் கேடு ஏற்படாமலும் செயல்பட வேண்டியது அவசியமாகும்.

67. மக்களாட்சியில் தனியார் சொத்துடைமை தேவையா?

சந்தைப் பொருளாதாரத் தேவைகளுக்காக தனியார் சொத்துடைமை அவசியம் என்ற பொருளாதாரக் காரணத்துடன், அரசாங்கத்தின் சார்பு இல்லாமல் சுயேட்சையான அரசியல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கும் அது அவசியம் என்ற வலுவான அரசியல் காரணமும் இருக்கிறது. எனவே தனியார் சொத்துடைமை என்பது சிவில் சமூகத்தின் மையமான ஸ்தாபனமாகத் திகழ்வதுடன் அரசியல் சுதந்திரத்திற்குப் பாதுகாப்பாகவும் விளங்குகிறது.

தனியார் சொத்துடைமைக்கு வரம்புகள்

ஆயினும், தனியார் சொத்துடைமை உரிமைகளில் அரசாங்கத்தின் தலையீடுகள் அனைத்தையும் தனிமனித சுதந்திரத்திற்கான அச்சுறுத்தலாகக் கொண்டு எதிர்க்க வேண்டும் என்பதில்லை. தனியார் சொத்துடைமை என்பது, சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தனிநபர் சுதந்திரம் என்ற வரம்புக்கு உட்பட்டது தான். எந்த ஓர் உடைமையானாலும் அதைத் தனியொருவராக அனுபவிப்ப தென்பது, மற்றவர்கள் அதை அணுகும் உரிமையைத் தடுப்பதென்றே பொருளாகும். எனவே சொத்துடைமை உரிமையைக் கட்டுப்படுத்துகின்ற நிபந் தனைகள், சூழல் மாறுவதற்கு ஏற்ப சட்டப்படியாக மாறுகின்றவாறு சமூக ரீதியாகத் தீர்மானிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும். சுருங்கச் சொல்வ தென்றால், சொத்துடைமையைச் சட்டப்படியாகக் கட்டுப்படுத்தலாம்; சொத்து டைமைப் பகிர்வு முறை எவ்வாறிருக்க வேண்டும் என்று அரசாங்கம் அக்கறை காட்டலாம். மக்களாட்சிக்குத் தனியார் சொத்துடைமை முக்கியமான கோட்பாடு என்றாலும், அது முழுமையான உரிமையாகாது. அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட வரம்புகளுக்கு உட்பட்டதே அவ்வுரிமை.

68. பொருளாதார ஏற்றத்தாழ்வுடன் மக்களாட்சி ஒத்துவரக் கூடியதா?

இந்த வினாவிற்கு ஆம் என்றோ, இல்லை என்றோ திட்டவட்டமாக விடையளிக்க முடியாது. பொருளாதார ஏற்றத்தாழ்வு எந்தப் படிநிலையில் உள்ளது என்பதைப் பொறுத்தே இதனை அணுக வேண்டும். பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகப்படியான அளவில் இருந்தால், அரசியல் நடவடிக்கைகள் சிறப்பாக அமைவது மிகவும் சிரமமாகிவிடும். ஏனென்றால், ஒருசில இடங்களிலே செல்வம் குவிந்திருந்தால் அதுவே அரசியல் முடிவுகளைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகிவிடும். மிகவும் மோசமான நிலை உருவானால், பணம் படைத்த வர்கள் ஏழை மக்களுடைய வாக்குகளைத் தமது நலனுக்கு விடுக்கும் அச்சுறுத்த லாகக் கருதி தமது பணபலத்தால் தேர்தல் நடைமுறையில் தில்லுமுல்லுகள் செய்ய முனைவர். அதே போல, மக்களாட்சி முறைகளின் மூலம் ஏழை மக்கள் தமது நிலைமையை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் ஏதும் புலப்படவில்லை என்றால், மக்களாட்சிக்கு ஆதரவு தருவதில் எவ்விதமான பயனும் இல்லை என்ற முடிவுக்கு வந்துவிடுவர். இங்கே மக்களாட்சியின் தரம் எப்படியிருக்கிறது என்பதல்ல பிரச்சினை; மாறாக, அதனை எப்படித் தொடர்ந்து பராமரிப்பது என்பதுதான் பிரச்சினை.

அரசியல் ஏற்றத் தாழ்வைக் குறைத்தல்

சந்தைப் பொருளாதாரத்தில் ஓரளவுக்குப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இருப்பதைத் தவிர்க்கவியலாது. ஆனால் அந்த ஏற்றத் தாழ்வின் காரணமாக விளையும் அரசியல் பாதிப்புகளைக் குறைப்பதுதான் மக்களாட்சி நெறியாளர் களின் பிரதான கவலையாகும். இதற்கென ஒருபுறம், கட்சிகளும் வேட்பாளர் களும் தேர்தலுக்குச் செலவிடும் தொகைக்கு வரம்பு நிர்ணயிப்பது, மக்கள் தொடர்பு சாதனங்களின் உரிமை ஒரு சிலரிடம் மட்டுமே குவிந்திருப்பதைத்

தடுப்பது, அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல் பிரச்சாரங்களுக்கும் எந்தெந்த ஆதாரங்களில் இருந்து பணம் வந்தது என வெளிப்படுத்துமாறு கோருவது போன்றவற்றுக்கு வகைசெய்யும் கடுமையான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். மற்றொரு புறத்தில், குடியுரிமையைப் பயனுறும் வகையில் பயனபடுத்துவதற்குத் தேவையான குறைந்தபட்ச வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும் எல்லா குடி மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

69. மக்களாட்சி முறை பொருளாதார வளர்ச்சியைச் சார்ந்துள்ளதா?

மக்களாட்சி முறை தோல்வியுற்று மீண்டும் எதேச்சாதிகார ஆட்சிமுறை உருவாகாமல் தொடர்ந்து அதனைப் பேணுவதற்கான வாய்ப்புகள், பொருளாதார ரீதியாக முன்னேறிய நாடுகளில் அதிகம் உள்ளன என்பதற்கு நிறைய ஆதாரங்களைக் காணலாம். பொருளாதார வளர்ச்சியின் காரணமாக சிவில் சமூகத்தின் அமைப்பிலும் குடிமக்களின் இயல்பிலும் தோன்றும் மாற்றங்கள் மக்களாட்சி நெறி தழைகக உதவுகின்றன. எழுத்தறிவும் கல்வி யறிவும் எல்லாருக்கும் கிடைக்கும்போது, மனமுதிர்ச்சியடைந்த, விவரமறிந்த வாக்காளர்கள் உருவாகிறார்கள். நடுத்தரப் பிரிவு விரிவடைந்து பலதரப்பட்ட தொழில்முறை சார்ந்த, நுட்பஞ்சார்ந்த பணிகளைச் செய்கின்ற மக்களின் எண்ணிக்கை கூடும்போது, எதேச்சாதிகார அரசாங்கத்தக்கு எதிர்ப்பு வலுக்கிறது. மேலும், பொருளாதார முன்னேற்றத்தின் காரணமாக சிவில் சமூக அமைப்பில் பல மாறுதல்கள் ஏற்பட்டு, அரசாங்கத்தின் அத்து மீறல்களுக்கு எதிராகத் தமது உரிமைகளைத் தற்காத்துக் கொள்ளும் சுதந்திரமான பல மக்கள் குழுக்களும் அமைப்புகளும் தோன்று கின்றன.

விதிவிலக்குகள்

பெருமளவுக்குப் பொருளாதார வளர்ச்சி காணப்படுகின்ற சூழ்நிலையில் மட்டுமே மக்களாட்சி நெறி தழைத்தோங்க முடியும் என்ற முடிவுக்கு வருவதும் தவறானதாகும். தனிநபர் தேசிய வருவாய் அடிப்படையில் மிகக் குறைவான பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ள நாடுகள்கூட (எ.கா. இந்தியா, ஜமைக்கா, போஸ்ட் வானா) பல்லாண்டுகளாகத் தம் மக்கள் அனைவருக்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை வழங்கி பகிரங்கமான தேர்தல் போட்டிகளை நடத்தி, மக்களாட்சியைப் பேணிக்காக்கின்றதை எல்லாக் கண்டங்களிலும் நாம் காணலாம். ஒரு குறிப்பிட்ட அளவு பொருளாதார வளர்ச்சியை எட்ட வேண்டும் என்பதை விட எல்லாரும் கல்வியறிவு பெறுவதைத் தூண்டுவதாக அரசாங்கத் தின் கொள்கைகள் அமைவது மிகவும் முக்கியமானதாகும். புதிதாகத் தோன்றி வளர்ந்து வரும் மக்களாட்சிகள் பொருளாதார வளர்ச்சியில் எந்த நிலையில் தமது பயணத்தைத் தொடங்கினாலும், தொடர்ச்சியாக பொருளாதார வளர்ச்சியை எட்டியாக வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அப்போது தான் சமூகத்தின் பல்வேறு பிரிவினரும் வளர்ச்சியின் பயன்களைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுவதுடன், வளர்ப்பகிர்வு சம்பந்தப்பட்ட பூசல்களின் வேகமும் குறையும். இந்த இலக்கினை அடைவதற்கு சர்வதேச பொருளாதார

முகமைகள் மற்றும் முன்னேறிய நாடுகளின் கொள்கைகள் துணையாக அமையலாம்; அல்லது முட்டுக் கட்டையாகவும் விளங்கலாம்.

70. மக்களாட்சிக்கு சமயம் துணையா? முட்டுக்கட்டையா?

ஆம் என்றோ இல்லை என்றோ விடையளிக்க முடியாத இன்னொரு சிக்கலான வினா இது. உலகின் பெருஞ்சமயங்கள் அனைத்தையும் மக்களாட்சிக்கு ஆதர வானவை என்றோ, மக்களாட்சிக்கு எதிரானவை என்றோ, நடுநிலையானவை என்றோ திட்டவட்டமாக நம்மால் பாகுபடுத்த முடியாது. ஏனென்றால், எல்லாச் சமயங்களிலும் ஒன்றுக்கொன்று முரணான போக்குகள் உள்ளன. வரலாற்று ரீதியாகப் பார்த்தால் கிறிஸ்துவம், அரசர்களின் தெய்வீக உரிமையையும், சமத் துவமான குடியரசு முறையையும் ஒரு சேர ஆதரித்துள்ளதைக் காணலாம். ஒரே நேரத்தில் கிறிஸ்துவ சமயத்திலும் பிற சமயங்களிலும் இருந்த செல்வாக்குடைய பிரிவினர் எதேச்சாதிகார ஆட்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் செயல்பட் டுள்ளனர்; அதே சமயத்தில் எதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்தவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதிலும் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்துவதிலும் அச்சமயங்களைச் சேர்ந்த மற்றவர்கள் தமது இன்னுயிரை ஈந்திருக்கின்றனர்.

சமயமும் அரசும்

மேல் மட்டத்தில் இருந்து விடுக்கப்படும் சமய உண்மைகளை மறுபேச்சுப் பேசாமல் அப்படியே ஏற்றுக் கொள்கின்ற நம்பிக்கையாளர்கள் நிறைந்த சமயத்தைக் காட்டிலும், சமய உண்மைகளை விலாவாரியாக விவாதித்துத் தெளிந்த பின்னர் ஏற்றுக் கொள்கின்ற சமயமே மக்களாட்சி நெறி தழைக்க உகந்தது என்று கூறலாம். சமயத்தின் இந்த அமைப்பு முறையைக் காட்டிலும், சமயத்திற்கும் அரசுக்கும் இடையேயான உறவே மக்களாட்சி நெறி தழைக்க முக்கியமானது. இந்த உறவு மிக நெருக்கமானதாக இருக்குமானால், மற்ற சமயங் களைச் சார்ந்தவர்களை சம உரிமையுள்ள குடிமக்களாகக் கருதும் வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருக்கும். இந்தப் பூமியில் தமது சமயக் கடமைகளை நிறை வேற்றுவதற்கான சாதனமாக அரசாங்கத்தைச் சமயத் தலைவர்கள் கருதும்போது, மற்ற சமயங்களைச் சேர்ந்தவர்கள் அரசின் சமயத்தை ஏற்குமாறு துன்புறுத் தப்பட்டு, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் குரல்வளை நெரிக்கப்படும் அபாயம் அரசியலில் தோன்றிவிடும்.

சமயச் சகிப்புத் தன்மை

இது போன்ற அடக்குமுறைகளாலும், அவற்றின் காரணமாகத் தோன்றிய வகுப்புக் கலவரங்கள் மற்றும் உள்நாட்டுப் போர்களாலும் விளைந்த கசப்பான அனுபவங்களைத் தொடர்ந்து சமயச் சகிப்புத் தன்மை என்ற கருத்துத் தோன்றியது. நமது சமயமே இறுதியானதும் பரிபூரணமானதுமான உண்மையை உரைக்கின்றது என்று நாம் நம்பினாலும், பல்வேறு சமய நம்பிக்கைகளைக் கொண்ட உலகத்தில் நமது கருத்தை ஏற்றுக் கொள்ளுமாறு மற்றவர்களை நிர்ப்பந்திப்பது மனித மாண்புகளை இழிவுபடுத்துவதற்கு ஒப்பாகும். ஆனால்

சமயச் சகிப்புத்தன்மை என்றால், நமது சமயக் கருத்துக்களை விட்டொழிப்பதோ, மற்றவர்களை நமது சமயத்திற்குச் சமய மாற்றம் செய்யும் முயற்சியில் இருந்து விலகியிருப்பதோ ஆகாது. மக்கள் தமது சமய விருப்பங்களைத் தாமே தீர்மானித்துக் கொள்ள – அவர்கள் தவறாக முடிவெடுக்க நேர்ந்தாலும் – அவர்கள் விருப்பத்திற்கு ஏற்பச் செயல்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தருவதே சமயச் சகிப்புத் தன்மையாகும்.

சிறுபான்மைச் சமயங்கள்

ஒரு நாட்டில் எந்த ஒரு சமயத்திற்கும் விசேஷமான அந்தஸ்து அளிக்காத சூழ்நிலையே, பல்வேறு சமயங்களையும் சகிப்புத் தன்மையுடன் ஏற்றுக்கொண்டு அவற்றுக்கு ஆதரவளிக்கும் உகந்த சூழ்நிலையாகும். அத்தகைய சூழ்நிலையில் தான் சமயப்பயிற்சிக்கு நிதியுதவி அளிக்கவோ, அவற்றுக்காக வரிவிதிக்கவோ அனைத்துச் சமயத்திற்கும் ஒரே மாதிரியான அளவீடுகளை அரசு பின்பற்றும். ஒரு நாட்டின் பெரும்பான்மையான மக்களின் சமய நடைமுறைகள் அந்த நாட்டின் அரசாங்க சம்பிரதாயங்களில் பின்பற்றப்படுகின்ற சூழ்நிலையிலும் சமயச் சகிப்புத்தன்மை நிலவலாம். ஆனால் பெரும்பான்மை சமயத்தினரின் கோட்பாடுகளை சமய நம்பிக்கையில்லாதவர்கள் மீது ஒரு நாடு திணிக்க முயலும் போது, மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும், சங்கம் அமைக்கும் சுதந்திரமும் பறிக்கப்படும் சூழ்நிலை உருவாகிவிடும். இங்கே, ஒரு சந்தர்ப்பத்தில் பெரும்பான்மையினர் விருப்பத்திற்கும், அரசின் மீது மக்கள் செலுத்தும் கட்டுப்பாட்டுக்கும் அரசியல் சமத்துவத்திற்கும் தேவையான நிபந்தனைகளுக்கும் இடையே ஒட்டுறவு இல்லாத சூழலைக் காணலாம்.

71. இனவழிப் பூசல் அல்லது சமயப் பூசல் நிலவும்போது மக்களாட்சி சாத்தியமா?

ஒரு பிரதேசத்திற்குள் வாழ்கின்ற மக்களிடையே பொதுவானதோர் அரசியல் அடையாளம் இல்லாதபோது, சுதந்திரமான அமைப்புகள் தாக்குப்பிடித்துச் செயல்படுவது கடினம் என்ற முடிவை அவ்வளவு எளிதாக யாரும் மறுத்துப்பேச முடியாது. இந்த அடையாளம் சமயம், இனம், மொழி போன்ற எல்லாவிதமான வேறுபாடுகளையும் கடந்து வரலாற்று ரீதியான அனுபவத்தின் மூலம் பெற்றதாக இருக்கலாம். அல்லது எல்லாப் பிரிவினரையும் சமமாகப் போற்றுவதாகப் பலராலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் ஸ்தாபனங்களால் உருவாக்கப்பட்டதாக இருக்கலாம். அரசியல் பதவிகளை வகிப்பதில் இருந்து ஏதேனும் ஒரு பிரிவினரை விலக்கிவைப்பது போன்று, வகுப்புத் துவேஷங்களுக்கு எண்ணெய் வார்க்க வேறெதனாலும் முடியாது. ஏனென்றால் அவ்வாறு விலக்கி வைப்பதினாலோ, விலக்கி வைக்கப்படுவோம் என்ற அச்சம் தோன்றுவதாலோ உண்டாகும் அடக்குமுறை, ஒரவஞ்சனை, பாதகச் சூழல் போன்றவற்றால் எழும் துவேஷம் மிகவும் மோசமானது. குறுகிய மனப்போக்குடைய அரசியல் தலைவர்கள் இத்தகைய அச்ச உணர்வைத் தூண்டுவதன் மூலம் தற்காலிகமாகச் சில அனுகூலங்களை அடையலாம். ஆனால் இத்தகைய பிரிவினைகளோ பாரபட்சமோ சாத்தியமானால்கூட கசப்பான தீர்வுகளைத்தான் தரும்; பிரச்சினை

திசைதிருப்பப்பட்டு, நசுக்கப்படும் மற்றொரு சிறுபான்மையினர் குழு உருவாகலாம். புதிதுபுதிதான நசுக்கல்களை உருவாக்குவது, பழைய நசுக்கல்களுக்குத் தீர்வாகா.

அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்புகள்

பல்வேறு இனவழியையும், சமயங்களையும் சார்ந்த பலதரப்பட்ட மக்கள் ஒன்றிணைந்து காணப்படுகின்ற இக்கால சமுதாய அமைப்பில், திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள், பாரபட்சமான போக்கு ஆகியவற்றில் இருந்து சிறுபான்மையினரைப் பாதுகாப்பதற்கு அரசியலமைப்பு ரீதியான ஏற்பாடுகள் அவசியமானவையாகும் (10,12,50,63 ஆகிய வினாக்களைக் காண்க). இதுபோன்ற முறையான ஏற்பாடுகள் செய்யாதவரை புதிய நாடுகளுக்குச் சர்வ தேச அங்கீகாரம் அளிக்கப்படக்கூடாது.

72. குடும்ப அமைப்பு, மக்களாட்சியுடன் எந்தெந்த வகையில் தொடர்புடையது?

குழந்தை வளர்பபு, குழந்தை நலம் பேணல், வீட்டைப் பராமரிப்பது, ஆடவர்களின் தேவைகளை நிறைவு செய்வது போன்ற பெரும் பொறுப்புகளைப் பெண்களே ஏற்றுக் கொளகின்ற வகையில் எல்லாச் சமுதாயங்களிலும் பன்னெடுங்காலமாகவே குடும்ப அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. மக்களின் தனிப்பட்ட விஷயமாகத்தோன்றும் இந்தக் குடும்ப ஏற்பாடுகள் பொது வாழ்வில் முக்கிய இடம் வகிக்கின்றன. இந்த ஏற்பாட்டின் காரணமாகப் பெண்கள் பொது விஷயங்களில் பங்கெடுத்துக் கொள்வதற்கான நேரமும் ஆற்றலும் குறைந்து போவதுடன், அவர்கள் பங்கெடுத்து நிறைவேற்றக் கூடிய பொது வாழ்க்கைப் பணிகளை வரையறுப்பதும் முடியாததாகிவிடுகிறது. இந்த ஏற்பாடுகளும் அவற்றுக்கு ஆதரவளிக்கின்ற மனப்போக்குகளும் நீடிக்கின்ற வரை பெண்களுக்கு அரசியலில் சமவாய்ப்புகள் மறுக்கப்படும். அரசியலில் அவர்கள் பங்கெடுக்காததால் குடும்ப வாழ்க்கைத் தரம் மோசமாகவே இருக்கும். அரசாங்கம் ஏற்புடைய கொள்கைகளை வரைந்து செயல்படுத்துவதன் மூலமும், மகளிர் அமைப்புகள், சுய உதவிக் குழுக்கள் போன்றவற்றினால் பெண்களே தமது செல்வாக்கைச் செலுத்துவதன் மூலமும மகளிர் நிலையை மேம்படுத்தலாம்.

குழந்தைகளும் மக்களாட்சியும்

வருங்காலக் குடிமக்களாகிய குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவுவதன் மூலம், குடும்ப அமைப்பு, மக்களாட்சி முறையில் இன்னொரு முக்கியமான பொதுப் பணியை ஆற்ற முடியும். வீட்டு விவகாரங்களில் கருத்துரைப்பது, தானும் சமமாகப் போற்றப்படுவது, உரிமைகளைச் செயல்படுத்தும் போது அவற்றுக்குரிய கடமைகளைச் செய்ய வேண்டுமெனப் புரிந்து கொள்வது போன்ற குழந்தைக் கால அனுபவங்கள், பிற்காலத்தில் பொறுப்புள்ள குடிமகனாக தனது மக்களாட்சி நெறிக் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கான பயிற்சிக்களமாக குழந்தைகளுக்குக் குடும்பம் அமையும். குழந்தைகள், குடும்பத்தின் வாயிலாகவே



அரசியலும் குடித்தனமும்

பரந்துபட்ட சமூகத்தின் மனப்போக்கை அறிந்து கொள்வதுடன், அரசியல் விவகாரங்கள் குறித்துக் கருத்துக்களையும் உருவாக்கிக் கொள்கின்றனர்; அத்தகைய கருத்துக்களே அவர்கள் பெரியவர்களான பின்னரும் நிலைத்து நிற்கலாம்.

73. மக்களாட்சி பற்றிய கல்வியைப் புகட்டுவதில் பள்ளிகளின் பங்கு என்ன?

எழுத்தறிவு புகட்டுதல் மற்றும் திறமைகளையும் ஆற்றலையும் வளர்த்தல்; தவிர, ஒரு சமுதாயத்தின் பண்பாட்டையும் மரபுகளையும் மாணவர்களுக்கு எடுத்துரைக்கும் முக்கியப் பணியையும் பள்ளிகள் ஆற்றுகின்றன. அந்தப் பண்பாடுகளை விமர்சனக் கண்ணோட்டத்துடன் அணுகுவதற்குக் கற்றுத் தருவதுடன், பல்வேறு சமய நம்பிக்கைகள் கொண்ட, ஒன்றையொன்று சார்ந்து வாழ வேண்டிய இக்காலகட்டத்தில் மாணவர்கள் தமக்குரிய பங்கினைப் புரிந்து கொள்ளவும் பள்ளிகள் துணை செய்கின்றன. மக்களாட்சி நெறி பற்றிக் குறிப்பாகப் பயிற்சி அளிக்க வேண்டுமானால், நாட்டின் அரசியலமைப்புப் பற்றியும், அது எவ்வாறு தோன்றி வளர்ந்தது என்பது பற்றியும் விளக்கி, குடிமக்களின் உரிமைகளைப் பற்றியும் கடமைகளைப் பற்றியும் செயல்முறை அறிவினைத் தந்து, மனித உரிமைகள் பற்றியும் அவற்றின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துக்கூறிப் புரியவைக்க வேண்டும். இந்த அறிவு விளக்கத்தைத் தருவது மட்டும் மக்களாட்சி நெறிக் கல்வியைப் புகட்டுவதாகாது. முக்கியமான பிரச்சினைகள் குறித்து மாணவர்களையே விவாதிக்கச் செய்வது; தமது வாதங்களை எடுத்து வைக்கவும், மற்றவர் வாதங்களைப் பொறுமையுடன் கேட்கவும் பயிற்சி அளிப்பது; வகுப்பறைக் கூட்டங்கள், பள்ளி மாணவர் பேரவை போன்றவற்றின் வாயிலாக பள்ளிக்கும் மாணவர் சமுதாயத்திற்கும் தொடர்புடைய கூட்டு முடிவுகளில் பங்கெடுக்கச் செய்வது போன்றவற்றின் மூலமாகவும் மக்களாட்சி நெறிக் கல்வியைப் போதிக்க வேண்டும். இத்தகைய அறிவையும் திறமையையும் பெறுவதற்கான வயது வரம்பு ஒவ்வொரு நாட்டின் சூழ்நிலையையும் அதன் கல்வி முறையையும் பொறுத்து மாறுபடும். ஆனால் இத்தகைய கல்வியறிவு, அரசியல் சம்பந்தப்பட்டது என்று புறந்தள்ளப் பட்டுவிட்டால் அந்த மக்களாட்சியின் அடிப்படையான மக்கள் சமூகமே செல்லரித்துப் போகும்.

74. மக்களாட்சிப் பண்பாட்டை எவ்வாறு பேணி வளர்க்கலாம்?

மக்களாட்சி அமைப்புகளில் பங்கெடுத்துச் செயல்படுவது மக்களாட்சிப் பண்பாட்டை உருவாக்க உதவுகிறது என்று மக்களாட்சிச் சிந்தனையாளர்கள் எப்போதுமே கூறி வந்துள்ளனர். எந்தப் பிரச்சினைகள் குறித்து அவர்கள் முடிவெடுக்க வேண்டுமென்று அறியப்படுவதாலும், ஒவ்வொரு கட்டத்திலும் அரசியல் பங்கெடுப்பின் காரணமாகத் திறமைகள் மற்றும் ஆற்றல்கள் கைவரப் பெறுவதாலும், நேரடிப் பங்கெடுப்பே மக்களாட்சிப் பண்பாட்டை வளர்க்க உதவுகிறது என்பது அவர்கள் வாதம். எனவே நேரிடையான அரசியலிலும்,

சிவில் சமூகத்தின் பிற அமைப்புகளிலும், ஸ்தாபனங்களிலும் பங்கெடுத்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் இயன்ற அளவுக்குப் பரவலாக இருக்க வேண்டும். அரசியல் கட்சிகள், தன்னார்வ அமைப்புகள் போன்றவைகூட தமது உறுப்பினர்களுக்கு அரசியல அறிவைப் புகட்டுவதில் முக்கியக் களமாகத் திகழ முடியும்.

மக்களாட்சிப் பண்பாட்டைப் பேணி வளர்த்தல்

மேலே 73 ஆவது வினாவில் சொல்லப்பட்டது போல், பள்ளிகளில் பயிற்று விப்பதுடன் வேறு பல வழிகளிலும் மக்களாட்சிப் பண்பாட்டை வளர்க்கலாம். சமூகத்தின் பிரச்சினைகளையும் அதிருப்தியையும் முறையாக எடுத்துரைக்கும் கலைகள் மக்களாட்சிக் கருத்துத் தழைப்பதற்கான வாகனங்களாகச் செயல் படலாம். ஒரு நாட்டின் மக்களாட்சி வரலாற்றையும் அதன் ஸ்தாபனங்களின் சிறப்புக்கூறுகளையும் எடுத்துரைப்பதற்குப் பொது விழாக்களைப பயன்படுத்திக் கொளளலாம். எல்லாவற்றுக்கும் மேலாக மககளிடையே அரசியல் அறிவைப் பரப்புவதில் மக்கள் தொடர்பு சாதனங்கள மிக முக்கியமான பணியைச் செய்கின்றன. அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சனக் கண்ணோட்டத்தில் மதிப்பிட்டு தகவல பெறுவதிலும் விழிப்புணர்ச்சியடைவதிலும் மக்களின் நிலையை உயர்த்துவதுடன், மக்கள் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வதற்கான வாயப்பையும் மககள் தொடர்பு சாதனங்கள் அளிக்கின்றன.

6

மக்களாட்சியின் எதிர்காலம்

75. மக்களாட்சி இன்றைக்கு எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சினைகள் யாவை?

இன்றைக்கு மக்களாட்சியை எதிர்கொண்டுள்ள கடுமையான பிரச்சினைகளில் பெரும்பாலானவை பொருளாதாரப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்டவை; பெரும் பாலான உலக நாடுகளின் தலையாய பிரச்சினையும் பொருளாதாரப் பிரச்சினை தான். முன்னேறிய நாடுகளில் 1930ஆம் ஆண்டுகளில் இருந்து அறியப்படாத அளவிற்குத் தற்போது கடுமையான வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுகிறது. அதன் காரணமாக மேற்கொள்ளப்படும் மக்கள் திட்டங்களுக்கான செலவுகள் கணிசமாக உயர்ந்து பெரும் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. கம்யூனிசப் பின்னணிகளைக் கொண்டிருந்த நாடுகளில் தனியார் மயமாக்கல், சந்தைப் பொருளாதார மயமாக்கல்போன்றவற்றின் காரணமாக மக்களிடையே பாதுகாப் பற்ற தன்மையும், பரவலான ஏற்றத் தாழ்வுகளும், அதீத பணவீக்கமும் உருவாகும் அபாயம் எழுந்துள்ளது. பின்தங்கிய நாடுகள் பலவற்றில் தொடர்ந்து பல ஆண்டு களாக வளர்ச்சி விகிதம் பூஜ்யமாகவோ எதிர்மறையாகவோ இருந்து வருவதுடன், அதன் காரணமாக மக்களின் ஏழ்மை அதிகரித்து, நலத்திட்டங்கள் நின்றுபோய் பஞ்சம் தலைவிரித்தாடும் அபாயமும் தோன்றியுள்ளது.

பொருளாதார நெருக்கடி

பெரும்பாலான நாடுகளில் மக்கள் தற்சமயம் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளினால் அரசியலிலும் கடுமையான விளைவுகள் தோன்றும். மக்க ளிடையே பொருளாதார வாய்ப்பு வசதிகளுக்கான போராட்டங்கள் தீவிரமாகி சமூகப் பகைமைகளும் கடுமையாகிவிடும். பொருளாதார வாய்ப்புகளை நாடி மக்கள் இடம் பெயரத் தொடங்குவர்; அவ்வாறு இடம் பெயர்வோர்களிடை யேயும் பூசல்கள் தோன்றி, முன்னேறிய நாடுகள் தமது எல்லைக்குள் பிறர் எவரும் நுழையாத அளவிற்குப் பாதுகாப்பான நிலையை வேண்டுவர். பொருளாதார மந்த நிலைமையின் காரணமாக குடியுரிமைச் சமத்துவத்தை அடைவது எட்டாக் கனியாகி, மக்களாட்சி அரசு, சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்க்கும் திராணி யற்றது என மக்களிடையே அவநம்பிக்கை தோன்றிவிடும். வலுவான கட்டுக் கோப்புடைய மக்களாட்சிகள் இத்தகைய அதிர்ச்சிகளைச் சமாளித்து நிற்கும் திறம் பெற்றிருக்கலாம்; ஆனால் இப்போதுதான் தலையெடுத்திருக்கும் மக்க ளாட்சிகளில் அவை காலூன்றுவதற்கு அனுகூலமான சூழல் அவசியமாகும்.

அரசியல் கட்டுப்பாடு இன்மை

தற்போது உலகெங்கிலும் நிலவும் பொருளாதார மந்த நிலையின் மூன்று அம்சங்கள், மக்களாட்சி அரசின் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையைக் குலைப்பதாக உள்ளன. முதலாவதாக, ஒரு நாட்டின் பொருளாதார மேன்மையைத் தீர்மானிக்கும் அமைப்புகளும் செயல் முறைகளும் அதன் எல்லைக்கு அப்பால் இருப்பதால், இறையாண்மை கொண்டதாகக் கூறப்படும் அந்நாடு தன் கட்டுப்பாடு எதனையும் செயல்படுத்த முடியாது இருக்கும் நிலைமை. இத்தகைய பொருளாதாரக் கட்டுப்பாடு இன்மை எல்லா நாடுகளையும் பாதிக்கின்றது; அதிலும் குறிப்பாக பின்தங்கிய நாடுகளைப் பெரிதும் பாதிக்கின்றன. மூலப் பொருளின் விலைக் குறைப்பிலோ, பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தும் முறையிலோ, தம் நாட்டில் வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுவதற்கான நிபந்தனைகளை விதிப்பதிலோ பின்தங்கிய நாடுகளின் சொல் எடுபடுவதில்லை. இரண்டாவதாக, சந்தைப் பொருளாதாரச் சக்திகளின் செயல்பாட்டுக்கு ஏற்பத் தனிநபர்களும் தொழிற்சாலைகளும் ஈடுகொடுத்துச் செயல்படுவதைப் பொறுத்தே ஒரு நாட்டின் பொருளாதார ஏற்றம் அமையுமேயன்றி, அரசாங்கத்தினால் எதுவுமே செய்ய முடியாது என்று கடந்த இருபதாண்டுகளுக்கும் மேலாக நம்பிவரும் பழமைப் போக்கின் காரணமாக மேலே முதலில் சொன்ன சூழ்நிலை மிகவும் மோசமடைந்திருக்கிறது. இதனைத் தொடர்ந்து மூன்றாவதாக, தொடர்ந்து துடிப்புடன் செயல்படும் அரசுக்கு ஊக்கமளிக்கின்ற அல்லது வறுமையில் உழல்கின்ற சக மனிதர்கள்பால் கருணை பாராட்டுகின்ற மனப்பான்மைக்குத் தூண்டுதலாக விளங்கும் கூட்டுப் பொறுப்புணர்வை மழுங்கச் செய்கின்ற அளவிற்குத் தனலைப்போக்கு மேலோங்கியிருப்பதாகும். சோஷலிஸம் ஒத்து வராது என்றும், முன்னேற்றச் சிந்தனையுடைய சர்வ தேசியம் சரிப்பட்டுவராது என்றும் எண்ணிக்கொண்டிருக்கின்ற சமூகத்தில், பொருளாதார-சமூகப் பிரச்சினைகள் ஒன்றையொன்று சார்ந்திருப்பதால் அவற்றுக்குக் கூட்டுத் தீர்வுகள்தான் சாத்தியம் எனறு ஏற்றுக்கொள்ளச் செய்ய இன்னும் சிலகாலம் ஆகலாம்

76. ஏழை நாடுகளில் மக்களாட்சியை ஏற்பது உண்மையிலேயே சாத்தியமா?

ஏழை நாடுகளில் மக்களாட்சியைப் பின்பற்ற முடியாது என்ற கருத்து வேறு பல காரணங்களின் அடிப்படையில் தோன்றியதாகும். மக்களாட்சி முறையை உருவாக்குவதற்கு அதிக செலவு பிடிக்கும் என்பதாலும் பெருமளவு கால அவகாசம் தேவை என்பதாலும், ஏழை நாடுகளில் பற்றாக்குறையாக உள்ள வளங்களை மக்களின் உடனடித் தேவைகளான சுகாதாரம், கல்வி, அடிப்படைப் பொருளாதார வசதிகள் போன்றவற்றை வழங்குவதற்குச் செலவிடுவதே உசிதமானதாக இருக்கும் என்று கூறப்படுகிறது. இதைப் பார்க்கும்போது, தேர்தல்களை நடத்துவது, மக்களாட்சிப் பணிகளை ஆற்றுவதற்கு அதிகாரிகளுக்குப் பயிற்சியளிப்பது, கொள்கை வரைவில் ஏற்படும் காலதாமதம், நாடாளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் பொறுப்புடையதாக அரசாட்சியை நடத்திச் செல்வது போன்றவை ஏழை நாடுகள் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஆடம்பரங்களாகவே தோன்றுகின்றன.

மக்களாட்சி முறையில் உள்ள பாதகங்கள்

நிதிவளத்தை மட்டும் கருத்தில் கொண்ட இக்குறுகிய மனப்போக்கு வாதத்திற்குத் துணையாக, வளர்ந்து வரும் பொருளாதார அமைப்பும் அரசாங்க அமைப்பும் கொண்ட நாடுகளில் மக்களாட்சியினால் ஏற்படும் சாதகங்களைக் காட்டிலும் பாதகங்களே மிகுதியாக இருக்கும் என்ற கூற்றினையும் சேர்த்துக் கொள்ளலாம். புதிதாக ஒரு நாடு உருவாகி, அதன் தேசிய அடையாளம் இன்னும் சரிவர உருப்பெறாத சூழ்நிலையில், தேர்தல் போட்டிகளின் காரணமாக ஏற்படும் சமூக மற்றும் அரசியல் பிரிவினைகள் அங்கே பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும். மக்களாட்சி அமைப்பு சகிப்புத் தன்மையின்மையாலோ, கிளர்ச்சிகளினாலோ மிக விரைவிலேயே அழிந்து போகாதிருக்கத் தேவையான மனமுதிர்ச்சி கொண்ட, விவரமறிந்த வாக்காளர்கள் உருவாவது வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தில்தான் சாத்தியமாகும். வரிசைக் கிரமமாகப் பார்த்தால் மக்களாட்சியை உருவாக்குவதற்கு முன்னரே அதற்குத் தேவையான அடித்தளமான பொருளாதார வளர்ச்சியும் தேசிய ஒற்றுமையும் உருவாகியிருக்க வேண்டும். எனவே மக்களாட்சியைக் காட்டிலும் தேசிய ஒற்றுமையும், பொருளாதார வளர்ச்சியுமே முன்னுரிமை தரப்பட வேண்டியவை என்பது நியாயமாகாது.

மக்களாட்சியும் வளர்ச்சியும்

இந்த எதிர்ப்புகள் குறித்த சில அம்சங்களை முன்னரே சில வினாக்களில் (எ.கா. 13, 36, 69) விவாதித்திருக்கிறோம். எனினும் அவை அனைத்தையும் ஒரு சேரக் கொணர்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பொருளாதார வளர்ச்சியை, சராசரி தேசிய வருவாய் என்ற அடிப்படையில் மட்டும் கணக்கிட முடியாது. மக்களிடையே வருவாய்ப் பகிர்வு எப்படி உள்ளது என்பதையும், சுகாதாரம், கல்வி, படைத்துறை போன்றவற்றுக்கு அரசு எப்படி தனது செலவுகளைப் பகிர்ந்தளிக்கிறது என்பதைப் பொறுத்தும் பொருளாதார வளர்ச்சியை அளவிட முடியும். ஆனால் பொருளாதார வளர்ச்சியை அளவிடப் பயன்படும் இந்தக் காரணிகள், ஆட்சியில் உள்ள அரசியல் சார்பினையும், பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கிற அளவினையும் சார்ந்தே உள்ளன. மக்களாட்சி உணர்வுடைய வாக்காளர்கள், இராணுவத்திற்கும் சமூகத்திற்கும் எவ்விதப் பயனுமில்லாத வறட்டுக் கௌரவத் திட்டங்களுக்கு அரசு செலவிடுவதைக் காட்டிலும் சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படையான கட்டமைப்புத் திட்டங்களுக்குச் செலவிடுவதையே ஆதரிப்பர். மேலும், வெளிப்படையான, பொறுப்புணர்வுடைய அரசு, ரகசியமாக நடைபெறும் எதேச்சாதிகாரமான அரசாங்கத்தைக் காட்டிலும் தனது நிதிவளங்களை மிகவும் பயனுள்ள வகையில் செலவிடும். அத்துடன் வெளிப்படையான அரசாங்கத்திலே மனித உரிமை மீறல்கள், சுற்றுச் சூழல் கேடுகள், பஞ்சம் போன்றவற்றை நீண்ட நாட்களுக்கு மூடி மறைக்க முடியாது. மக்களாட்சி, பொருளாதார வளர்ச்சி, மனித உரிமைகள் பாதுகாப்பு ஆகிய மூன்றுக்கும் இடையிலான நேரடித் தொடர்பு, 1993ஆம் ஆண்டு ஜூன் மாதம் வியன்னாவில் நடைபெற்ற உலக மனித உரிமை மாநாட்டில் இறுதி ஆவணத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மக்களாட்சி முறைகளை மேம்படுத்துதல்

மக்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்பில்லாத, அவர்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்காத அரசியல் அதிகாரம் நிலவும்போது, ஒரு சமூகம் மக்களாட்சி நெறியை வேண்டாம் எனச் சொல்ல முடியுமா என்பதாகத்தான் நமது கேள்வி அமைய வேண்டும். மக்களாட்சி நெறி வேண்டாம் என அடியோடு கைவிட்டு விடுவதைவிட, அந்த நாட்டின் சூழலுக்கு ஏற்றவாறு எங்ஙனம் மக்களாட்சி நெறியை உருவாக்கி, அதனை எவ்வாறு சிறப்புற நடத்த உதவுவது என்றுதான் நாம் பார்க்க வேண்டும்.

77. வளரும் மக்களாட்சிகளுக்கு வளர்ந்த மக்களாட்சிகள் எவ்வாறு உதவலாம்?

வளர்ந்து வரும் மக்களாட்சிகளுக்கு முன்னேறிய மக்களாட்சிகள் பல வகைகளிலும் உதவிபுரியலாம். பொதுப்படச் சொல்வதானால் அத்தகைய நாடுகளின் வளர்ச்சிக்குரிய உரிமையை முழுமனதாக அங்கீகரித்து, அதற்கு ஏற்றவாறு உலக நாடுகள் தமது கடமையை ஆற்றலாம். இன்னும் குறிப்பாக உதவ வேண்டுமானால், வளரும் நாடுகளுக்கு தேர்ந்த மக்களாட்சி நடைமுறை குறித்துப் பயிற்சி அளிக்கலாம். தேர்தல் அதிகாரிகள், நாடாளுமன்ற எழுத்தர்கள், அரசியலமைப்பு வழக்குரைஞர்கள், நிதிக்கட்டுப்பாட்டாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் போன்ற பலதரப்பினருக்கும் முன்னேறிய நாடுகளில் மக்களாட்சி நெறிகள் பற்றிப் பயிற்சி அளிக்கலாம். தேர்தல் போட்டிகள், மனித உரிமைகள் ஆகியவற்றின் உயரிய நடைமுறைகள் உலக நாடுகளில் பரவலாக அறியப்பட்டுள்ளன. தேர்தல்கள் எந்த அளவிற்கு சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெறுகின்றன என்பதைக் கண்காணிக்கும் சர்வதேச நோக்கர் குழுக்களைப் பலரும் அங்கீகரித்திருப்பதும், மனித உரிமைகள் பாதுகாப்புப் பற்றிய சர்வதேச அளவீடுகள் உருவாகியிருப்பதும் இதற்குச் சான்றுகளாகும். எனினும் இந்த உயரிய நடைமுறை அளவீடுகள், வெளிப்படையானதும் மக்களுக்குப் பொறுப்புடையதுமான அரசாங்கம் போன்ற இன்னும் பல மக்களாட்சிக் கூறுகளுக்கும் விரிவாக்கப்பட வேண்டும். இந்த விஷயங்களைப் பொறுத்தவரையில் முன்னேறிய நாடுகள் பலவற்றிலும் மக்களாட்சி நடைமுறைகள் இன்னும் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளன. சர்வதேச அளவீடுகளுக்கு ஏற்ப அவை தமது நடைமுறைகளை மேம்படுத்திக்கொள்ள முனைந்தால், அவை அளிக்கும் உதவியை பிற வளரும் நாடுகள் இன்னும் நம்பகத்தன்மையுடன் ஏற்றுக்கொள்ளும்.

இறையாண்மையும் சர்வதேசத் தலையீடுகளும்

மக்களாட்சி நெறிப்படுத்தும் இந்த விஷயங்களில் உதவியளிப்பதைக் காட்டிலும், பலகட்சித் தேர்தல் முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்றும், மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட குறைந்த பட்ச அளவீடுகளுக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றும் நாடுகளை நிர்ப்பந்திக்க, பொருளாதார உதவியை நிறுத்தி விடுவோம் என்ற ஆயுதத்தைச் சில முன்னேறிய நாடுகள் பயன்படுத்துவது தற்சமயம் பெரிதும் சர்ச்சைக்குரியதாகி இருக்கிறது. இந்த நிபந்தனைகளை

ஆதரிப்பவர்கள், ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக அளிக்கப்பட்ட உதவிகளை நீண்ட காலமாக அந்நாடு தனது எதேச்சாதிகார ஆட்சியைத்தொடர் வதற்குப் பயன்படுத்தி வந்துள்ளதால், இத்தகு நிபந்தனைகள் அந்த நாட்டிலே மக்களாட்சிக்காகப் போராடுபவர்களுக்கும் எதிரணியினருக்கும் ஊக்க மளிப்பதாக இருக்கும் என்று கூறுகின்றனர். ஆனால் இதனை எதிர்ப்பவர்கள், அவ்வாறு நிபந்தனை விதிப்பது ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை இலக்குகளை விட்டுக் கொடுப்பதாகும் என்றும், அன்னிய நிர்ப்பந்தத்தினால் உள்நாட்டு முறையில் ஓர் ஒழுங்கைக் கொண்டுவர முயற்சிப்பது முரண்பாடாக இருப்பதுடன் அதனால் பெயரளவில் அந்நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வது போன்ற பாசாங்குத்தனம்தான் தோன்றும் என்றும் வாதிடுகின்றனர். எவ்வா றாயினும், இவ்வாறான நிபந்தனைகளை விதிப்பதால் ஏற்படும் பயன், எந்தச் சூழ்நிலையில் எத்தன்மையான நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன என்பதைப் பொறுத்தே அமையும். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அதாவது ஒரு நாடு தனது குடிமக்களை மிகவும் மோசமாக நடத்தும்போது, வெளி நாடுகளிடம் இருந்து வரும் நெருக்குதல்களை இறையாண்மை என்ற கேடயத்தினால் இனிமேலும் தடுத்து நிறுத்த முடியாது. (55ஆவது வினாவைக் காண்க). மேலும், வெளி யிலிருந்து விடுக்கும் நெருக்குதல்களை, பரஸ்பரம் உதவி அளிக்கும் நாடுகளைக் காட்டிலும், அமைப்பு ரீதியான சர்வதேச அமைப்புகள் அல்லது வட்டார அமைப்புகள் வாயிலாக மிகச் சிறப்பாக செயல்படுத்த முடியும்.

மக்களாட்சியும் 'கட்டமைப்பினைச் சரி செய்தலும்'

முன்னேறிய நாடுகள் விதிக்கின்ற இம்மாதிரியான அரசியல் நிபந்தனைகளுக்கு இன்னொரு எதிர்ப்பு என்னவென்றால், அந்நிபந்தனைகள் கொள்கைகளைப் பற்றியதாக இல்லாமல், புதிதாகத் தலையெடுக்கும் மக்களாட்சிகளை மேலும் நலிவடையச் செய்கின்ற வகையில் ஒரு புறம் மக்களாட்சிக்கு ஆதரவு அளித்துக் கொண்டு, இன்னொரு புறம் கடனைத் திருப்பிச் செலுத்துதலில் கட்டமைப் பினைச் சரி செய்கின்ற பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றுகின்றன என்பதாகும். அன்னியக் கடனுக்கான வட்டியைத் திருப்பிச் செலுத்தியாக வேண்டும் என்று நிர்ப்பந்திப்பதன் மூலம், பொருளாதார உதவியால் விளைந்த பயனை ஒன்றுமில்லாமல் செய்துவிடலாம். இதனால் ஏழை மக்களுக்கான நலத் திட்டங்களுக்கும், மக்களாட்சி நெறிக்குப் பொதுமக்கள் ஆதரவு அளிக்கத் தூண்டுகின்ற திட்டங்களுக்கும் அரசாங்கம் செலவிடுகின்ற தொகை கண்மூடித் தனமாகக் குறைக்கப்பட்டு, தம்முடைய அரசு தனது பொருளாதார இலக்கினை எட்டும் கட்டுப்பாட்டினைத் தன் வசமே வைத்திருக்கிறது என்ற நம்பிக்கை மக்களிடையே வளராமல் போய்விடலாம்.

78. சர்வதேச அமைப்புகளையும் மக்களாட்சி நெறிக்கு உட்படுத்த முடியுமா?

இக்கால மக்களாட்சிகள் எதிர் கொள்கின்ற முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று, சுய நிர்ணயத் தன்மை வெகுவாகக் குறைந்து போனதுதான். ஏனெனில்,

ஒரு நாட்டு மக்களின் நலனைப் பேணுகின்ற பல விஷயங்கள் அந்நாட்டின் கட்டுப்பாட்டுக்கு வெளியே போய்விட்டன. தேசிய சுயாட்சித் தன்மை குறைந்து போனதன் பொருளாதாரப் பரிமாணங்கள் இதற்கு முந்ததைய வினாக்களில் (75,77) விவாதிக்கப்பட்டன. இந்தப் பிரச்சினை மேலும் நீண்டு, சுற்றுச் சூழல் சீர்கேடு, தேசிய வளங்கள் மீதான கட்டுப்பாடு, மக்களின் இயக்கம், காலங் காலமாக இருந்து வரும் இராணுவ அச்சுறுத்தல்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கி யுள்ளன. இன்றைய சூழலில் எந்த ஒரு நாடும் தனது எல்லைக்கு அப்பால் நடைபெறும் விஷயங்களில் எவ்விதமான பாதிப்பும் அடையாமல் இருக்க முடியாது.

பொறுப்புடைமையின் வடிவங்கள்

எனவே மக்களாட்சிக்கான உடனடிக் கேள்விகளில் முதலாவது, நாடுகளின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற உலகச் சக்திகளையும், நாடுகளைக் கடந்து செயல் படும் தனியார் அமைப்புகளையும் முறைப்படுத்தி, கட்டுப்படுத்துகின்ற வல்லமை வாய்ந்த சர்வதேச ஸ்தாபனங்களை எவ்வாறு உருவாக்குவது அல்லது ஒன்றி ணைப்பது என்பதாகும். இரண்டாவது, அந்த ஸ்தாபனங்களை அர்த்தமுள்ள மக்களாட்சிப் பொறுப்புக்கொண்டவையாய் எவ்வாறு ஆக்குவது என்பதாகும். அரசாங்கங்களுக்கு இடையேயான ஒப்பந்தங்கள், சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நீதிமன்றம், ஐக்கிய நாடுகள் மாமன்றம்போன்ற உலகளவிலானதும், வட்டார அளவிலானதுமான பல ஸ்தாபனங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. ஆனால் இந்த அமைப்புகள் யாவும் அரசாங்கங்களுக்கு இடையே யான பிரதிநிதித்துவமும் பொறுப்புடைமையும் கொண்ட குறுகலான போக்கிலேயே செயல்படுகின்றன; இந்த அமைப்புகள் அரசாங்கங்களுக்குச் செவிசாய்க்கின்றனவே ஒழிய, அரசுகளைக் கடந்த தேசிய அளவிலான மக்களின் எண்ண ஓட்டங்களுக்குச் செவிசாய்ப்பதில்லை; விட்டுக் கொடுத்துப் போகாத உறுப்பு நாடுகளைப் பணியவைக்கும் அதிகாரம் அவற்றுக்கு இல்லை; உறுப்பு நாடுகளின் கடந்த கால ஏகாதிபத்திய அந்தஸ்து அல்லது இக்கால அதிகார அளவு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனவேயன்றி அவற்றின் மக்கள் தொகையைக் கணக்கில் கொள்வதில்லை.

உலக நாடாளுமன்றம்

சர்வதேச அமைப்புகள் மக்களாட்சி நெறிப்படுத்தும் முயற்சியின் வேகம் மெத்தனமாகவே இருக்கக் கூடும். இம்முயற்சியானது, மனித உரிமை ஒப்பந் தங்கள் போன்றவற்றையும், ஐரோப்பியப் பாராளுமன்றம் போன்ற வட்டாரப் பாராளுமன்றங்களையும் மேலும் விரிவாக்கம் செய்வதாக அமையலாம். உலகளாவிய பிரச்சினைகளுக்குச் சர்வதேச அளவிலான தீர்வுகளை உடனடி யாகக் கண்டாக வேண்டுமென்ற அவசியத்தினால் உலகக் குடியுரிமைக் கருத்தும், செயலுறுத்தும் அதிகாரங்களும் கொண்ட உலக நாடாளுமன்றம் ஒன்று உருவாக நேரலாம். அத்தகைய உலக நாடாளுமன்றம் என்ற கருத்து கற்பனைக் கனவோ, கால மாற்றத்தின் காரணமான போலிப்புனைவோ அன்று.



மனம் தளர வேண்டாம். இன்னும் சிறப்பாகப் போட்டியிட மக்களாட்சி மீண்டும் வாய்ப்பு தருகிறது.

79. புதிய 'உலகளாவிய சமூகத்தில்' தேசிய அடையாளங்கள் காணாமல் போய்விடுமா?

அண்மைக்கால உலகமயமாக்கும் நடவடிக்கைகள் வட்டார அடையாளங்களையும் வரலாற்று ரீதியான பண்பாடுகளையும் மூழ்கடிக்க முனைகின்ற அதே வேளையில், உலக மக்கள் அனைவருடைய எதிர்காலத் தலைவிதியை மிக நெருக்கமாக ஒன்றிணைக்க முயலுவது முரண்பாடாகத் தோன்றுகிறது. ஆனால் தேசியப் பண்பாடுகளும் மரபுகளும் தமது தனித்தன்மையை இழந்து விடும் அபாயம் நிச்சயம் இல்லை என்றே கூறலாம். இன்னும் சொல்லப் போனால், நம்பிக்கையுடைய, மிகவும் தாராளப்போக்குடைய சர்வதேசியம் உருவாக வேண்டுமெனில் தேசியத் தனித்தன்மை தொடர்ந்து பேணப்படவேண்டுமென்பது ஒரு முன் நிபந்தனையாகவே இருக்கும். ஆனால் எதிர்காலத்தில் குடிமக்கள் தமது அரசியல் விசுவாசத்தைக் காட்டுவதற்குரிய ஒரே வழியான நாடு—அரசு என்ற ஏகபோக நிலைமாறி, பலவிதமான அரசியல் அமைப்புகள் தோன்றிவிடும் மக்கள் தம்மை ஒரு பகுதியின் உறுப்பினா என்றும் ஒரு நாட்டின் அல்லது பல நாடுகளின் கூட்டமைப்பின் உறுப்பினர் என்றும், ஒரு வட்டாரம் அல்லது துணைக் கண்டத்தின உறுப்பினர் என்றும் உலகத்தின் குடிமகன் என்றும் கூறிக்கொள்ளும் நிலை உருவாகும். அத்தகைய மாற்றத்தை மக்களாட்சிப் பற்றாளர்கள் நிச்சயம் வரவேற்க வேண்டும்; ஏனெனில், மக்களாட்சியின் உலகளாவிய வேட்கையும் அதன் கோட்பாடுகளும அதனைப் பின்பற்றுவோரை நாடு—அரசு என்ற எல்லையையும், ஒரு நிலையிலான அரசியல் விசுவாசம் என்ற எல்லையையும் கடந்து இனங்கண்டு கொள்கிறது.

80. சாதாரண மக்களுக்கு ஏற்புடையதாக மக்களாட்சியை எங்ஙனம் ஆக்க முடியும்?

மக்களாட்சி பற்றிய இந்த வினா-விடை நூலை, மிகமுக்கியமான இந்த வினாவுடன் முடிப்பது சாலவும் பொருத்தமுடையதாக இருக்கும். மக்களாட்சிமுறை சாதாரண மக்களின் அன்றாட வாழ்வுக்குச் சம்பந்தமில்லாததாகவும், அவர்களுடைய வாழ்க்கைச் சூழலுக்குப் பொருத்தமில்லாததாகவும் இருந்தால் மக்களாட்சியைப் பேணிக் காப்பதற்கு அவர்கள் எதுவும் செய்யமாட்டார்கள். மக்கள் வாக்களித்ததற்கு ஏற்ற விதத்தில் அவர்களுடைய விருப்பங்களை நிறைவேற்றக் கூடிய மாற்றங்களைச் செய்யும் மனவலிமை அரசியல்வாதிகளுக்கு இல்லை என்றால், தேர்தல் சமயத்தில் அளிக்கப்படும் வாக்குறுதிகளினால் மக்களின் வாழ்க்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. மக்கள், தம்மைப் பாதிக்கும் விஷயங்கள் குறித்து அச்சமின்றி ஒன்று சேர்ந்து போராடுவதற்குத் தேவையான சிவில் உரிமைகளும் அரசியல் உரிமைகளும் அளிக்கப்படாவிட்டாலும், எல்லாவற்றுக்கும் மேலாக, மக்கள் வேலை செய்யும் இடங்கள் போன்று அவர்களைச் சுற்றியுள்ள இடங்களில்கூட அவர்களுடைய நிலைமையை அவர்களால் மேம்படுத்த முடியாவிட்டாலும், மக்களாட்சி என்பது ஒன்றுமேயில்லாத காலிப்பானையாகவே இருக்கும். எனவே, மக்களாட்சி எந்த வடிவத்தில் இருந்தாலும், அதன் உள்ளடக்கத்தை வலுப்படுத்துவதும், முன்னர் எதேச்சாதிகார அமைப்பாக இருந்ததை மக்களாட்சியாக மாற்றுகின்ற முயற்சியானாலும்,

அல்லது நீண்டகாலமாகச் செயல்பட்டுவரும் மக்களாட்சி அமைப்புகளைப் புதுப்பித்து வேரூன்றச் செய்யும் முயற்சியானாலும், மக்களின் கட்டுப்பாடு மற்றும் அரசியல் சமத்துவம் என்ற இரண்டு கோட்பாடுகளையும் ஆற்றலுடையவையாக ஆக்குவதுதான் எங்ஙனுமுள்ள மக்களாட்சிப் பற்றாளர்களின் முன்னுள்ள பெரும் பணியாகும்.

கலைச் சொற்றொகுதி

Accountability	பொறுப்புடைமை; பதிலளிக்கும் பொறுப்பு
Adult franchise	வயதுற்றோர் வாக்குரிமை
Adulthood	வயதுற்ற நிலை
Alien	அன்னியர்
Alternative vote	மாற்றுவாக்கு
Candidate	வேட்பாளர்
Capitalism	முதலாளித்துவம்
Centralising tendency	மைய நோக்குப் போக்கு
Chief Executive	தலைமை நிர்வாகி
Citizenship	குடியுரிமை
Civil disobedience	சட்டமறுப்பு
Cold War	கெடுபிடிப்போர்
Constitution	அரசியலமைப்பு
Constitutional Monarchy	முடியாட்சி அரசியலமைப்பு
Constituency	தொகுதி
Conp.d'etat	இராணுவ அதிரடிப புரட்சி
Democracy	மக்களாட்சி, ஜனநாயகம்
Deposit	கட்டுத்தொகை
Differential Representation	வேறுபாடுடைய பிரதிநிதித்துவம்
Discreational power	தன்விருப்புரிமை அதிகாரம்
Election	தேர்தல்
Electoral Commission	தேர்தல் ஆணையம்
Electoral observers	தேர்தல் நோக்கர்கள்
Electorate	வாக்காளர்
Federalism	கூட்டரசு அமைப்பு
Frivolous Candidate	விளையாட்டாகப் போட்டியிடுபவர்

Freedom of association	சங்கம் அமைக்கும் உரிமை
Freedom of Expression	கருத்து வெளிப்பாட்டு உரிமை
Freedom of Information	தகவலறியும் உரிமை
Head of State	நாட்டின் தலைவர்
Human rights	மனித உரிமைகள்
International Bill	சர்வதேச வரைவு
International Covenant	சர்வதேச ஒப்பந்தம்
International standards	சர்வதேச அளவீடுகள்
Internationalism	சர்வதேசியம்
Judiciary	நீதித்துறை
Jurisprudence	சட்டவியல
Laissez-faire	தடையில்லா வாணிகம்
Local Government	உள்ளாட்சி அமைப்பு
Majority	பெரும்பாண்மை
Market Economy	சந்தைப் பொருளாதாரம்
Media	மக்கள் தொடர்பு சாதனங்கள்
Micro Cosmic	பெருந்தொகுதியின் ஓரங்கம்
Military Rule	இராணுவ ஆட்சி
Minority	சிறுபாண்மை
Mixed Member system	கலப்பு உறுப்பினர் முறை
Nationalism	தேசியம், தேசியவாதம்
Nomination	முன்மொழிவு
Open Government	வெளிப்படையான அரசாங்கம்
Opinion Polls	கருத்துக் கணிப்புத் தேர்தல்
Optional Protocol	விருப்புறுதி இசைவுக் குறிப்பு
Parliamentary System	நாடாளுமன்ற ஆட்சி முறை
Party	கட்சி
Party list system	கட்சிப் பட்டியல் முறை
Pluralism, Plurality system	பன்மை முறை
Presidential System	அதிபர் ஆட்சி முறை
Prime-Ministerial System	பிரதமர் ஆட்சி முறை
Primary Election	முதற்கட்டத் தேர்தல்
Political Equality	அரசியல் சமத்துவம்
Popular Control	பொதுமக்களின் கட்டுப்பாடு
Proportional Representation	விகிதாச்சார பிரதிநிதித்துவம்

Public Consultation	பொதுமக்களைக் கலந்தாலோசித்தல்
Public Relation Expenditure	மக்கள் தொடர்பு செலவு
Referendum	கருத்துக் கணிப்பு
Representative	மக்கள் பிரதிநிதி
Representative democracy	பிரதிநிதித்துவ மக்களாட்சி
Rule of Law	சட்டத்தின் ஆட்சி
Secret Ballot	ரகசிய வாக்கு
Seperation of Powers	அதிகாரப் பகுப்பு
Single Party Rule	ஒற்றைக் கட்சி ஆட்சி
Single Transferable Vote	ஒற்றை மாற்று வாக்கு
Veto Power	ரத்து அதிகாரம்
Voluntary Associations	தன்னார்வ அமைப்புகள்
Voter Registeration	வாக்காளர் பதிவு
Universal Declaration	உலகளாவிய பிரகடனம
Written Constitution	எழுதப்பட்ட அரசியலமைப்பு

மேலும் செய்திகளுக்கு

Arblaster, Anthony, 1994. *Democracy,* Buckingham : Open University Press, 2nd edition.

Bobbio, Norberto, 1987. *The Future of Democracy*, Cambridge : Polity Press.

Dahl, Robert, 1989. *Democracy and its Critics*, New Haven and London: Yale University Press.

Dunn, Johned.,1992. *Democracy:the Unfinished Journey*, Oxford: Oxford University Press.

Hadenius, Axel, 1992. *Democracy and Development*. Cambridge: Cambridge University Press.

Hannum, Hurst, 1990. *Autonomy, Sovereignty and Self-Determination,* Philadelphia: University of Pennsylvania Press.

Held, David ed., 1993. *Prospects for Democracy*, Cambridge : Polity Press

Huntington, Samuel, 1991. *The Third Wave : Democratization in the Late Twentieth Century*, Norman and London: University of Oklahoma Press.

Keane, John, 1991. *The Media and Democracy*, Cambridge: Polity Press

Lijphart, Arend, 1984. *Democracies*, New Haven and London: Yale University Press.

Nickel, James W., 1987. *Making Sense of Human Rights*, Berkeley: University of California Press.

Plattner, Marc and Diamond, Larry eds. 1992. *Capitalism, Social and Democracy* (Journal of Democracy special issue no.3.3), Baltimore: John Hopkins University Press.

Rodley, Nigel, 1987. *The Treatment of Prisoners under International Law*, Oxford:Oxford University Press.

Rosas, Allan and Helgesen, Jan eds, 1992. *Human Rights and Pluralist Democracy*, Dordrecht:Martinus Nijhoff

United Nations, 1988. *Human Rights Fact Sheet Series*

United Nations, 1993. *Human Rights: A Compilation of International Instruments*, two volumes.

Lasertypeset at Educational Communication Centre, New Delhi
and printed at Beauty Print, New Delhi-110 055